# பணம் காய்ச்சி மரம்



## பாலகுமாரன்

# பணம்
# காய்ச்சி
# மரம்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
55. வெங்கட் நாராயணா சாலை
தி. நகர், சென்னை-600 017

PANAM KAICHI MARAM
By BALAKUMARAN
First Edition : Nov 1995
முதற் பதிப்பு : நவம்பர் 1995
Second Edition: July 1999
இரண்டாம் பதிப்பு: ஜூலை, 1999
உரிமை : ஆசிரியருக்கு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

---

Pages : 184
Paper used : 11.6 Cream wove

THIRUMAGAL NILAYAM
T Nagar, Chennai-600 017
phone: 4342899, 4327696

விலை ரூ. 37-00

பணம் காய்ச்சி மரம்
தொட்டால் பூ மலரும்

கிடைக்குமிடம்

திருமகள் நிலையம்

55, வெங்கட்நாராயணா சாலை
தி. நகர், சென்னை-17
போன் : 4327696, 4342899 Fax : 91-044-4341559

---

அச்சிட்டோர் :

சரவணா அச்சகம்
சென்னை - 5.

**மீ. விஸ்வநாதன்**

3 D, அக்ஷயா
இராயல் ஸ்பிரிங்
41, முதல் அவின்யூ
இந்திரா நகர்
சென்னை - 600 020
10—11—1995
Res. (H 8/30)

அன்புமிக்க திரு. பாலகுமாரன் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நலம். எண்ணுவதும் நலமே.

தங்களின் சமீபத்திய நாவலான 'பணம் காய்ச்சி மரம்' படைப்பை (பல்சுவை நாவல், தீபாவளி மலர்'95) சில தினங்களுக்கு முன்பாகத்தான் வாங்கினேன். ஒரே மூச்சில் படித்தும் முடித்தேன். அது பற்றிய எனது எண்ணங்களைத் தங்களோடு சில வரிகளில் பகிர்ந்து கொள்ள விருப்பி இக்கடிதம் எழுதுகின்றேன். விமர்சகனாக அல்ல, வாசகனாகவே.

''இரவு புல்வெளியிலிருந்து ஒரு பூ பூத்தது போல அந்தக் குயிலின் குரல் மிருதுவாய் சந்தோஷமாய் ஒலித்தது'' என்று கதை துவங்குகிறது. இத்தொடக்கம் அநேகமாக எல்லா கதாசிரியர்களாலும் முடியக் கூடியது தான். என்றாலும் பாலகுமாரன் அதிலிருந்து தனியாகத் தெரிய வேண்டாமா? அதனால்தான் அக்குயிலின் 'குக்கூ' என்னும் குரல், ''நானார்...நானார்' என்று தன்னைத் தானே ஞான விசாரம் செய்து கொள்ளக் கூடிய யோகி களைப் போல இருந்தது என்று துவங்கி, ஆகாயத்தில் மிக உயரத்தில் வட்டமிடும் 'கருடன்' தன் சிறகுகளைச் சில பொழுதுகள் அடித்துக் கொண்டு, அதனால் பல

பொழுதுகள் நீண்ட தூரம் சுகமாக, கம்பீரமாகப் பயணம் செய்யுமே அதைப் போல கதை நெடுகிலும் தேவையான இடங்களில் எல்லாம் ஆன்மீக உணர்வுகளை இறைவனின் அருவ, உருவ வழிபாட்டுச் சிந்தனைகளை மிக அழகாக, அறிவு ஜீவித்தனத்தோடும், உணர்ச்சியோடும் சொல்லிக் கொண்டே செல்கிறீர்கள்.

கதை ஒன்றும் அப்படி அதிசயமான 'கரு'வைத் தாங்கி வரவில்லை. எப்போதும் போலவே அம்மா—அப்பா — மனைவி — மக்கள் — கூத்தியாள் இத்யாதிகள் தான் என்றாலும் உங்களைப் போன்ற தேர்ந்த ஒரு கலைஞனால்தான் அது ஒளி பெறுகின்றது.

இந்நாவலில் வரும் கணேசலிங்கமும், வடிவுக்கரசியும், நல்ல பாத்திரப் படைப்பு. சிறு வயது முதலே பெண் பித்தாக அலைந்து, கல்யாண வயது வந்ததும், பெரியோர்கள் விருப்பப்படி கல்யாணம் செய்து கொண்டு, தன் விருப்பப்படி வேறு ஒரு பெண்ணிடம் முறையில்லாத உறவு வைத்துக் கொண்ட ஒருவரின், மகன் கணேசலிங்கம் நல்ல குணவானாக, ஓவியனாக, மனைவியையே காதலிக்கும் பண்பாளனாக, பணத்தின் பின்னால் மூச்சிறைக்க அலையாத, மனிதாபிமானம் அதிகம் கொண்ட கலைஞனாக என்று ஒரு முரண்பட்ட உறவைச் சொல்லும் நேர்த்தி அருமையாக உள்ளது.

நடுத்தர வர்க்கத்தில் அன்றாடம் வெட்ட வெளிச்சமாக நடக்கும் நிகழ்ச்சிகளை, ஆசை கொள்ளல், அவமானப் படுதல், நகைகளை அடமானம் வைத்தல், உறவுகளுடன் சண்டை போடுதல் என்று எத்தனையோ குண வித்யாசங்கள் இருந்தாலும், அதற்குள்ளேயும் ஒரு கலைஞன் பிரகாசிப்பான். அவனிடமும் கூலைவாணி கூத்திடுவான் என்பதை அப்பளக் கடை நாராயண அய்யரின் வியாபார விளம்பரத்திற்காக கணேசலிங்கம்

வரைந்த 'ராஜ ராஜேஸ்வரி' படம் மூலம் பேசியிருப்பது கலைத்தன்மை கொண்டது.

அப்பளக் கடை நாராயண அய்யர் சில பொழுதுகளே வந்து சென்றாலும் நிறைவாக நிற்கிறார். அதுபோலவே வடிவுக்கரசியும். கண்ணசலிங்கமும், வடிவுக்கரசியும் கொள்ளும் தாம்பத்தியத்தையும் அளந்து அளந்துதான் எழுதியிருக்கிறீர்கள்.

மனதில் பதிந்த இன்னொரு கதாபாத்திரம், மயிலாப்பூர். ஆகா... எத்தனை அருமையான, சுவையான தகவல்களை நல்ல தமிழில் தந்துள்ளீர்கள். அதைப் படிக்கும் போது ஏதோ நாம் மயிலாப்பூரிலேயே வட்ட மடிப்பது போலத் தோன்றுகிறது.

உங்களின் பலம் உங்கள் எழுத்து. அதற்கு ஒரு தனி கம்பீரம் இருக்கத்தான் செய்கிறது. வாசகனை வசப் படுத்தி அவனோடு அன்பாகப் பேசும் எழுத்து. அந்தக் கபாலியையும், கற்பகாம்பாளையும் கூட அந்த உங்கள் எழுத்து ஏற்கெனவே சிறை பிடித்திருக்கிறது.

இக்கதையில் இடையிடையே வரும் ஆன்மிகச் சிந் தனைகளைப் படிக்கும் பொழுது எனக்கும், உங்களுக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு நினைவுக்கு வருகிறது.

எனக்குக் கதை எழுதும் வித்தை கற்றுத் தந்த குரு நீங்கள். உங்கள் படைப்புகளை ஆர்வத்தோடு, ஒவ் வொரு வார்த்தைக்கும் உள்ள அர்த்தத்தின் ஆழத்தை மனத்திரையில் திரைப்படம் போல ஒவ்வொருகாட்சியாக விரித்துப் பார்த்து ரசித்துப் படிக்கிற சீடன் நான். இதில் மிகையோ, முஸ்துதியோ அறவே கிடையாது.

நீங்கள் எனக்கு எப்படி, எப்போது குருவானீர்கள்? உங்களிடம் இருந்து குருகுலம் போலவும், ஏகலைவன் போலவும் எப்படி நான் வித்தையைக் கற்றேன்? அதைப்

பதிவு செய்ய எனக்கு விருப்பமும் உண்டு. கடமையும் கூட.

உங்களது 'முன்கதைச் சுருக்கம்' தான் எனக்கு பால பாடம். கதை எழுத, என்னை பிள்ளையார் சுழி போட வைத்த குரு. அப்போதுதான் உங்களுக்கு நான் ஏகலைவன் ஆனேன். உங்களுடைய அந்த சுயசரிதை அருமையானதொரு கட்டுரைத் தொகுப்பு. உண்மையைத் தேங்காய் உடைப்பது போல உடைத்து உங்கள் மனத்தின் வெள்ளையை வெளிச்சம் போட்டு வெளி உலகுக்குக் காட்டிய அரிச்சந்திர எழுத்து.

அதில் சொன்ன உங்களது சிறுகதை, நாவல் முயற்சிகள், வாழ்க்கையில் பட்ட இன்ப, துன்ப அவமானங்கள், பாராட்டுக்கள் எல்லாமே என்னை பாதித்தன. என்னையும் கதைகள் எழுதத் தூண்டின. முயற்சித்தேன். அதன் பலன் கிட்டும் போதுதான் உங்களோடு நானும் சிருங்கேரி, கொல்லூர், உடுப்பி, தர்மஸ்தலா என்று ஐந்தாறு நாட்கள் பயணம் செய்யும் நல்ல வாய்ப்பும் கிட்டியது.

ரயில் பயணத்தின் போது இரவு எட்டு மணியளவில், ''விஸ்வநாதா... இப்போது TVயில் 'தாயுமானவன்' தொடரின் கடைசிக் காட்சி நடந்து கொண்டிருக்கும்'' என்று சொன்னீர்கள். அது நீங்கள் இயக்கிய தொலைக் காட்சித் தொடர். பேச்சு அது பற்றித் தொடர, எனக்குக் கதை, நாவலை எப்படி அணுக வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தீர்கள். இடையில், ''விஸ்வ நாதா... உனக்கு எழுத வருகிறது... தொடர்ந்து நிறைய எழுது...நல்ல கதைகளை உன்னால் எழுத முடியும்'' என்று தன்னம்பிக்கை தந்தீர்கள்.

'அகலிகை', 'சிங்க வால் குரங்கு' போன்ற சிறுகதைகளைச் சொல்லி, அதன் சிறுகதைப் பிடிமானங்களை எனக்குக் காட்டி, இந்த 'அகலிகை' இலக்கியச் சிந்தனை

பரிசு வாங்கிய கதை என்றும் மகிழ்ந்தீர்கள். நீ கதைய எங்கேயும் தேடாதே...உனக்குள்ளேயே தேடு. உன்னோட குடும்பத்துல தேடு... நண்பர்கள் கிட்டத் தேடு... ஒன்னோட சமூகத்துல் தேடு...'' என்று ஆழமாக மனதில் பதிய வைத்தீர்கள்.

காலையில் மங்களூர் சென்று விடுதியில் குளித்து விட்டு, சிற்றுண்டி முடித்து சிருங்கேரி செல்லும் பஸ்ஸில், ''ஆகா...என்ன ஆழகான இடம்...பச்சப் பசேல்ன்னு இருக்கு...இங்குள்ள 'மனுஷர்'லாம் எத்தனை சாதுவா இருக்கா... இதெல்லாம் கதையாக்கு'' என்று தூண்டினீர்கள்.

மதியம் இரண்டு மணிக்கு சிருங்கேரி நரசிம்மவனம் சென்று குரு ஸ்ரீசாரதா பீடாதிபதி ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகளை இருவரும் தரிசித்து வணங்கிய பொழுது, ''நீங்கதானே பெரிய புராணம் எழுதறேள்...அம்மன் தரிசனத்துல உங்க போட்டோவைப் பார்த்தேன்... ஓகோ... நீங்கதான் பாலகுமாரனா...நன்னா எழுதறேள்...''என்று வாஞ்சையோடு விசாரித்த பொழுது, உங்களது புஸ்தகங்களை நீங்கள் அவரிடம் தந்து ஆசி பெற்றுக் கொண்டு விடை பெற்று நரசிம்ம வனத்தின் காட்டுப் பகுதியில் இருவரும் நடந்து சென்றோம். சிறிது தூரம் சென்றதும் அங்கே உள்ள ஒரு கல்லின்மீது நீங்கள் அமர்ந்து கொண்டு ''விஸ்வநாதா...இப்போது எங்கிட்ட ஒன்னும் பேசாதே... என்னைத் தனியா விட்டுடு...'' என்று சொல்லித் தொலைவில் உள்ள பெரும் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருக்கும் ஏராளமான பசுமாடு, கன்றுக் குட்டிகளை ரசித்து, ஆகாயம் பார்த்தபடி ஏதோ சிந்தனையில் மூழ்கி விட்டீர்கள். அந்த ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடு தான் ''திருமூலர்'' என்னும் சிறுகதையாக அம்மன் தரிசனத்தில் வந்திருக்கக் கூடும்.

அன்று மாலை நான்கு மணிக்கு 'கிக்கா' என்னும் பக்கத்து மலைக் கிராமத்திலுள்ள ரிஷிய சிருங்கர் கோவிலுக்குச் சென்றோம். செல்லும் வழியில் ஏராளமான குழந்தைகள் பிள்ளையார் ஊர்வலம் கொண்டு வந்தனர். அழகான செம்பருத்தி, கனகாம்பரம் மற்றும் சில அழகான காட்டுப் பூக்களை பிள்ளையாருக்குச் சூட்டி குதூகலமாக வந்து கொண்டிருந்த அழகைப் பார்த்து, ''இதெல்லாம் கதை பண்ணணும்...நல்ல சிந்தனை வரும்'' என்று சொன்னது இன்னும் என் செவிகளில் இருக்கின்றது.

மாலை ஆறரை மணிக்கு சிருங்கேரி ஸ்ரீசாரதாம்பாள் சந்நிதியில் இருவரும் நின்று கொண்டிருந்தோம். தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. அதையே கண் கொட்டாமலும், கண் மூடியும் தியானம் செய்த நீங்கள், இதேமாதிரி தீபாராதனை எல்லாம் பார்த்து ரொம்ப நாளாச்சு...சின்ன வயசுல எங்க கிராமத்துல பார்த்தது தான் இப்ப நினைவுக்கு வரது'' என்று பரவசப்பட்டீர்கள்.

இரவு பதினோரு மணி இருக்கும். நரசிம்ம வனத்தையும், ஸ்ரீ சாரதாம்பாள் கோவிலையும் இணைக்கும் பாலத்தின் மீது நின்று கொண்டு, நிசப்தமான அந்த காட்டு இரவில், பாலத்தின் கீழே ஏதோ மந்திரத்தை முணுமுணுப்பது போல, ஓடிக் கொண்டிருக்கும் 'துங்கா' நதியை ரசித்துக் கொண்டிருந்தோம்.

''விஸ்வநாதா...இங்கதான் என் எழுத்தாளர் ஆதவன் அநியாயமா செத்துப் போனார்...இந்தத் தண்ணில தான்னு சொன்னா...... அவருக்கும் ஒங்க கல்லிடைக் குறிச்சிதான்......நல்ல கதைகள் எழுதியிருக்கார்...'' என்று நண்பனுக்கு அஞ்சலி செலுத்தினீர்கள்.

மறு நாள் உடுப்பி. கிருஷ்ண தரிசனம்.

காலை 9 மணிக்கு பஸ்ஸில் 'கொல்லூர்' பயணம். அருமையான சாலை. வேகமாக பஸ் சென்று கொண்டிருக்க, நீங்கள் 'பட்டினத்தார்' பாடல் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு, வாய் விட்டுப் பாடி, அதற்கு அர்த்தமும் சொல்லி வந்தீர்கள். சரியாக மணி ஒன்று. கொல்லூர் வந்து சேர்ந்தோம். அவசர அவசரமாக 'மூகாம்பிகை' தேடி ஓடினோம். பஸ் கண்டக்டரின் தயவால் கதவு தாழிடப்படாமல் நமக்காக 'மூகாம்பிகை தரிசனம் தந்தாள். சிறிது நேரம் அவள் சந்நிதியில் கண்மூடி நின்றோம். 'ரோஜப் பூ— சிகப்புப் பூ' பிரசாதமாகக் கிடைத்தது. எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. உங்களுக்கோ அது போதவில்லை. ''விஸ்வநாதா...மறுபடியும் சாய்ந்தரம் நாலு மணிக்கு அம்பாள தரிசனம் பண்ணிட்டுப் போலாம்... எனக்கு இன்னம் பாக்கணும் போல இருக்கு...'' என்று என்னை மதியச் சாப்பாட்டிற்கு அழைத்துச் சென்றீர்கள். நான்கு மணி வரை பொழுது செல்ல வேண்டாமான மெதுவாகக் கடைத் தெருவில் நடக்கத் துவங்கினோம். கடைத் தெருவின் இடது பக்கம் ஒரு சின்ன வீடு. கேரளக் குடியிருப்புப் போல இருக்கும். அதன் வாசலில் ஒரு பெரியவர் தாடியும், நெற்றி, உடம்பு முழுவதும் விபூதியுமாக இருந்தார். ''வாங்கோ... உள்ள வாங்கோ''... என்று எங்களை அழைத்து அங்குள்ள சிவலிங்கம், பூஜைப் பொருட்களைக் காட்டினார். நான் அவரிடம், ''சுவாமி...இதென்ன ஆசிரமம் மாதிரியா..'' என்று கேட்ட பொழுது அவர், ''என்ன... ஆஸ்ரமம் மாதிரியா... ஆஸ்ரமமேதான்... சந்தேகமே வேண்டாம்''ன்னு சிரித்தார். வெளியில் வந்து நீங்களும், ''என்ன விஸ்வநாதா...இப்படிக் கேட்டுட்டே'' என்று சிரித்துக் கொண்டே கேட்டீர்கள்.

மாலை மீண்டும் மூகாம்பிகை தரிசனம் முடித்து பஸ் பயணம் உடுப்பியை நோக்கி. வழியில் நல்ல மழை பெய்யத் துவங்கி சக்கைபோடு போட்டுவிட்டது. செம்

மண் கலந்து, தண்ணீர் சாலையின் இரு பக்கங்களிலும் 'ஓ' வெனப் பாய்ந்து போக, நமது பஸ் மிக வேகமாகத் தான் சென்று கொண்டிருந்தது. நீங்கள், "ஆகா—என்ன அழகான மழை... எத்தன செழிப்பு..." என்று சொல்லிக் கொண்டே வந்து, "விஸ்வநாதா... எனக்கு ஒரு பிடி கிடைச்சிருக்கு...நல்ல கதை ஒண்ணு கிடைச்சிருக்கு"ன்னு சிந்திக்கத் துவங்கி விட்டீர்கள். நானும் பஸ்ஸின் சன்னல் வழியாக மழை பார்க்கத் துவங்க விட்டேன். அதுதான். "செம்மை" யாக ஆனந்த விகடன் தீபாவளி மலர் 1991 இதழில் நல்ல சிறு கதையாக வெளியானது.

இரவில் தர்மஸ்தலா கோவிலுக்குள் நாம் நுழையும் பொழுதே, "அங்க போங்கோ..." என்று கன்னடம் கலந்த தமிழில் யாரோ அன்பர், நமக்கு சாப்பாட்டுக்குப் போகும் வழியைக் காட்ட, மிகுந்த பசியோடு அந்த பிரும்மாண்ட அறைக்குள்ளே நுழைந்தோம். மிகப் பெரிய பந்தி முடிந்து எல்லோரும் கை கழுவச் சென்று கொண்டிருந்தார்கள். நீங்களும், நானும்தான் அன்று கடைசியாக அந்த சிவப்பிரசாதத்தை உண்டோம். "இது உண்மையிலேயே தர்மஸ்தலா தான்யா... எத்தனை கூட்டம்... என்ன மாதிரி அன்னதானம்... எப்படி வஞ்சக மில்லாமல் சாப்பாடு போடுகிறார்கள்" என்று வியந் தீர்கள். அன்னமயம்.

இரவு விடுதி. அசதியில் தூக்கம்.

மறு நாள் காலை பங்களூர் பயணம். வரும் வழி நெடுக உங்களின் கடந்த கால வாழ்கையைப் பற்றியும் சிம்சனில் வேலை பார்த்த அனுபவம் பற்றியும், கதை எழுதிய விதங்கள், சுஜாதா, சாவி பற்றியும், சுமார் ஐந்து மணி நேரமாவது உங்களது எண்ணங்களை என்னோடு பகிர்ந்து கொண்டிருப்பீர்கள். அது எனக்குப் பாடம். திடீரென, விஸ்வநாதா நீயும் எழுது..."

நெறய எழுது... ஒன்னோட கதை எல்லாரும் படிக்கணும். பல பெரிய பத்திரிகைல வரணும்... சரி இப்ப ஒரு கதை சிந்தனை பண்ணு பாக்கலாம்'' என்று என்னை நீங்கள் பார்த்த போது சிறிது அவகாசம் எடுத்துக் கொண்டு 'ஒன்றைக் கண்' என்னும் கதைக் கரு ஒன்று சொன்னேன். ''இது நாவலுக்கான சப்ஜட்... சிறு கதையா வரத விட இத நீ நாவலா சிந்தனை பண்ணுன்னு'' உற்சாகப்படுத்தினீர்கள்.

பங்களூர் வந்து ஒரு விடுதியில் தங்கி, மறுநாள் 'குழந்தை ஏசு' கோவிலுக்குச் சென்றோம். மதியம் பங்களூர் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் உள்ள 'தர்கா'வுக்கும் சென்று 'ஊதுவத்தி' தந்து வணங்கி வந்தோம். மீண்டும் மாலை விடுதியில் ஓய்வெடுத்த பின் நீங்கள், ''விஸ்வநாதா உனக்கு தியானம், சொல்லித்தறேன் என்றீர்கள்... ஏதோ ஓர் ஒலியை மீண்டும் மீண்டும் செவிகளில் கேட்பது போலச் செய்து கொண்டே இருந்தீர்கள். நான் கண் மூடி இருந்தேன்.'' பிறகு நீங்கள் ''நீ யாரிடமாவது கட்டாயம் தியானம் கற்றுக் கொள்... அது நல்லது'' என்று வழி காட்டினீர்கள். திருத்த வேண்டியதைத் திருத்தி, தவிர்க்க வேண்டியதைத் தவிர்க்கச் சொன்னீர்கள்.

உங்களோடு நான் மேற்கொண்ட அந்தப் பயணம் எனக்கு ஒரு திருப்புமுனை என்றே மகிழ்ந்தேன். மறுநாள் காலை சென்னை சென்டிரல் ரயில் நிலையம் வந்த பொழுது நெஞ்சம் சுகமாக இருந்தது. அன்பு அடைத்துக் கொண்டிருந்தது. ஆன்மிக மழையின் நினைப்பில் நனைந்தபடியே உங்களை உங்கள் இல்லத்தில் இறக்கி விட்டு, என் திசையை நோக்கி நான் பயணமானேன்.

அன்று தொடர்ந்த உங்களின் அன்பு, இன்றும் என்னுடனும் எங்கள் குடும்பத்துடனும் ஆல்போல்

தழைத்து, அருகு போல் வேரோடியும் கொண்டிருக்கிறது. எல்லாமே இறைவன் அருள்.

உங்களின் 'பணம் காய்ச்சி மரம்' நாவலில் வீசிய ஆன்மிகத் தென்றல் என்னை எங்கோ பழைய நினைவுகளில் இழுத்துச் சென்றதில், சில வரிகள் சொல்ல வந்த நான், சில பக்கங்கள் பேசி விட்டேன். பிழையானால் மன்னிக்கவும்.

உங்கள் அம்மா, மனைவியர்களுக்கு எங்கள் நமஸ்காரங்களையும், குழந்தைகள் கௌரி, சூர்யா (சாஸ்திரிக்கு)வுக்கு எங்கள் நல்லாசிகளையும் தெரிவிக்கவும்.

இப்படிக்குத் தங்கள்,
அன்புள்ள

**மீ. விஸ்வநாதன்**

# பணம் காய்ச்சி மரம்

## 1

இரவு புல்வெளியிலிருந்து ஒரு பூ பூத்தது போல அந்த குயிலின் குரல் மிருதுவாய் சந்தோஷமாய் ஒலித்தது. இரண்டு ஸ்வரங்களை அருகே அருகே வைத்து இழைத்து வெளியிட்டதைப் போல ஒரே குரலாய் மேலும் கீழுமாய் குயில் கூவிற்று. நானார் நானார் என்பது போல அந்த கூவும் சப்தம் கேட்டது.

விடிகாலை மூணரை மணிக்கு ஏதோ ஒரு குயில் எங்கோ ஒரு மரத்திலிருந்தபடி நான் யார் என்ற தத்துவ விசாரணையை துவக்கி விடும். இந்த கூவல் கேட்டால் மூணரை மணி என்று அர்த்தம். இந்த கேள்விக்கு உடனே பதில் கிடைத்துவிடாது.

ஒரு அரை மணி, முக்கால் மணி போன பிறகு, நாலு, நாலேகாலுக்கு ஏகப்பட்ட பறவைகள் ஏகப்பட்ட பதில்களை அளிக்கும். வெவ்வேறு குரலில், வெவ்வேறு ஒலி அளவில் இந்த பதில்கள் இருக்கும். ஆனால் மறுபடியும் மறுநாள் காலை மூணரை மணிக்கு நானார், நானார் என்கிற கேள்வி கேட்கப்படும். ஏதோ ஒரு குயில் எங்கோ ஒரு மரக்கிளையிலிருந்தபடி இடைவிடாது இந்த அடிப்படைக் கேள்வியை எழுப்பும். நான் யார் என்று கேள்வி

மட்டும்தான் உண்டு. இதற்கு பதில் கிடையாது. ஏனெனில் இதற்கு பதில் தெரிந்தவர்கள் சொல்ல மாட்டார்கள். நான் யார் என்று தெரிந்ததும் பேச்சு நின்று விடுகிறது.

கணேசலிங்கம் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தார். வயிறு மீது படர்ந்திருந்த மனைவியின் கையை மெள்ள எடுத்து படுக்கையில் வைத்தார்..

நான் யார் என்று கூவும் குயிலை பார்க்க வேண்டும் போல் ஆசையிருந்தது. வெளியே இருளோ என்று இருப்பது ஜன்னல் வழியே தெரிந்தாலும், கதவு திறந்து வராண்டாவைத் தாண்டி மேல் மாடி முற்றத்திற்கு வந்தார். தெருவின் எதிர் பக்கத்திலிருந்து சோடியம் விளக்கு ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது. அடுத்த வீட்டு மாமரக் கிளையிலிருந்துதான் குயில் கூவும் சத்தம் வந்தது. இருட்டோடு இருட்டாயிருந்த அந்த மாமரத்துக்குள் அந்த கருப்புக்குயில் எங்கோ உட்கார்ந்துள்ளது. ஆனால் கண்ணுக்குத் தெரியவில்லை. சப்தம் மட்டும் வந்தது. யார் அந்தக் குயில். ஏன் இந்தக் கேள்வி. எந்த ஜென்மத்திலோ பூர்த்தி பெறாத ஒரு தபசை இப்படி அதிகாலையில் கேள்வி கேட்டு பூர்த்தி செய்துவிடுகிறதா. அந்த குயிலுக்குள் இருப்பது யார். ரிஷியா, போன ஜென்மத்தில் இதே மைலாப்பூரில் பிறந்து, வளர்ந்து, இறந்த ஒரு சிவநெறி செல்வரா. ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாமரம் இருக்கின்ற இடத்திலேயே வீடு கட்டி குடியும், குடித்தனமுமாய் இந்த சிவநெறிச் செல்வர் வாழ்ந்திருப்பாரோ, தினமும் கோவிலுக்குப் போய் பூஜைகள் செய்து, பிறகு பூஜைகள் அலுத்துப் போய் உண்மையைத் தேடி அலைந்து உண்மையைத் தேட அலைய வேண்டியதில்லை என்ற முடிவுக்கு வந்து இந்த மைலாப்பூரிலேயே தகனமாயிருப்பாரோ.

அப்போது நூறு வருடங்களுக்கு முன்பு மைலாப்பூர் கோவில் இருந்திருக்குமா. கோவில் இருந்திருக்கும். கோபுரம் இருந்திருக்காது. இப்போது தெரிகிற கோபுரமும், அதன் மீது எரியும் மெர்க்குரி விளக்கும் அப்போது இருந்திருக்காது. இப்போது இருக்கிற வீடுகளே மாட வீதியில் அப்போதும் இருந்திருக்கும். குளம் இருந்திருக்கும். குளத்தில் தளும்பத் தளும்ப, நீர் நிறைந்திருக்கும். ஏகப்பட்ட தாமரைகள் பூத்திருக்கும். நீராழி மண்டபத்தின் மேல் தளம் வரை குளத்து நீர் அலையடித்துக் கொண்டிருக்கும்.

இப்போது குளத்தைப் பார்த்தால் ஐயோவென்றிருக்கிறது. இந்த குளத்தில் பல பெண்கள் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் இப்போது யாரும் நம்ப மாட்டார்கள். குளம் கட்டாந்தரையாய் கிடக்கிறது, திட்டு திட்டாய் புற்கள் முளைத்துள்ளன. பையன்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

குளம் மாறிப்போய்விட்டது. அதைப் போலத்தான் இந்த தெருவும் மெல்ல மாறிக் கொண்டு வருகிறது. வீட்டின் வாசல்படிக்கு இரண்டு பக்கமும் மழ, மழவென்று திண்ணைகள் வைத்துக் கட்டப்பட்ட வீட்டை இடித்து தெருவோடு சுவர் எழுப்பி விடுகிறார்கள். மரக் கதவுக்கு முன்னால் இரும்பு கம்பி கதவு போடுகிறார்கள்.

மரக்கதவு திறந்து வந்தவரை யார் என்று விசாரித்து சந்தேகம் தீர்ந்த பின்னரே உள்ளே அனுமதிக்கிறார்கள்.

நூறு வருடங்களுக்கு முன்பு ஜனங்களுக்கு ஜனங்கள் மீது இவ்வளவு பயம் இருந்திருக்காது. யார் வேண்டுமானாலும், யார் வீட்டு திண்ணையில் வேண்டுமானாலும் படுத்துக் கொள்ளலாம். மழைக்கு ஒதுங்கலாம். வெய்யிலுக்கு உட்காரலாம். கேட்டால் நீர் தருவார்கள். கைவசம் இருந்தால் மோர் தருவார்கள். ஆடல் பாடல்

எதற்கும் காசு வாங்க மாட்டார்கள். ஒரு கொட்டகைக் குள் ஆடினால் அல்லவா காசு வசூலிப்பது. மூடின கதவுக்குள் பாடினால் அல்லவா டிக்கட் போடுவது, பாட்டு மண்டபத்தில் நடக்கும். ஆட்டம் தெருவில் நடக்கும்.

திருவிழாவின் போது இரவு நேரம் சாமி ஊர்வல மாய் வரும்போது தெரு முனையில் சதிர்கச்சேரி நடக்கும். குஞ்சலம் வைத்துக் கட்டி ரவிக்கை நுனியை முடிச்சுப் போட்டு தொப்புளுக்கு கீழ் விசிறி மடிப்போடு புடவை யைக் கட்டி, மார்பின் குறுக்கே பூணூல் போல் தாவணி கட்டி புல்லாக்கு, பேசரி, நெத்திச் சுட்டி, சந்திர பிரவை சூரிய பிரவை, அட்டிகை, காசு மலை, வங்கி, வளையல், ஒட்டியாணம் என்று அணிந்து தீப்பந்த வெளிச்சத்தில் கண்ணாடிகள் பதித்த விளக்குகளை தாழவிட்டு அலங் காரமான தெருவில் கம்பளம் விரித்து தாசிப்பெண்கள் நடனமாடுவார்கள்.

அவர்கள் கருப்பாய் ஆனால் மிக அழகாய் இருந் தார்கள். அவர்களுக்கு ஆங்கிலேய சிப்பாய்களுடன் தொடர்பு ஏற்பட்டு அவர்களில் பலருக்கு பால்வினை நோயும் இருந்தது என்று ஆனந்தரங்கம் பிள்ளையின் டைரி சொல்லுகிறது. அந்த டைரிக்கு அதிக வயதிருக் கும். அந்த காலத்து ஜனங்களிடம் காசு இல்லை. ஆனால் அமைதியிருந்தது. ஆசைகள் இல்லை. அதனால் அன்பு இருந்தது. ஆசைகள் அதிகமாக அதிகமாக அன்பு குறைந்து விடுகிறது. ஆசைகள் நகைகளாய் பாண்டங் களாய், உடுப்புகளாய் பூர்த்தியாக அதை வைத்துக் கொள்ள இடம் தேவைப்படுகிறது. அந்த இடத்தின் வாசலுக்கு இரும்புக் கதவு தேவைப்படுகிறது. பெரிய பூட்டு அவசியமாகிறது.

இப்பொழுது தாசிகள் இல்லை. திண்ணைகள் இருந் தாலும் தூங்க அனுமதிப்பதில்லை. எல்லாம் ரகசியமாக நடைபெறுகிறது.

இப்படி சதிராடியதை எல்லாம் பார்க்காமல் யாரோ தனக்குள் தன்னைத் தேடிக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆட்டத்தை பார்த்த பாவமோ, பாட்டைக் கேட்ட சாபமோ விடியக்காலைக் குயிலாய் மைலாப்பூரில் நானார் என்று கூவிக் கொண்டிருக்கிறார்கள்!

சிவநெறிச் செல்வர் குயிலாக மாறினால் தாசி என்ன வாய் பிறந்திருப்பாள். மண்டபத்தில் பாட்டு பாடியவன் என்னவாக பிறந்திருப்பான்.

ஒருவன் என்ன தாபத்தோடு இறக்கிறானோ அதே விதமாக பிறக்கிறான் என்று கருட புராணம் சொல்கிறது.

தாசி என்ன தாபத்தோடு பிறந்திருப்பாள். ஒரு குடும்பப் பெண்ணாக மாற வேண்டும் என்கிற எண்ணம் அவளுக்கு இருந்திருக்குமா. பாட்டு பாடுபவன் என்னவாகப் பிறந்திருப்பான்.

அங்கே மாட வீதியில் சதிர்கச்சேரி நடக்கிறது. குண்டாக இருக்கும் அந்த தாசி குலுங்க, குலுங்க நடனமாடிக் கொண்டிருப்பாள். எல்லோரையும் ஓரக் கண்ணால் பார்த்தபடியே சந்தனமும், ஜவ்வாதும் வாசனை வீச முழங்கையால் பல ஆண்களின் மார்பை உரசிய வண்ணம் சுற்றி சுற்றி வந்து நடனமாடிக் கொண்டிருப்பாள். "தளாங்கு திமித்தோம்" என்று வில்லாக வளைந்து நின்றிருப்பாள். நான் இங்கே பைத்தியம் போல நிதி சால சுகமா என்று பாடிக்கொண்டிருக்கிறேன்.

பத்து பவுன் நகை போட்டு எந்தப் பணக்காரனாவது அந்த தாசியை தன் உல்லாச மாளிகைக்கு கூட்டிக் கொண்டுபோய் விடுவான். நான் இங்கு அரை பவுன் கங்கணத்துக்கு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறேன் என்று கோவில் தாசியை நினைத்துக்கொண்டிருக்க கூடும்.

அடுத்த பிறவியில் குடும்ப பெண்ணாய் வாழ ஆசைப் பட்ட தாசிக்கு புருஷனாய் பிறந்திருக்கலாம்.

உனக்கு பாட்டே வராது போ என்கிற சாபமும், அந்த குண்டான தாசியை வண்ணமாய் அனுபவி என்கிற வரமும் வாங்கி வந்திருக்கிறான்.

''அங்கே என்ன பண்றீங்க'' பின் பக்கம் குரல் கேட்டது. கணேசலிங்கம் சட்டென்று திரும்பினார்.

அங்கே குண்டான தாசி நின்றிருந்தாள். அது தாசியில்லை மனைவி. வடிவுக்கரசி. வீட்டு வெளிச்சத்தை மறைத்துக் கொண்டு நிழலாய் தலை கலைந்து உடை கலைந்து நின்றிருந்தாள்.

இரண்டு கைகளையும் தூக்கி நிலைப்படியில் வைத்து தளர்த்தி விடப்பட்ட ரவிக்கையும், தாழ்த்தி விடப்பட்ட புடவையும், முடியாது பிரிந்து கிடக்கும் கேசமுமாய், ஒரு கால் தாழ்த்தி, ஒரு கால் சற்று உயர்த்தி, புருஷன்தானே என்று லஜ்ஜையின்றி நின்று கொண்டிருந்தாள்.

''அட அப்ப நான் நினைச்சது ரைட்டு. மைலாப்பூர்ல பிறந்து வாழ்ந்து செத்துப் போனவங்க மைலாப்பூர்ல தான் பிறக்கிறாங்க. வேற எங்கேயும் அவங்களால பிறக்க முடியாது. அப்ப நீதான் அந்த தாசி. நான் தானா அந்தப் பாடகன். காலங்காலையில் தான் தோணினது சரியாத்தான் இருக்கு. எனக்கு சுட்டுப் போட்டாலும் பாட்டு வராதே. கோயில் உட்கார்ந்து தாசியை நினைச் சேன்னு சாபமா கிடைச்சதாச்சே''

விடிகாத்தாலை வேற எந்தக் காரணமுமில்லாப சும் மாவா இப்படி ஒரு நினைப்பு தோணும். இதுல உண்மை யில்லாமலா இருக்கும். போன ஜென்மத்திலும் நான் மைலாப்பூர்தானா. அப்படியானால் அப்போது என் பெயர் என்ன. என் வீடு எங்கே.

"தா உங்களைத் தானே. இன்னா பண்றீங்க அங்க." வடிவுக்கரசி புருஷனை நோக்கி அதட்டினாள்.

"குளிர் எலும்பு வரைக்கும் அடிக்குது. தலையில துண்டு கூட இல்லாம நிக்கறீங்களே உள்ள வாங்க."

"குயில் ஒன்னு தினம் கூவுது. மூன்றரை மணிக்கு சொல்லி வைச்சா மாதிரி யாரையோ கூப்புடுது. அது இன்னான்னு பாக்க எழுந்து வந்தேன்."

"யாரோ யாரையோ கூப்பிட்டுனு போறாங்க உங்களுக்கு இன்னா, அப்படியே குயில் கூப்பிடறதா இருந்தாலும் ஜன்னல் பக்கம் வந்து உங்க பேர்சொல்லிக் கூப்பிடும். உள்ளே வாங்க." அவள் வெளியே அவர் கை பிடித்து இழுத்துப் போனாள். உள்ளே போனதும் குளிர் தாங்காமல் உடம்பை குலுக்கி உதறிக்கொண்டாள். கதவைச் சாத்தி தாழிட்டு அவரோடு ஒட்டிக் கொண்டாள்.

"என்னை கட்டிக்குங்க" என்று கட்டளையிட்டாள். அவர் கட்டிக் கொள்ள, அவள் இறுக்கி கொண்டாள்.

அவள் தாசிதான் என்று கணேசலிங்கம் முழுவதுமாய் நம்பினார்.

எந்த வருஷத்து ஆசையை இப்போது தீர்த்துக் கொள்கிறோம். எந்த நேரத்து இச்சையை இப்போது தணித்துக் கொள்கிறோம். எதனால் காலையில் அவ் விதம் தோன்றியது.

ஒரு கற்பனை போல் அல்லாமல் கனவு போலும் அல் லாமல் விழித்த நிலையில் ஏதோ ஞாபகம் வந்தது போல் ஏனிந்த எண்ணம் தோன்றியது.

இன்று, நேற்று பிறந்தவனல்ல நீ என்று யாரோ ஞாபகப்படுத்தி விட்டார்கள். மைலாப்பூரில் என் வீடு எது. என் வாழ்க்கை எவ்விதம். அன்று கபாலீஸ்வரர் சன்னதியில் நான் என்ன பாடினேன். என்னமாய் வாழ்ந்

தேன், மனைவியைக் கட்டி கொண்ட போதும் மனசுக்குள் கேள்விகள் எழுந்தன.

"நாப்பதஞ்சு வயசாவுது. வெய்யில், காத்து, மழை பனி இதுக்கெல்லாம் ஜாக்கிரதையா இருக்க வேணாமா. எல்லாம் தாங்குற இளம் வயசா, உடம்பு உரம் குறைஞ்சு கிட்டே வருதுல்லே, எங்கடா ஆளைக் காணாமேன்னு திகைச்சுப் போயிட்டேன்." அவள் அவரைப் படுக்கையில் சாய்த்து அவரோடு ஒண்டிக் கொண்டாள்.

விடியல் வேளை என்பது யோக சாதனைகளுக்கு மாத்திரம் உண்டான நேரமல்ல. போகத்திற்கும் விடியல் நேரமே சிறந்த நேரம். சற்று மத்திம வயதை கடந்த பிறகு விடியல்தான் காம விளையாட்டுகளுக்கு சௌகரிய மான நேரம்.

பகல் முழுவதும் உழைத்த களைப்பில் வீட்டிற்கு வந்து அலுப்புதீர குளித்து, குளித்த வேகத்திலேயே உணவு முடித்து சற்று நேரம் மனைவி மக்களோடு பேசிக் கொண்டிருந்து விட்டு மறுநாள் என்ன வேலை செய்ய வேண்டும் என்று யோசித்தபடியே இரவு ஒன்பது மணிக் குள்ளாகவே தூங்கிவிட வேண்டும்.

உலகத்தில் யார் என்ன சத்தம் போட்டாலும் காதில் விழாத அளவுக்கு ஆழ்ந்த உறக்கத்திற்கு போய்விட வேண்டும்.

மூன்று மூன்றரை அல்லது நாலு மணிக்கு புரளும் போது மனைவியின் உடம்பு பட்டு அதன் மென்மை அல் லது குழைவு பட்டு மனம் விழித்துக் கொள்ளும். உடம்பு முறுகித் திமிறும்.

அவளும் இதே மன நிலையில் இருக்க புருஷனின் அணைப்புக்குத் தவிக்க விழித்தும், விழிப்பில்லாத ஒரு நிலையில் கூடல் துவங்கும். எதிர்பார்ப்பும் ஆவேசமும் இல்லாததால் அந்த கூடல் வெகு நேரம் நீடிக்கும். எதிர்

பார்ப்பும் ஆவேசமும் மனம் விழிப்புள்ள நிலையில் அதிக மாக பொங்குபவை. இந்த எண்ணங்களால் கூடல் அதிவேகமாய் முடிந்துவிடும். ஆனால் விடியலின் குளுமையால் உடம்பு சூடாகாது.

உடம்பும் குளுமையாகி, மனமும் விழிக்காத அந்த நேரத்தில் மனைவியோடு கூடுவதுதான் பரம சுகம்.

கணவனுக்கும், மனைவிக்கும் அந்த மத்திம வயதில் கூடலைப் பற்றி அனுபவம் அதிகமாகி வெட்கமற்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கும். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஏதுவுமின்றி உணவு பரிமாறுவது போல் புருஷனுக்கு போட்டு அவன் எதிரே தானும் உண்பது போல் ஒரு சிநேகம் வந்திருக்கும்...

போதும், போதும் என்ற வெட்கமோ, கொஞ்சமும் பிடிக்கவில்லை என்கிற பொய்யான நடிப்போ உலகத் தின் கேவலமான விஷயத்தை செய்கிறோம் என்கிற அலட்டாலோ இல்லாது உள்ளங்கை அரிப்பை சொரிந்து கொள்வது போல கூடல் அங்கு இயல்பாகும்.

அது விடியல் வேளை. கணேசலிங்கத்திற்கும் அவர் மனைவி வடிவுக்கரசிக்கும் மத்திம வயது. அவர்களுக்கு கூடல் பழக்கமான விஷயம். இருபது வருட அனுபவம். எப்பொழுதாவது புருஷனும் மனைவியும், காச்மூச் என்று சண்டை போட்டாலும் உள்ளுக்குள் மிகுந்த சிநேகம் இருந்தது.

அதையும் தவிர அந்த மைலாப்பூரில் கணேசலிங்கத் திற்காய் சொந்த வீடு ஒன்று இருந்தது. அது இரண்டு மாடி வீடு. இரண்டு பக்கம் திண்ணைகளும் நடுவே வாசலுமாய் இருந்த வீட்டை அவர் இடித்து தெருவோடு சுவர் எழுப்பி திண்ணை இருந்த பக்கம் மொசைக் போட்டு அடுத்து இருந்த அறைகளையும் இடித்து திண்ணையோடு விசாலப்படுத்தி ஒரு பக்க திண்ணையை

நகைக் கடைக்கும், மறுபக்க திண்ணையை பட்டு துணிக் கடைக்கும் வாடகைக்கு விட்டார். அதற்கும் பின்புறம் இருந்த இடத்தை ஹால், சமையலறை, முற்றத்தை ஒரு அப்பளக் கடையின் கொடவுனாக பயன்படுத்திக்கொள்ள அனுமதித்தார்.

கால் கிரவுண்டுக்கு கொல்லைப்புறம் இருந்தது. பழைய வட்டக் கிணறு ஒன்று இருந்தது. அந்த இடத்தை நிலமாகவே விட்டிருந்தார். சென்னை முழுவதும் ஒரு வெய்யில் காலத்தில் தண்ணீருக்கு தவித்த போது அந்த கிணற்றில் பதினைந்து அடி ஆழத்துக்கு தண்ணீர் இருந்தது. இறைக்க இறைக்க, ஊறிற்று.

வாடகைக்கு விடும் போது கிடைத்த அட்வான்ஸ் காசில் இரண்டாவது மாடி எழுப்பி பம்பாய் தளம் போட்டு முதல் மாடி முழுவதும் நல்ல மொசைக் பரப்பி பெரிய ஹாலும், குழந்தைகளுக்கு தனித்தனியே படிக்கிற அறையும், கொல்லைப்புறம் பார்த்து காற்றோட்டம் மிக்க ஒரு சமையலறையும் கட்டிக்கொண்டார்.

இரண்டாவது மாடிதான் கிளி கொஞ்சியது. தெற்குப் பார்த்த ஜன்னல் கிழக்குப் பார்த்த வீடு வடக்கே அடுத்த வீட்டு மேல் மாடி, மேற்கே சுவர் எழுப்பி அந்த சுவருக்கு அப்பால் வராண்டா போல் அமைத்து அந்த வராண்டா முழுவதும் கம்பி சாளரம் வைக்க வீட்டுக்குள் வெப்பமே வரவில்லை. கிழக்கு பக்கமும் சரிவாய் மரக்கட்டை அமைந்து ஓடு வேய்ந்து விட ஓடும் திறந்த வெளி முற்றமுமாய், வெளிச்சமும், காற்றுமாய் இரண்டாவது மாடி இருந்தது.

இந்த இடம் கட்டிய நாளிலிருந்து காற்றுள்ள அந்த இடத்தில்தான் படுத்தார்கள்.

மத்திம காலத்தில் மைலாப்பூரில் ஒரு பழைய வீட்டை வண்ணமாய் புதுப்பித்து, சௌகரியமாய் வாழ்வதென்

பது பூர்வ ஜென்ம புண்ணியம். மைலாப்பூர் கோவில் அறுபத்து மூவர் திருவிழாவின்போது அன்னதானம் செய்திருந்தால்தான் இப்படி ஒரு சுகமான இடம் கிடைக்கும். கபாலி தேர் ஓடும்போது மொண்டு மொண்டு மோர் கொடுத்திருந்தால்தான் இப்படி ஒரு நீர் நிரம்பிய இடம் கிடைக்கும். தலைக்கு மேல் வெல்லப்புட்டு சுமந்து குழந்தைகளுக்கும், கிழவர்களுக்கும் பிடிபிடியாய் கொடுத்தால்தான் இப்படி இரண்டாவது மாடி எழுப்ப முடியும். மாதாந்திர பிரதோஷத்தின் போது பண்டிதர் களுக்கு பனை ஓலையால் விசிறினால்தான் இப்படி திறந்த வெளி முற்றமும், தெற்கத்தி காற்றும் கிடைக்கும்.

இந்த வீடு வரம். ஆனால் மனைவி வரமா, சாபமா தெரியவில்லை. வடிவுக்கரசி நல்லவள்தான். அவளைப் போய் சாபமென்று சொல்வானேன். இன்று காலையில் மனசுக்குள் தோன்றிய உணர்வு சரியெனில் இது இச் சையை தீர்க்க இறைவனால் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம்.

வசந்த மண்டபத்தில் உடகார்ந்து வாய் பாட, மனசு தாசியையே பார்த்துக் கொண்டிருந்தது அல்லவா. அடுத்த பிறவி இனிதே எடுத்து அவள் அங்கங்கள் எல்லாம் பார். அனுபவி. ஆனால் பாடாதே. வேண்டும் மட்டும் அனுபவித்துவிட்டு வேண்டாம் என்ற எண்ணம் வந்த பிறகு என்னைத் துதிக்க தொடங்கி என்னைப் புரிந்து கொண்டு என்னிடம் வந்து சேர், என்று ஒரு தனி வகுப் புக்கு இறைவன் என்னை அனுப்பியிருக்க வேண்டும். அந்த போக வகுப்பில் இந்த விடியலில் இப்போது ஒரு முக்கியமான பாடம் நடக்கிறது. வடிவுக்கரசி பாடம் நடத்திக் கொண்டிருக்கிறாள். கணேசலிங்கம் மிக ஆர்வத்தோடு மனைவியைப் பின்னிக் கொண்டார்.

''காலையில முழிப்பு வந்தா குயிலைத் தேடினு போறதா. பக்கத்துல தடிமனா ஒரு பொண்டாட்டி படுத்துனு இருக்கிறது ஞாபகம் இல்லியா'' அவள் அவர்

தலையைக் கோதிக் கொண்டே கேட்டாள். அடிக்கடி முத்தமிட்டாள்.

‘‘மேல கைப் போட்டுத்தான் தூங்கிக் கிட்டுருந்த, பாவம் உன் தூக்கத்தை கெடுக்க வாணாமேன்னுதான்’’ அவர் பேசி கொண்டிருக்கும் போதே உதட்டில் முத்த மிட்டாள்.

‘‘கெடுக்கறது’’ என்றாள்.

‘‘எதைக் கெடுக்கறது’’

‘‘என் தூக்கத்தை, என்னை எல்லாத்தையும்தான்’’ அவரை மல்லாக்க வைத்துக் கொண்டாள்.

கணேசலிங்கத்தின் சந்தோஷம் உயர்ந்து விண்ணை முட்டியது.

‘‘நீங்க இறங்கிப் போனது தெரிஞ்சது. ஆனாலும் கண்ணு திறக்க முடியலை. உடம்பு தூங்கிட்டு இருந் தாலும் மனசுல என்னென்னமோ யோசனை. பள்ளிக் கூடத்துல டிராயிங் மாஸ்டராவே இன்னும் இருக்காரே. கண்ணைத் தொறந்து பார்த்தா பொண்ணு கல்யா ணத்துக்கு நிக்குமே. புள்ளை படிக்க காசு வேணுமே. அப்படி ஒரு நிலைமை வந்தா துணிக்கடைக்காரனை நம்பறதா, இல்லை நகைக்கடைக்காரனை நம்பறதா, இல்லை நாம்பளே இப்பத்திலிருந்தே ஏதாவது முயற்சி செய்யறதா’’

‘‘பன்னிரெண்டு வயசுதானடி ஆவது பொண் ணுக்கு’’

‘‘விளிம்புல நிக்குது. காத்து வேகமா வீசினா சமைஞ் சிடுவா. வீசி ஊஞ்சல் ஆடினா பெரியவளாயிடுவா. அப்படி ஒரு மதப்புல நிக்குது. பொண்ணு சமைஞ்சு போச்சு, செலவுதான். தடதடன்னு நகை வாங்கிப்

போட்டுனேயிருக்கணும். கல்யாணம் பேசிட்டு நகை பண்ண முடியாது.''

''இப்ப என்னான்றே''

''பொண்ணு பெரிசானா இந்த ஆட்டத்தையெல்லாம் நிறுத்திக்கணும்.''

''ஏண்டி நீ கையைப் புடிசசி இழுத்துட்டு என்னை நிறுத்து, நிறுத்துன்ற'' அவர் அவளை அசையாது பார்த்தார்.

''உங்களை யார் நிறுத்தச் சொன்னது. நான் நிறுத்திக்கணும்னு சொன்னேன்.''

''இது என்னாடி கூத்து. நீ நிறுத்திட்டா அப்புறம் நான் எங்க போறது.''

''உங்களுக்குன்னுதான் வரணுமே கண்டி, நான் ஆசைப்புடிச்சி வரக்கூடாது'' அவள் அவர் நெஞ்சு ரோமங்களை தடவினாள்.

''என்னாடி சொல்றே'' அவர் புரியாது சொன்னார்.

''ஆமா உங்களுக்கு அகராதி போட்டுத்தான் விளக்கணும். மனசுலே ஆசை ''இருக்குதே தவிர அதுக் கேத்தபடி உடம்பு வளையலை. உடம்பு அத்தனை வளைசலா இருக்கும்போது மனசுல அத்தனை ஆசை இல்லே.''

''ஆசை இல்லாதயாடி ரெண்டு பெத்தே''

''ஆசையோடயா பெத்தேன் புருஷன் சொல்படி கேட்டுக்கோன்னாங்க. நீங்களும் வந்து இப்படி திரும்பு, அப்படி திரும்புன்னீங்க. இது இன்னா சமாச்சாரம்னு தெரியறதுக்குள்ளே ரெண்டு பெத்துட்டேன்.''

''பொண்ணு பெத்த பிறகுதான் ஆபரேஷன் பண்ணிக்கிட்டியே நான் ரொம்ப ஆட்டம் போடுறேன்னு அதுக்கு காரணம் வேற சொன்னியே''

''அதுக்கப்புறமும் பயம். வேற மாதிரி பயம். முடிச்சு போட்ட ட்யூப்ல கரு நின்னுடுமோன்னு பயம் ட்யூப்லயே தங்கி வளர ஆரம்பிச்சுடுமேன்னு கலவரம். நல்லா அனுபவிச்சேன்னு ஒரு பொம்பளை கூட சொல்ல மாட்டா. எப்பவும் எதுனா ஒரு பயம், இல்லேன்னா ஒரு அடக்கு முறை''

''ஏய் அபாண்டமா பேசாதடி. நான் இன்னா அடக்கு முறை பண்ணேன்.''

''என் ராஜா நான் உன்னைச் சொல்வேனா, உன்னைச் சொன்னா நான் நல்லாயிருப்பேனா, பொதுவா பொம்பளைங்களப் பத்திச் சொல்றேன்'' அவர் முகத்தை நெஞ்சிலழுத்தி ஒரு குழந்தைபோல் கொஞ்சினாள். அவருக்கு திணறியது. அந்த திணறலும் ஒரு சுகமாக இருந்தது.

''நீங்க இறங்கிப் போனதும் முழிப்பு வந்ததுன்னு சொன்னேன் இல்லை. அப்ப கனா மாதிரி எதோ நினைப்பு. கபாலி புண்ணியத்துல எதோ வரம் வாங்கின மாதிரி ஒரு நல்ல புருஷன் கிடைச்சிருக்கான். தப்பு தண்டாவுக்கு போறதில்லை. வெட்டிச் சண்டை போடற தில்லை. நமக்கு ஒரு கெடுதல்னா துடிச்சுப் போறான். நாமதான் ஒரு புருஷன் ஆசைப்படறப்படி நடக்கிற தில்லை. இப்பக் கூப்பிட்டு என்னை என்னவேணா பண்ணிக்கோன்னு புருஷனை ஸ்பெஷலா கவனிக்கனும்னு நினைச்சேன். லைட் போட்டு உன் முன்னாடி டான்ஸ் ஆடணும்னு தோனிச்சு. உரசி, உரசி உனக்கு ஆசை காட்டணும்னு நினைச்சேன். டான்ஸ் ஆடற உடம்பா இது, முடியலை படுத்துட்டேன்.''

கணேசலிங்கம் ஆச்சர்யத்துடன் அந்த அரையிருட்டில் மனைவியை உற்றுப் பார்த்தார்.

சோடியம் வேப்பர் விளக்கின் ஒளி அடுத்த வீட்டின் வெள்ளைச் சுவரில் பட்டு அவள் மீது பூசியது போன்று படர்ந்திருந்தது.

அழகான வளைந்த உதடுகளும் செழுமையான கன்னங்களும் பெரிய, பெரிய விழிகளும், கருமையான கூந்தலும், வட்டமான முகமும், பழுப்பு நிற தேகமும், கொண்ட வடிவுக்கரசியைப் பார்க்கும்போது ஒரு தாசியைப் போல்தான் தெரிந்தாள். அவளின் பருத்த முலைகளுக்கு நடுவே திருமாங்கல்யம் நெளிந்து மின்னிற்று.

''என்னா பாக்கறீங்க'' மனைவி கொஞ்சினாள்.

''நீ ரொம்ப அழகுடி. தேவதை மாதிரி அழகு'' புருஷன் குழறினான்.

''அய்யே'' மனைவி பூரிப்புடன் வெட்கப்பட்டு சமயமறிந்து இறுக்கிக் கொண்டாள். அவர் சக்தி திணறி மனைவி மீது பர்ய்ந்த நேரம் மனம் சகல எண்ணங்களையும் நிறுத்தி விட்டது. வெகு ஆழத்தில் மடமடவென்று இறங்கிற்று. எது உள்ளேயிருக்கிறது என்று தேடித் தேடிப் போயிற்று. எதுவுமேயில்லாத ஒரு வெறுமையில் சூன்யத்தில் முடிந்தது.

அந்த சூன்யம் கொடுத்த நிச்சலனம், ஆடாத அமைதி எந்தப் பிடிப்புமில்லாத வெறுமை, மிகுந்த சந்தோஷமாக இருந்தது. அந்த நேரம் அவருக்குள் ஒரு வாக்கியம் தோன்றியது.

யாரும் யாருக்கும் உறவுமில்லை யாரும் யாருக்கும் பகையுமில்லை.

அவர் நழுவிப் பிரிந்தார்.

# 2

மரங்கள் சூழ்ந்த அந்த பள்ளிக்கூடத்துக்கு கூட நூறு வயதாகி விட்டது. ஆரம்பிக்கும் போது அந்த பள்ளிக்கூடம் ஒரு வேத பாடசாலை போல் இருந்ததாம். ஜோசியம், வான சாஸ்திரம் ஆகம விதிகள் இவையெல்லாம் கற்றுக் கொடுத்தார்களாம். வேதம் தவிர மற்ற விஷயங்களை பிராமணரல்லாதவர்களுக்கும் கற்று கொடுத்தார்களாம். காவியம் கட்டாய பாடமாம். பள்ளிக்கூடம் ஆரம்பித்து இருபது வருடங்களுக்கு பிறகு தான் அங்கே ஆங்கிலப் பாடத்தோடு, பூகோளமும் சொல்லித் தந்து இருக்கிறார்கள்.

இப்போது இருக்கிற கட்டிடங்கள் இன்னும் பின்னால் தான் கட்டப்பட்டு இருக்கின்றன. ஐந்து வயதுக்குப் பிறகுதான் பையன்கள் படிக்க வந்தார்கள். பட்டையும், குடுமியும் உல்லன் நூல் வைத்துக் கட்டிய பின்னலுமாய் பள்ளிக்கு வந்தார்கள். இடுப்பில் ஒரு துண்டும், மேலே ஒரு துண்டுமாய் உடை உடுத்தி பள்ளிக்கு வந்தார்கள். அந்தப் பையன்களில் பல பேருக்கு திருமணமாகியிருந்தது.

ஒரு பத்து வயதுப் பையனை தன் ஏழு வயது மனைவியோடு பாண்டியும், பல்லாங்குழியும் ஆடுகிறான் என்று மற்ற பையன்கள் கேலி செய்ததால் அந்தப் பையன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான். அந்த ஏழு வயதுப் பெண்ணை அவள் தகப்பனார் தஞ்சாவூருக்கு கூட்டிக்கொண்டு போய் விட்டார். அந்தப் பெண்ணின் கதி பிறகு என்னவாயிற்று என்று யாருக்கும் தெரியவில்லை.

கணேசலிங்கம் தன் பள்ளிக்கூடத்தை ஆவலாக சுற்றி வந்தார். ஒழுக்கத்திலும், திறமையிலும் உயர்ந்த பல நல்ல மனிதர்களை இந்தப் பள்ளிக்கூடம் கொடுத்திருக்

கிறது. அன்னியரின் வருகையும், அவர் கலாச்சாரத்தின் தாக்குதலும் இந்த தமிழ் மண்ணை திகைக்க வைத்துள்ளன. இங்குள்ள மக்களை தடம் புரள வைத்திருக்கின்றன.

அன்னியனை எதிர்க்கத் துப்பில்லாத உயர்குடி மக்கள் தங்கள் அடக்குமுறை ஆர்வத்தை மற்ற குடிகள் மீது காட்டினர். தங்கள் கர்வத்தை கம்பீரத்தை ஆச்சாரம் பேசுவதின் மூலம் வெளிப்படுத்தினர். தங்களுக்குத் தான் எல்லாம் தெரியும் என்று வலிந்து காட்டிக் கொண்டனர். வேதமே உயர்ந்தது என்று வாதாடினர். மற்றவர்களைப் புறம் தள்ளினர்.

வேதம் ஓதுதலும், வேள்வி செய்தலும், பக்தியில் ஈடுபடுதலும், பசுக்களைப் பேணிக்காத்தலும், அன்ன தானமும், மனிதன் ஆழ் மனோ நிலைக்கு போவதற்கான வழிகள். வழிகளை சிறப்பித்து கூறுவதால் மட்டுமே ஆழ் மனோ நிலைக்கு போய்விட முடியாது. இவைகளில் ஈடுபட்டு, ஈடுபட்டு மனம் பக்குவப்பட வேண்டும். பக்குவப்பட்ட நேரத்தில் இந்த வழிமுறைகளை செய்ய வேண்டிய அவசியமில்லாமல் போய்விடும். இவைகளைச் செய்யச் செய்ய இவைகளை செய்ய வேண்டாத நிலை ஏற்பட்டு விடும். இவைகளை செய்ய வேண்டாம் என்ற நிலைக்கு வருவதற்குதான் இவைகளை செய்ய வேண்டும்.

ஆனால் இந்த நிலைக்கு வந்தவர்கள் மிகச் சிலரே. அப்படி வந்தவர்களைப் பற்றி தகவல்கள் இந்த பூமியில் இல்லை. அப்படி வராது போனவர்களைப் பற்றிய தகவல்கள்தான் இருக்கின்றன.

ஒரு மைலாப்பூர் ஜமீன்தார் அள்ளி, அள்ளி அன்ன தானம் கொடுத்து, அப்படி அன்னதானம் கொடுப்பதே

வேலையாகிவிட்டது. சோம வார அன்னதானம், அமாவசை அன்னதானம், கிருத்திகை அன்னதானம், பௌர்ணமி பால்தானம், பிரதோஷமன்று புளியோதரை ஒவ்வொரு நாயன்மார் பிறந்தநாளின் போதும் அவர் பெயர் சொல்லி பொங்கல், திருவிழா காலத்தில் மூன்று வேளை உணவு நீர் மோர். இது தவிர ஒரு நாளைக்கு பத்து சாதுக்களுக்கு அன்னதானக் கட்டளை என்று வாரி வழங்கியிருக்கிறார்.

சொத்தெல்லாம் அன்னதானத்தில் போய் மனைவி நோயுற்று மடிந்து உறவினர்கள் விலகி நகர்ந்து விட பிச்சை எடுத்து அன்னதானம் செய்திருக்கிறார். ஜரிகை தொப்பியும் பட்டுச் சொக்காயும், வேட்டியுமாய் அலைந்து திரிந்த அதே மைலாப்பூரில் கோவணாண்டியாய் அலைந்திருக்கிறார்.

சுவாமி அன்னதானத்திற்கு அரிசி வாங்க வேண்டும் ஒரு தம்படி கொடுங்கள் என்று போவோர், வருவோர் எல்லோரையும் கேட்பார்.

அங்கம் பூம்பாவை மண்டபத்தில் ஒரு பௌர்ணமிக்கு முன் தினம் ஒரு முன் பகல் பொழுதில் குளித்து விட்டு உட்கார்ந்து சிவபூஜை செய்யும் போது, பிராணன் போய் விட்டதாம்.

செத்த பிறகு என் கைத்தடியை உடைத்து விடு என்று யாரிடமோ சொல்லி வைத்திருந்தாராம். அந்த மூங்கில் தடியை உடைக்க ஆயிரக்கணக்கான தம்புடிகள் கிடைத்ததாம்.

என் பத்தாம் நாள் அன்னதானத்திற்கு என்று ஒரு ஓலையில் எழுதப்பட்டிருந்ததாம். ஊர் கூடி அடக்கம் செய்து விட்டு பத்தாம் நாள் போதும், போதும், என்ற அளவுக்கு அன்னதானம் செய்தார்களாம்.

பெரிய பண்டிதர்கள், மடாலய துறவிகள், ஜமீன் தார்கள் ஆகியோரெல்லாம் வரிசையில் நின்று அந்த அன்னதானத்தை பிரசாதம் போல் சாப்பிட்டார் களாம்.

இதுதான் கனிதல், ஆச்சாரமாய், சடங்காய் அறப் பணி என்ற அகங்காரமாய், ஆண்டவனுக்கு பிடிக்கும் என்று குறிக்கோளாய் தலைமுறை தலைமுறையாய் இந்த புண்ணியம் என்னைக் காப்பாற்றும் என்ற எதிர்பார்ப் பாய் என்று அந்த ஜமீன்தார் நடத்திய அன்னதானம், அவரை உருமாற்றி அன்னதானமே வாழ்க்கை, வாழ்க் கையே அன்னதானம் என்று செய்து விட்டது. செத்த பிறகும் அன்னதானம் செய்ய வைத்து விட்டது. படித்த கர்விகளையும், படிக்காத கர்விகளையும் அவர் முன் கையேந்த வைத்து விட்டது. அவர் அன்னதானமே எல்லாவித மக்களையும் அவர் முன்பு சமமாக்கி விட்டது.

அந்த அன்னதானம் அவருக்குள் என்ன நிகழ்த்தியது என்று அவருக்குதான் தெரியும். சரியான நாளில் சரியான நேரத்தில் பூஜை செய்தபடி பிராணன் போயிருக்கிறது என்றால் அது மிகப் பெரிய விஷயம். போய் வருகிறேன் என்று கைகூப்பி விடை பெறுவது போல் மரணமடைவது மிகப் பெரிய பாக்கியம். ஒரு யோகிக்குத்தான் இது ஏற் படும். அவர் எப்போது யோகியானார், அவருக்குள் என்ன நடந்தது என்பதை அவர் சொல்லவேயில்லை. தன் வாழ்க்கை சரிதத்தை அவர் பகிர்ந்து கொள்ளவே யில்லை.

ஞானியும், பறவையும், மீனும் தான் போன பாதை யில் தடங்களை விட்டுப் போவதில்லை இந்த மைலாப் பூருக்கு ஒரு சரித்திரம் உள்ளது. அது விபரமாய் எழுதப் படவேயில்லை திருவண்ணாமலையைப் பற்றி, திருச் சிற்றம்பலம் பற்றி, திருவானைக்கால் பற்றி விபரமாய் கேட்கிற குறிப்புகள் உள்ளன. இந்த மைலாப்பூருக்கு

அப்படியில்லை. துண்டு துண்டாய் இடைவெளி விட்டு மிகச் சிறிய குறிப்புகளே உள்ளன. மயில் கொத்தி அர்ச்சனை செய்த பூக்கள் போல தனித்தனியாய் உள்ளன.

மைலாப்பூர் மயில் பூஜை செய்த இடமாம். கைலாயத்தில் பரமேஸ்வரன் பிரும்ம ரகசியத்தைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்க, உமாதேவி அதில் மனம் வைக்காது அருகே ஆடிக் கொண்டிருந்த மயிலையே பார்த்துக் கொண்டிருந்தாளாம்.

என் பேச்சைக் கவனிக்காமல் மயில் ஆடுவதையே கவனித்துக் கொண்டிருந்ததால் நீ மயிலாக பிறக்கக் கடவது என்று பரமேஸ்வரன் சாபமிட்டாராம். உமா தேவி இந்த கடற்கரையோரம் மயிலாகப் பிறந்து இடைவிடாது பூக்களால் சிவலிங்க பூஜை செய்தாராம். பூஜைக்கு மகிழ்ந்த பரமேஸ்வரன் மறுபடியும் உமா தேவியை ஏற்றுக் கொண்டாராம்.

ஒரு வேளை இந்தக்கதையே பிரம்ம ரகசியம்தானோ. நீ என்ன எண்ணுகிறாயோ அதுவாகவே ஆவாய் என்பது தான் பிரம்ம ரகசியமா. எண்ணங்கள் இருக்கும்வரை பிறப்பு தொடரும். மனமென்னும் சக்தி ஒரு உடலை விரும்பித் தேடி கர்ப்பப் பைக்குள் புகுந்து உருவாகி வெளிவரும். எண்ணமற்ற நிலையே பிறப்பற்ற நிலை. எண்ணமில்லாத வெறுமையை அடையும்போது பிறப்பெடுக்க வேண்டிய அவசியமில்லாமல் போகிறது.

எண்ணம் உருவாக நான் என்ற அகங்காரம் காரணமாகிறது. நான் என்று எண்ணம் கொண்டால் நீ என்று பிரிவினை வருகிறது. அது என்று கடவுளை நினைக்க வைக்கிறது தான் வேறு கடவுள் வேறு என்கிற தோற்றம் எழுகிறது.

எண்ணங்களற்று ஒரு இடத்தில் நிலைத்து நின்று விட்டால் நான் கரைந்து காணாமல் போய் விடும். நான்

என்கிற மையம் இல்லையெனில் அதைச்சுற்றி வருகிற எண்ணங்களும் இல்லை. எண்ணங்களை யெல்லாம் கலைத்து புறக்கணித்து விட்டு நான் என்பதை ஆழ்ந்து, ஆழ்ந்து பார்க்க அங்கு நான் என்று எதுவுமேயில்லை, ஒரு பொருளை பிரித்து பிரித்துப் பார்க்க அந்தப் பொருளின் அணுவையும் உரித்துப் பார்க்க அங்கு எதுவுமேயில்லை. எதுவுமேயில்லாத வெற்றிடத்தை சுமந்து கொண்டு ஒரு அணு. அந்த அணுவைச் சுற்றி பல அணு கூட்டம். அந்த அணு கூட்டத்தைச் சுற்றி பல்வேறு தன்மையாய் இறுகிய பொருட்கள்.

அதைப் போலவே ஒரு வெற்றிடத்தை சுற்றி நான் என்கிற அகங்காரம். நான் என்ற அகங்காரத்தைச் சுற்றி எண்ணங்கள். எண்ணங்களால் ஏற்படுகின்ற அந்தஸ்து, பதவி, கௌரவம், சந்தோஷம் போன்ற நிலைகள் சந் தோஷம், துக்கம், கோபம் என்கிற உணர்வுகள், நல்லவன் கெட்டவன், குடும்பஸ்தன், சந்நியாசி என்கிற தகுதிகள்.

வெற்றிடத்திலிருந்து கிளம்பி பல அணுக் கூறுகளால் ஆன உடம்பு. வெற்றிடத்திலிருந்து கிளம்பி நான் என்று ஏற்பட்ட அகங்காரம். இவை இரண்டும் சேர்ந்ததுதான் மனித வாழ்க்கை.

உடம்பு என்ற அணுக்கூறு தொடர்ந்து அழிந்தபின் அல்லது அடிபட்டு இறந்தபின் நான் என்ற அகங்காரத்தி லிருந்து கிளம்பிய மனோசக்தி தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இன்னொரு உடம்பை தேடுகிறது. உடம்பு அழிகிற நேரத்தில் ஏற்பட்ட எண்ணத்தின் பிரகாரம் இன்னொரு உடம்பாய் பிறக்கிறது.

திருவண்ணாமலையில் ஒரு மகான் ஆஸ்ரமத்தில் கீரைப்பாட்டி என்கிற கிழவி வாழ்ந்து வந்தாள். அந்த மகானுக்கு நாள் தவறாமல் கீரை சமைத்துக் கொடுப் பாள். வயதான பருவத்தில் மகான் உணவை குறைத்துக் கொள்ள அந்த கீரைப்பாட்டிக்கு முற்றிலுமாய் சேவை

செய்ய முடியாமல் போய்விட்டது. ஒரு சுண்டு விரல் கீரை மட்டுமே மகான் சாப்பிடும் வழக்கமாயிற்று.

ஆனால் மகானுக்கு வேறொரு அன்பர் ஒரு டம்ளர் பால் கொடுக்க அதை அந்த மகான் சாப்பிட்டு வந்தார்.

தனக்கு பால் வாங்கி மகானுக்கு நிவேதனம் செய்யும் சக்தி இல்லையே என்று அந்த கீரைப் பாட்டி ஏங்கினாள். அப்படியே பண வசதி கிடைத்தாலும் இன்னொரு அன்பர் செய்யும் சேவையை தடுப்பது நல்லதல்லவே என்று வருந்தினாள்.

தான் ஒரு மனுஷியாக இல்லாமல் ஒரு பசு மாடாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று தினம் எண்ணினாள். ஒரு நல்ல நாளில் இறந்து போனாள்.

சில வருடங்களில் அந்த ஆஸ்ரமத்திற்கு ஒரு அழகிய பசுமாடு ஏதோ விதமாக வந்து சேர்ந்தது. அந்த கீரைப் பாட்டிதான் அந்த பசுமாடு என்று அந்த ஆஸ்ரமத்தில் உள்ளவர்களுக்கு ஏதோ ஒரு விதமாக தோன்றியது.

தனக்கு பால் கொடுத்து தன்னைச் சுற்றி வந்து, நேசித்த அந்த பசுமாடு இறந்த பிறகு அந்தந் பசு மாட்டிற்கு மகான் ஒரு சிலை வைத்தார். அதனாலேயே அது சாதாரணப் பசு இல்லையென்று அங்குள்ளவர் களுக்கு தெரிந்து விட்டது.

எண்ணம்தான் மறுபடி, மறுபடி பிறக்க வைக்கிறது. எண்ணமற்று போகும் போதுதான் பிறப்பு அறுபடு கிறது. எண்ணமில்லையெனில் நான் இல்லை நான் இல்லையெனில் சூன்யம். சூன்யத்தில் மேல், கீழ், நல்லது, கெட்டது, அது, இது எதுவுமில்லை, முக்கியமாய் கடவுள் இல்லை. அந்த சூன்யமே கடவுள். கடவுள் என்று தெரியாத கடவுள் ஒரு வெற்று நிலை.

உண்மையில் நான் என்ற எண்ணங்கள் போட்ட வரி வடிவம்தான் கடவுள். கடவுள் மனித கற்பனை. கோடானு கோடி மனிதர்களின் எண்ணத் தொகுப்பு. பரம்பரையாய் நுணுக்கி நுணுக்கி செய்யப்பட்ட கோலம் தான் கடவுள்.

அக்னியை கடவுளாக்கி, அதன் சாம்பலை லிங்கமாக்கி, அந்த லிங்கத்துக்கு கண், மூக்கு, வாய்செய்து பிறகு அதிலிருந்து வெடித்துக் கிளம்பி மனித உருவைச் செய்து ஒவ்வொன்றுக்கும் ஒரு கதை சொல்லி அந்தக் கதைகளுக்கு பல கிளை கதைகள் வந்து, அந்த கிளைக் கதைகளுக்கு ஏற்றபடி குழுக்கள் தோன்றி, அந்த குழுக் களால் மதங்கள் ஏற்பட்டு, அந்த மதங்களுக்கு சின்னங் களும், சடங்குகளும் நிறுவப்பட்டு, இவைகளை உண்மை யென்று நம்ப வைக்க, குடும்ப கதைகளும், தத்துவ கதைகளும் தோன்றி, அந்த சூன்யம் மறைந்து போய், அந்த வெறுமை இழந்து பெரிய இரைச்சல் உண்டாகி விட்டது.

உண்மையில் கடவுள் இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

இதில் என்ன அபத்தம் என்றால் இல்லை என்று சொன்ன குழுவுக்கும், சின்னமும், சம்பிரதாயங்களும், கொடிகளும், கொள்கைகளும் தோன்றி விட்டன.

கௌதம புத்தர் இந்தச் சடங்குகளை எதிர்த்து சூன் யத்தை கண்டு சொன்னார். சரியென்று தலையாட்டிய ஜனங்கள், கௌதம புத்தரை சிலையாகச் செய்து அவரை சக்கரைப் பொங்கல் நைவேத்தியம், செய்துவிட்டது. நின்ற புத்தரை படிப்புக்கும், உட்கார்ந்த புத்தரை குடும் பத்துக்கும் படுத்த புத்தர் ஞானத்திற்கும் கும்பிடு என்று சடங்குகள் வந்துவிட்டன.

மனிதன் எண்ணங்களால் அலைக்கழிபவன். அவ னால் கடவுள் இல்லாமல் இருக்க முடியாது. கடவுளைப் பற்றி பிரசங்கம் பண்ணாமல் சும்மா இருக்க முடியாது.

இவன் கடவுளை அவன் வெட்டி, அவன் கடவுளை இவன் இடித்து ஆத்திரப்படாமல் இருக்க முடியாது.

மனிதன் நான் என்ற அகங்காரத்தால் உண்டானவன். அந்த அகங்காரத்தாலேயே அழிபவன். மனிதன் மிகப் பெரிய பத்மாசூரன். அவன் இயற்கை மீது கைவைத்து அழிக்கும் அறிவை வளர்த்துக் கொண்டவன். அந்த மனிதன் தன் மீதும் தன் தலை மீதும் கை வைத்து தானே அழிந்து போவான். அவனுடைய தலை என்பது அவன் அதிகம் கர்வப்படுவது அதாவது அதிக முக்கியத்துவம் கொடுப்பது அவன் உருவாக்கிய மதத்திற்குத்தான். அந்த மதத்தின் மீது அவன் அகங்கார கை பதிய அவன் பஸ்ப மாவான்.

மனிதனை இயற்கை அழிக்க வேண்டிய அவசிய மில்லை. மனிதனை மனிதனே அழித்துக் கொள்வான். மதத்தினை முன் வைத்து புல் பூண்டு இல்லாமல் அழித்துக் கொள்வான். அதற்கான காலம் துவங்கிவிட்டது.

''இன்னா டிராயிங் மாஸ்டர் கிளாஸுக்கு போக லியா'' அசையாது யோசனை செய்து கொண்டிருந்த கணேசலிங்கத்தை வேறொரு ஆசிரியர் முதுகில் தட்டினார்.

''முதல் ரெண்டு பிரியட் கிடையாது. மூணாவது பீரியட்தான் கிளாஸ், எய்த் ஏ''

''மூணாவது பிரியட் பெல் அடிச்சு மூணு நிமிஷமா வுது. நீ வெளியே போய் கதவைச் சாத்திடு. நான் கொஞ்சம் தூங்கறேன். இந்தப் பசங்களுக்கு கணக்கு சொல்லிக் கொடுத்தா எனக்கு தூக்கம்தான் வருது.''

கணேசலிங்கம் கதவை சாத்திக் கொண்டு வராண் டாவில் நடந்தார். வகுப்பறையில் அவர் நுழைந்ததும் மாணவர்கள் ஓ வென்று கூச்சலிட்டார்கள். அந்த கூச்சலுக்கு ரொம்ப சந்தோஷம் என்று அர்த்தம்.

அவர் பாய்ந்து சென்று ஒரு பொடிப் பையனை பிடித்துக் கொண்டார். அவன் கன்னத்தில் மாறி, மாறி அடிப்பது போல் நடித்தார். வலிக்காமல் காது திருகினார். கையும், காலையும் தூக்கி ராஜபாட் நடிகன் போல் நடந்தார். மேஜையில் உள்ள பிரம்பை எடுத்து ஒரு கத்திபோல் அரைவிட்டமாய் காட்டினார்.

"எவனா கணக்கு தப்பா போட்டான் நான் கொலை பண்ணிடுவேன். நான் கொலை பண்ண பிறகும் தப்பா போட்டிங்க"... சற்று இடைவெளி கொடுத்து நிறுத்தினார். மறுபடியும் கொலை பண்ணுவேன்.

கணக்கு வாத்தியார் போல் நடித்தார். பையன்கள் புரிந்து கொண்டு ஓ என்று கத்தினார்கள். கைதட்டி அமைதியாக்கினார்.

"என்னா டிராயிங் போடலாம் சொல்லுங்க." பையன்கள் விருப்பத்தை கேட்டார்.

"மனுஷன் படம் போடலாம் சார்."

"சரி மனுஷனே போடலாம்." இரண்டு கைகளை உயரே தூக்கிய தொந்தியும், தொப்பையுமான முகம் முழுவதும் சிரிப்பு ததும்பிய ஒரு ஆளை வரைந்தார்.

அந்த சிரித்த முகத்தைப் பார்த்து பையன்கள் எல்லாம் சிரித்தார்கள். கை தட்டினார்கள். சிரிப்போடும் ஆர்வத்தோடும் அதே போல் படம் வரையத் துவங்கினார்கள். அவரவர் ஓவியத்தை பலருக்கு காட்டி சிரித்தார்கள். பல பேர் ஓவியத்தை ஒவ்வொருவரும் பார்த்து சிரித்தார்கள்.

இந்த ஓவியம் சொல்லும் தத்துவமே அதுதான். தானும் சந்தோஷமாக இருந்து மற்றவரையும் சந்தோஷப்படுத்துவது. இந்தப் படத்தை சிங்கப்பூரில் பொம்மையாய் வைத்துள்ளார்கள். அந்தப் பொம்மைக்கு லாபிங் புத்தா என்று பெயர்.

முகம் முழுவதும் சிரிப்பாயிருக்கின்ற பையன்களை விட்டு இன்னொரு வகுப்புக்கு போகையில், பள்ளிக்கூட வாசலில் அவர் மனைவி வந்திருப்பதாக ஒரு மாணவன் சொன்னான். அவர் ஆச்சர்யமானார். வாசலுக்கு விரைந்தார். விடியலில் மனைவியோடு கூடியது ஞாபகத் திற்கு வந்தது.

பிரிண்டட் சில்க் புடவையில் வடிவுக்கரசி வரவேற்ப றையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. விரைவாய் அருகே போனார்.

''இன்னா அக்கிரமம் இது, இப்படி பகல் நேரத்துல பள்ளி கூடத்துக்கு வந்து வா, வான்னு கூப்பிட்டா ஒரு புருஷன் என்னா பண்ணுவான். உன்னை வைச்சுனு என் னால முடியாது. நீ வேற ஆள் பாத்துக்க.'' காதோரமாய் பேசி கண்ணடித்தார்.

''தூத்தரி இப்பவும் அதான் நினைப்பா உங்கப்பா வந்திருக்காரு. லீவு போட்டுட்டு வீட்டுக்கு வாங்க.''

''எங்கப்பாவா, என்னாச்சு அந்த ஆளுக்கு, உடம் புக்கு ஒன்னுமில்லியே.''

''அதெல்லாம் நல்லாதான் இருக்கார். ராத்திரி வண் டிக்கு மதுரை போகணுமாம். அதுக்கு முன்னாடி உங்க கிட்ட பேசிட்டு போகணுமாம். கூட கூத்தியாளையும் அவர் பொண்ணையும் கூட்டியாந்திருக்காரு.''

கணேசலிங்கம் வியப்பில் ஆழ்ந்தார்.

''என்னாடி இது எதுனா வம்பு பண்ணப் போறாரா.''

''வம்புதான், ஆரம்பிச்சிட்டாங்க ஆத்தாளும், பொண்ணும்.''

''என்னாவாம்.''

''சொத்துல பங்கு கேட்கிறாங்க. உங்க பொண்ணுக்கும், புள்ளைக்கும் இருக்கிற மாதிரி அந்த வீட்டில அவங்க பொண்ணுக்கும், அந்த பொம்பளைக்கும் பாத்தியதை உண்டாம். இரண்டாவது பொண்டாட்டிக்கு இல்லேன்னாலும், அவளுக்கு பொறந்த பொண்ணுக்கு உண்டாம். சத்தம் போட்டு சட்டம் பேசறாளுங்க.''

கணேசலிங்கம் சற்று ஆடிப்போனார். அங்குள்ள நாற்காலியில் அமைதியாய் உட்கார்ந்தார். அவர் கண் முன்னே யாரோ தொந்தியும் தொப்பையுமாய் நின்றார்கள். காதுக்குள் இடி இடித்தாற்போல் சிரித்தார்கள். கணேசலிங்கம் தன் தந்தையைப் பற்றி யோசிக்க துவங்கினார்.

தானும் சந்தோஷமாக இல்லாமல் பிறத்தியாரையும் சந்தோஷப்படுத்தாமல்... என்று ஒரு வாக்கியம் தோன்றியது.

# 3

**பா**லுணர்வு ஒரு நாளும் மோசமான விஷயமில்லை அது இயற்கை உயிரினங்களுக்குத் தந்த மகத்தான சக்தி. உடம்பிலுள்ள பஞ்ச பூதங்களும் எண்ணமும் ஒன்றாகி ஒரு நொடிக்கும் குறைவாய் ஸ்தம்பித்து நிற்கிற, தன் வயமாய் நிற்கிற தன்மை காமத்திற்கு உண்டு.

தான் என்கிற ஒரு திகைப்பில் சில நொடிகள் இருக்கின்ற சந்தோஷம்தான் மறுபடி, மறுபடி காமத்தை அனுபவிக்குமாறு மனிதனை தூண்டுகிறது. காமத்தை அனுபவிப்பது உடம்பல்ல, மனசல்ல நான்என்ற உயிர்ப்பு சக்திதான் காமத்தை அனுபவிக்கிறது. தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் மறந்துவிட்டு மனம் அழிந்து

போய் உடம்பு மறைந்து போய் நான் என்பதில் கரையும் தருணம்தான் மிக சந்தோஷமான விஷயம். நானில் அமிழும் சந்தோஷத்தின் ஒரு கீறல் மின்னல் போல் வெளிப்படுகிறது.

வருடத்தில் எல்லா நாளும் காமத்தில் ஈடுபட மனித ஜாதியால் மட்டுமே முடியும். இதற்கு காரணம் மனிதன் அழியக் கூடாத முக்கியமான உயிரினம் என்பது மட்டு மல்ல, காமத்திலிருந்து அவன் தன்னை அறிந்து கொள் ளும் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது காரணம். ஒவ்வொரு மனிதனும் இதை ஏதேனும் ஒரு சூழ்நிலையில் புரிந்து கொள்ள மாட்டானா என்று இயற்கை கொடுத்த சலுகை.

ஆனால் மனிதன் இயற்கை கொடுத்த வரங்கள் ஒவ் வொன்றையும் மறந்து விட்டு மிகப் பெரிய முட்டாளாய் நின்று கொண்டிருக்கிறான். நான் என்னும் அகங்காரம் வளர, வளர இயற்கையிலிருந்து அன்னியப்பட்டு நிற்கி றான். அவன் அகங்காரம் எண்ணங்களாக வளர்ந்து கற்ப னைகளாக மலர்ந்து அந்த கறபனையைப் பற்றிக் கொண்டு இடைவிடாது தந்திரம் செய்து தலைமுறை, தலைமுறையாய் யோசித்து இயற்கையோடு மல்லுக்கு நின்று வெகு மேம்போக்காய் அதை ஆக்ரமிப்பு செய் கிறது. இந்த ஆக்ரமிப்புக்கு விஞ்ஞானம் என்று பெயர்.

மனிதன் பொறுமையிழந்த நிலையின் ஆரம்பம் தான் காமத்தை உடல்பசி என்று கொள்ளுதல். உடம் பினுடைய அதீத சக்தி சேகரிப்பால் காமம் ஏற்படுகிறது என்று கருதுதல்.

பெண், பெண்ணாய் மாறிப் போய்க் கொண் டிருக்கிற காமம் உடல் உந்துதலால் அல்ல. அதன் மனம் செய்யும் மாயை பெண்ணை திருப்தி செய்ய முடியாது என்பதை புரிந்து கொண்டு அவளை அவமதிக்க அலட்சி யப்படுத்தும் விதம்.

பெண்ணுக்கு கற்பு முக்கியம் என்று தந்திரமாய் ஒரு கொள்கையை ஏற்படுத்தி, ஒரு ஜாதிப் பெண்களுக்கு கற்பு அவசியமேயில்லை என்று பிரித்து வைத்த தந்திரம்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று பல பெண்களை பலதும் பேசி படுக்கையில் சாய்ந்து தான் நன்கு அனுப வித்ததாய் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் தந்திரம்.

ஒருமித்த கருத்தும் அதனால் ஏற்பட்ட அன்பும், அந்த அன்பால் விளைந்த கூடலும், அந்த கூடலில் ஏற்பட்ட மின்னல் கீற்றுப் போன்ற தன்னை அறிதலும், தன்னை அறிதலால் ஏற்பட்ட சந்தோஷமும் தந்திரமாய் பெண்ணை சாய்ப்பதில் வராது.

அகங்காரம்தான் தந்திரம் செய்யும். தந்திரம் அகங்காரம் வளர்க்கும். அப்பாவுக்கு இது தெரியவில்லை.

அப்போ மைலாப்பூர்ல அய்யருங்க ஜாஸ்தி. அவங்க ளுக்கு அடுத்தபடி முதலியாருங்கதான். அய்யர் பசங்க நம்மளண்ட சிநேகிதம் வைச்சுக்க மாட்டானுங்க. அதுனால முதலியாருங்களா ஒரு பத்து பேர் ஒன்னா கூடி கிழக்கு மாட வீதியில லேடிஸ் ஸ்கூல் பக்கமா நின்னுக்குவோம். குடுமி வைச்ச அய்யருங்க எல்லாம் நமக்கு நேர் அன்னான்ட குளக்கரை சந்துல உட்கார்ந் தினு இருப்பானுங்க.

ராத்திரி பன்னிரெண்டு, ஒன்றரை வரைக்கும் பொம் பளைங்களை பத்திதான் பேச்சு. கல்யாணத்துக்கு முன் னாடியே எனக்கு நாலு, அஞ்சு பொண்ணுங்களோட தொடுப்பு உண்டு.

நான் தேர்ட் பார்ம் பாஸ். ஆனால் வேலைக்குப் போகலை. ஏன் போவணும். அப்போ மைலாப்பூர்ல மொத்தம் எங்களுக்கு நாலு வீடு இருந்தது. மந்தவெளி யில தென்னந்தோப்பு இருந்தது. எங்கப்பாவுக்கு பண்டா

பிஸ்ல வேலை. எங்கம்மாவை பெத்த அப்பாவுக்கு ராயப்பேட்டை சீனுவாசப் பெருமாள் கோவில் தெருவில மூக்குப் பொடி கடை வைச்சிருந்தார். அவரே புகை யிலையை நெய்ல வறுத்து தானே இடிச்சு மூக்கு பொடி செய்வார், வெள்ளைப் பொடி, கறுப்பு பொடி ரெண்டும் செய்வார். கறுப்புபொடி ரொம்ப ஸ்டராங்க். வெள்ளைப் பொடி லைட்டா இருக்கும். நான் பன்னிரெண்டு வயசிலேயே பொடி போட கத்துக்கினேன். வாத்தியாருங் களே எங்கிட்ட பொடி கேட்டாங்கன்னா பார்த்துக் கேயேன்.

எனக்கு கணக்கு வரவே வராது. தேர்ட் பாம்ல மூணு தடவை பெயில். எங்கப்பன் என்னைத் தெருவில் போட்டு மெறி மெறின்னு மெறிச்சான். எதுக்கு அடிக்கிறான். ஏன் அடிக்கிறான்னே எனக்கு தெரியாது. பெயில் ஆச்சுன்னா அடிக்கணும். அடியாத மாடு படியாதுன்னு பழமொழி, அடின்னு ஆரம்பிச்சா பேயடி, நாயடிதான்.

அவன் அடிக்க அடிக்க எனக்கு கூட்டு வட்டி கணக்கு கூட ஒழுங்கா போட முடியலை. நான் ரெண்டு பலம் வெள்ளைப் பொடியை வாழை மட்டைல மடிச்சுனு போய் ராமமூர்த்தி வாத்தியார் டேபிள்ல வைச்சேன்.

அந்த குடுமி வாத்தியார் முறைச்சு பாத்து என்னா டான்னான். என்னைக் கண்டா அவனுக்கு ஆவாது. அவனைக் கண்டா எனக்கு ஆவாது. இந்த வாட்டி என்னை தேட் பாம் பாஸ் பண்ண வைச்சுடு. ஒரு ஜாடி வெள்ளைப் பொடி கொண்டாந்து கொடுக் கிறேன்னேன். அப்ப பொடி ஜாடி உள்ளங்கை அளவுச்கு இருக்கும். ஜாடியிலதான் பொடி வரும். இல்லியா நீ என்னை பெரம்பால விரைக் கொட்டைல அடிச்சதா கடுதாசி எழுதி வைச்சிட்டு கோயில் குளத்துல உழுந்து செத்துடுவேன். எதுனா ஒரு வழிக்குவான்னு மிரட் டினேன்.

ராமமூர்த்தி அய்யர் நிதானமா பொடி எடுத்துப் போட்டான். நீ தேர்ட் பாம் பாஸ் போடா. ஆனா இனிமே படிக்க வராதேன்னுட்டான்.

தேர்ட் பாம் பாஸுன்னு பேப்பர் காட்டி எங்கப்பா கிட்ட பத்துரூபா வாங்கிக்கினேன். எங்கம்மாகிட்ட பத்து ரூபா வாங்கிக்கினேன். சித்தப்பன் தாய்மாமன், அக்காளை கொண்டவன் எல்லார்கிட்டயும் ரெண்டு கொடு, மூணு கொடுன்னு வாங்கிக்கினேன். ஏங்கையில அப்ப நாப்பத்து ஏழு ரூபாய் ஆறணா, மூணு தம்புடி காசு சேர்ந்தது.

குதிரை வண்டி கட்டிக்கினு ரெண்டு பசங்களை சேர்த்துகினு திருவெற்றியூர் போயிட்டோம். அப்போ ரெண்டு ரூபாய்க்கு மூணு பேர் வயிராற டிபன் சாப்பிட லாம். டிரிபிள் எக்ஸ் ரம் பிளேயர்ஸ் சிகரெட் நல்லா அனுபவிச்சேன்.

இப்ப மசாஜ் பார்லர் அது இதுன்றீங்களே அப்ப அது வேற மாதிரியிருந்தது. வீட்டோட தங்க வைச்சு லேபிள் எண்ணெய் தேய்ச்சு உடுவாங்க. எண்ணெய் தேய்ச்சு வுடுற சாக்குல உடம்பு புடிச்சு வுடுவாங்க. பொம்பளைங்கதான். புடிச்சா எப்படி தெரியுமா யிருக்கும் ஜிவ்ஜிவ்வுனு வலிக்கும். ஆனா சுகமாவும் இருக்கும். நரம்பு வேலை தெரிஞ்சவளுங்க. நாலணா எண்ணெய், நாலணா விறகு, நாலணா சீயக்காய், புடிச்சு விட ஒரு ரூபாய்.

ஒரு மணி நேரம் எண்ணெய் தட்டி கொதிக்க, கொதிக்க வெந்நீர் ஊத்தி உருவி அலுப்பா தலையை துவட்டி உட்காரும் போது ஆட்டுக்கறி குழம்பு, கோழி வருவல், அயிர மீன் துகையல், நெத்திலி துண்டம் பொரி யல்னு ஒரு சாப்பாடு இதுக்கு ரெண்டு ரூபான்னு அவங்க ஆத்தா கிழவிக்கிட்டே தனியா கொடுத்துடணும். சாப்

பிட்டு அப்படியே தரையில சாய்ஞ்சு தலைக்கு தலை காணி வைச்சு தூங்கிடணும். எண்ணெய் தேய்ச்ச பொம்பளையே பக்கத்துல உட்கார்ந்து விசுறுவா. அதுக்கு எட்டணா தனி சார்ஜ்.

கண்ணு முழிக்கச் சொல்ல இருட்டியிருக்கும். எழுந்து பின் பக்கம் போயிட்டு வந்து பத்து இருபது பஜ்ஜி ஒரு லிட்டர் காபி குடிச்சிட்டு சீட்டாட்டம், ராத்திரி பத்து மணிக்கு பிராந்தி, கோழிபிரியாணிமறுபடி சீட்டாட்டம். மறுநாள் காத்தால பதினோரு மணிக்கு வெறும் மிளகு ரசம் சாதம் சாப்பிட்டு, பீச்கரைக்குப் போய் ஆட்டம் போட்டுட்டு எங்கனா அய்யர் கடையில நாலைஞ்சு மசால் தோசை சாப்பிட்டு, வந்து குளிச்சுட்டு கோயில் போய் திரும்பி வந்தா எண்ணெய் தேய்ச்சிவுட்ட பொம் பளை சிங்காரிச்சுகிட்டு நிப்பா. கொழுந்து வெத்தலை, கொட்டைப்பாக்கு, பன்னீர், சந்தனம் ஜாதி சேர்த்த கதம்பம் இன்னான்னவோ இருக்கும் போயேன்.

அவ பன்னிரெண்டு ரூபான்னுவா, நாங்க ஏழு ரூபாய் ஆரம்பிப்போம். அப்புறம் பதினோரு ரூபாய்ல படியும் போயேன். பொம்பளைகிட்ட முடியுமா நம்மால எதுக்கு ஜமீன்தாரய்யா கணக்கு பாக்கறீங்கன்னு பக்கத்துல உரசி உட்கார்ந்து கேட்பா. குறைச்சேயா வணும்னு புடிவாதம் புடிச்சா ஒரு ரூபா குறைப்பாங்க. அப்புறம் வெத்தலை பாக்கு, பன்னீர், சந்தனம் எல்லாத் துக்கும் சார்ஜ் போட்டுருவாங்க. படுக்கை, ஜமுக்காளம் விளககெண்ணெய், பால் அப்படின்னு இன்னொரு கணக்கு சொல்லுவாங்க.

அப்புறம் ஆத்தா, பாட்டி, தாத்தா பெருக்கிறவ, படுக்கை மடிக்கிறவ. பாத்திரம் தேய்க்கிறவ, உள் காவல், வெளிகாவல்னு காசு வாங்குவாங்க. நாப்பத்தி ஏழு ரூபா. சொச்சம் ரெண்டே நாள்ல அவுட்.

அப்புறம் போகச் சொல்ல குந்துமணி பொன்னாவது அவங்கம்மாகிட்ட கொடுத்துட்டு போகணுமாம்.

அய்யோ தன் பொண்ணு இப்படி போயிட்டா ளேன்ற பாவம் அப்பத்தான் என்னைத் தீண்டாத இருக்கு மாம். அரை சவரன் மோதிரத்தை பாக்கு வெட்டியால வெட்டி பேர்பாதி எடுத்துக்குவாங்க.

ஆனா நன்றியுள்ள பொம்பளைங்க ஏமாத்த மாட்டா ளுங்க. தாலி கட்டின பொண்டாட்டி எத்தினி பதவி சமா பக்குவமா நடந்துக்குமோ அதே மாதிரி அதுக்கும் மேல நடந்துக்குவாளுங்க.

கிளம்பி போகச் சொல்ல மறுபடி வரணும்னு கெஞ்சி, கெஞ்சிதான் வழியனுப்புவாங்க. வழில சாப்பிடற துக்கு இருக்கட்டும்னு, பிஸ்கோத், வெல்லச்சீடை, ஓமப் பொடி, வெத்தலை பாக்குன்னு கொடுத்தனுப்புவாளுங்க. போவும்போது குதிரை வண்டியில போனமா வரும் போது நடந்தே மைலாப்பூருக்கு திருப்பிடுவோம்.

சிநேகிதப் பசங்க சாப்பாட்டுல கலந்துக்குவானுங்க. பொம்பளை வந்துட்டா திண்ணைக்குப் போயிடு வானுங்க. என்னாட என்னாட பண்ணன்னு வழி எல்லாம் நச்சரிப்பு அந்தப் பசங்களும் என்னை ஜமீன் தார்ன்னுதான் கூப்பிடுவானுங்க. எனக்கு அப்போ பத் தொம்பது வயசு.

ருசி கண்ட பூனை. அதுவும் பொம்பளை ருசி. மறக்க முடியுமா, வீட்டில வெளியே திருடி, கடன் வாங்கி அவகிட்டப் போனேன். ஏகப்பட்ட பொய் சொன்னேன்.

முத்துமாலை கொண்டாந்தா ஒரு வாரம் இருக்க லாம்னா மூஞ்சியில கருப்புத்துணி சுத்திகிட்டு பூந்தமல்லிப் பக்கம் குஷால்தாஸ் பங்களான்னு ஒரு சேட்டு வீடு. அங்க மாடி ஏறி பூட்டு உடைச்சேன் ஒத்த ரூபாயா வெள்ளி நாணயம் அரை மூட்டை வெச்சிருந்தான். இறங்கி வெளியே போகச் சொல்ல அவன் வீட்டு நாய்கடிச்சிடுச்சு. தொடையில நாலு பல்லு பதிஞ்சுடுச்சு; நான் சுவர்

தாண்டி ஓடினேன். நாயும் பின்னாலே துரத்திச்சு. இருட்டான இடம் வந்ததும் அந்த வெள்ளிப் பண மூட்டையாலே நாய அடிச்சிக் கொன்னேன். நேரா அந்தப் பொம்பளை வீட்டுக்கு போயிட்டேன்.

திருடினதை சொல்லலை. நாய் கடிச்ச இடத்துல மஞ்சா பத்து போட்டு விட்டா. அந்த அரை மூட்டை வெள்ளிப் பணத்துக்கு ஆறு ஏழு முத்துமாலை வாங்கலாம். அவ அதை அப்படியே உள்ள எடுத்து வைச்சுகிட்டா. அடுத்த ஒரு ஆறு நாள் மிருக வெறிதான் போயேன்.

ஏழாம் நாள் ஜுரம் வந்தது. நாய் கடிச்ச இடம் அரிக்க ஆரம்பிச்சது. எட்டாம் நாள் பல்லு கிட்டிப் போச்சு. ஜன்னி மாதிரி தூக்கி போட்டுச்சு. அவ ஒரு கை ரிக்ஷாவில் ஏத்தி ரிக்ஷாகாரன் கிட்ட ஒரு ரூபாயும், என் வீட்டு விலாசமும் கொடுத்தா, என் பாக்கட்டில் ரெண்டு ஒத்த ரூபா வைச்சா. உடம்பை பாத்துக்குங்கன்னு மறுபடி அழுதுகினே அனுப்பிச்சா. அந்த அரை மூட்டைல இருநூற்றி அம்பது வெள்ளிகாசு இருந்திருக்கு. அதை பின்னால தெரிஞ்சுகிட்டேன். வீட்டுக்கு வந்தப்புறம் ஜுரம் நிலை கொள்ளலை அது நாய்கடின்னு தெரிய ரெண்டு நாளாயிடுச்சு. இன்னான்னமோ மருந்து ஊசி. எலும்பும் தோலுமா ஆயிட்டேன்.

நடமாட முடிஞ்ச போது எனக்கு வைத்தியம் பார்த்த கம்பவுண்டர் காதோரம் சொன்னாரு.

"தம்பி உனக்கு வந்த ஜுரம் நாய்க்கடியால இல்லை. அது பொம்பளை சீக்குன்னாரு. பென்சிலின் ஊசி போட்டதால புழைச்சேன்னாரு. அப்ப பென்சிலின் ஊசி வந்த புதுசு. ஒரு பிரிட்டிஷ் ஆபிஸர் கிட்டேயிருந்து மூணு மடங்கு விலை அதிகமா கொடுத்து வாங்கினு வந்தாரு. இனிமே பொம்பளை கிட்டே போன செத்துரு

வேன்னு சொன்னாரு. அத்தோட அவளுக்கு தலை முழு கிட்டு இவளை கல்யாணம் பண்ணிக்கினேன்.

அப்பா பெரிய கொக்கரிப்புடன் திண்ணையில் உட்கார்ந்து யாருக்கோ கதை சொல்லிக் கொண் டிருப்பதை கணேசலிங்கம் அறைக்குள் உட்கார்ந்து ஜன்னல் வழியே கேட்டுக் கொண்டிருந்தான். அப்பாவை ஆச்சரியத்துடன் பார்த்தான். அவனுக்கு இன்னும் இரண்டு நாளில் எஸ். எஸ். எல். சி. பரிட்சை துவங்க யிருந்தது. அம்மா அவன் அருகே வந்து அவன் முதுகில் கை வைத்தாள். மெல்ல எழுப்பி கொல்லைப்புறம் கூட்டிக் கொண்டு போனாள்.

''கணேசு பையா உனக்கு இந்த புத்தி வர வேணாம். ஒரு அம்மா இப்படி சொல்லக்கூடாது இருந்தாலும் சொல்றேன். உங்கப்பன் ஒரு கேடு கெட்டவன். வெறும் வெறிநாய். கீழ்த்தரமான மனுஷன். அவனைப் பெருசா நினைக்காதே. ஆச்சர்யமாய் பார்க்காதே. உன் அப்ப னிடமிருந்து நீ கத்துக்க வேண்டியது ஒன்றுமில்லை. வெளியே போய் நாலு நல்ல மனுஷாள் கிட்ட பழகி நிறைய நல்லது கத்துக்கோ. பொம்பளையை தெய்வமா மதிக்கிறவன் எவனோ அவன் கூட சிநேகிதம் வைச் சுக்கோ.''

''எப்பவும் படிப்பு, படிப்புன்னு இரு. நேரம், காலம் கனிஞ்சு வர போது உனக்குன்னு ஒரு அற்புதமான பொண்ணை நான் தேடிப் புடிச்சு கொண்டாரேன். அவளை தவிர வேறு எல்லா பொம்பளையும் அம்மாவா நினைச்சுக்கோ. பொம்பளை வயித்தெரிச்சலை கொட்டி கிட்டவனுக்கு நல்ல சாவு கிடையாது. அவன் நிம்மதியா இருக்க முடியாது. அம்மா சொல்றது சத்தியம். இதுக்கு உங்கப்பனே உதாரணம் கெட்டுப் போயிடாத ராஜா.''

''தாலி கட்டின கைதான் நல்லா இல்லே. என் நெஞ்சில கொள்ளி வைக்கிற கையாவது சுத்தமாயிருக்

கட்டும். நல்ல புள்ளையா இருடா கண்ணு.'' அவன் முகவாயில் கைவைத்து கெஞ்சியபடி அழுதாள். ஏனோ கணேசலிங்கமும் அழுதான்.

அம்மாவின் அந்த வேண்டுகோளின் பிறகு சகோதரியிடம் கூட அதிகம் பேசுவதில்லை. தனியாக இருந்ததால் டிராயிங் போட பழகினான். ஓவியம் நன்றாக வந்ததால் ஓவியக் கல்லூரியில் சேர்ந்தான். நீர் வண்ணத்தில் கடவுள் படங்கள் வரைவதில் நிபுணன் என்று பெயர் எடுத்தான்.

சொந்தமாயிருந்த நாலு வீடுகளில் ரெண்டு அப்பா காலத்திலேயே விற்றுத் தின்றாகிவிட்டது. மந்தவெளி தென்னந்தோப்பு அடமானத்தில் மூழ்கியது.

கணேசலிங்கத்தின் தங்கையை அம்மாவின் கடைசி தம்பியே கல்யாணம் செய்து கொண்டான். அதற்கு மூன்றாவது வீட்டை விற்க முயன்ற போது, அதை தடுத்து தன் பெயருக்கு மாமா மாற்றிக் கொண்டார். தானே காசு செலவு செய்து குன்றத்தூர் கோவிலில் திருமணம் செய்து கொண்டார். அப்பாவோடு அதிகம் ஒட்டாமல் விலகியிருந்தார்.

கணேசலிங்கத்தின் கல்யாணத்தை முன்னிருந்து நடத்தினார். அவருக்குண்டான மரியாதையாலும், படிப்பு வேலையினாலும்தான் வடிவுக்கரசியை கணேசலிங்கத்திற்கு கொடுக்க சம்மதித்தார்கள். கணேசலிங்கம் ரொம்ப நல்ல பையன் என்று அவர் சொன்னதை நம்பினார்கள்.

அப்போது அப்பாவுக்கு நாற்பத்தி ஐந்து வயது. மதுரைப் பக்கமிருந்து வந்த ஒரு மலையாளத்துப் பொம்பளையோடு தொடர்பு ஏற்பட்டது. இருந்த வீட்டை விற்றுவிடப் போகிறேன் என்று அவர் குதித்த போது, அப்பாவுககு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து அந்த வீட்டை கணேசலிங்கம் தன் பெயருக்கு மாற்றிக் கொண்

டான். அந்த ஒரு லட்சம் ரூபாய் வடிவுக்கரசியின் நகைகள் விற்றுதான் கொடுக்க முடிந்தது. துண்டு விழுந்ததுக்கு வடிவுக்கரசியின் வீடே கடன் கொடுத்தது. ஆனால் பத்திரம் பதிவு செய்யவில்லை. அப்பாவும் மதுரையோடு போனவர் திரும்ப வரலில்லை.

மூன்று லட்சம் பெறுமானமுள்ள வீட்டை மகனுக்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு தருவதாக பெருமையாக சொல்லி விட்டு அப்பா போனார்.

டிராயிங் மாஸ்டராக எண்ணூறு ரூபாய் வேலைக்குச் சேர்ந்து நாள் தவறாமல் வண்ணப் படங்கள் எழுதி மைலாப்பூர் தனவந்தர்களிடம் விற்று கடை போர்டு எழுதுவதில் ராசியானவர் என்று பெயர் பெற்று, கோலங்கள் போடுவது எப்படி, டிராயிங் வரைவது எப்படி. உலகின் பிரசித்தி பெற்ற ஓவியங்கள் என்றெல்லாம் புத்தகம் போட்டு, போட்ட புத்தகமெல்லாம் அரசாங்கத்திடம் விற்று மனிதனாய் நிமிருவதற்குள் பெரும்பாடாகி விட்டது.

திண்ணையை இடித்து, நகைக் கடையும், புடவைக் கடையும் அப்பளக் கடையும் வாடகைக்கு விட்டதுதான் அவர் நேரத்துக்கு செய்த கெட்டிக்காரத்தனமான செயல். இதையும் வடிவுக்கரசியின் உதவியில்லாமல் செய்திருக்க முடியாது. அந்த வாடகை காசில் வீட்டை இழைத்ததில் வாழ்க்கையின் போக்கே மாறிவிட்டது.

அதிகம் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. ஆட்சி மாற ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளம் கிடைத்தது. நீர் வண்ண ஓவியத்திலிருந்து தைல ஓவியம் வரைய கூடுதல் வருமானம் கிடைத்தது. இரண்டு மூன்று பெண்களுக்கு ஓவியம் டியூஷன் எடுக்க அந்த வருமானம் சேமிப்பாயிற்று.

அப்பா ஊரை விட்டுப் போனதற்கு அம்மா அலட்டிக் கொள்ளவேயில்லை. விட்டது சனி என்று இரண்டு வேளை கோவிலுக்குப் போய் விட்டு வந்தாள். பேர னுக்கும், பேத்திக்கும் துர்கையிடம் தினமும் விளக்கு போட்டாள். கணேசலிங்கத்தின் நட்சத்திரம் வரும் போதெல்லாம் அர்ச்சனை செய்தாள். கபாலி அறுபத்து மூவர் திருவிழாவின்போது தேர் இழுத்தவர்களுக்கு விசிறினாள். பல்லக்கு தூக்கியவர்களுக்கு நீர் .மோர் கொடுத்தாள். உள்ளங்கையில் பத்து ரூபாய் வைத்து தேவாரம் ஓதுவார்களுக்கு எதிரே நீட்டினாள். வெண் ணை கலந்த தயிர் சாதம் நூறு பொட்டலங்கள் வீட்டில் எல்லோருடன் உட்கார்ந்து தயார் செய்து தெருவில் கொண்டு போய் தானே வினியோகித்தாள். ஒவ்வொரு நாயன்மாருக்கும் கற்பூரம் காட்டச் சொல்லி கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

உற்சவம் முடிந்த மறுநாள் கணேசலிங்கத்தின்மடியில் தலை வைத்து இது ரொம்ப நல்ல கை, இது ரொம்ப நல்ல கை என்று கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

மேல்மூச்சு வாங்கும் போது வடிவுக்கரசியை திருவாசகம் சொல்லச் சொன்னாள். உன் அப்பா வரும் வரை காத்திருக்காதே எரித்து விடு என்று கட்டளை யிட்டாள்.

நமச்சிவாயம். கபாலீஸ்வரம் நமச்சிவாயம். கபாலீஸ் வரம் நமச்சிவாயம், கபாலீஸ்வரம் என்று எல்லோரையும் உரக்கச் சொல்லச் சொல்லி தானும் சொல்லி உயிர் நீத்தாள்.

அப்பா உடனே வரவில்லை. மலையாளத்துப் பெண் ணோடு ராமேஸ்வரம் போயிருந்தாராம். ஒரு மாதம் கழித்து வந்தார். கொஞ்சம் அழுதார். மனைவியின் நகை யெல்லாம் எங்கே என்று கேட்டார். அவை மகளுக்கு

கொடுக்கப்பட்டது என்று சொன்னதும் அங்கே போய் சத்தம் போட்டார்.

வடிவுக்கரசியின் வீட்டுக்கு போய் கணேசலிங்கத்தின் பெயர் சொல்லி, கணேசலிங்கம் அவசரமாய் பணம் கேட்டதாய் மூவாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு வீட்டிற்கே வராமல் மதுரைக்கே போய்விட்டார்.

''நாப்பது சவரன் நகையை உங்கம்மா பேத்திக்கு கொடுத்திருக்கான்னு தெரிஞ்சா இந்த வீட்டை விட்டு நகர்ந்திருக்க மாட்டார். அத்தினி திட்டுக்கும் வாயே திறக்காத உங்க தங்கச்சியும், தங்கச்சி புருஷனையும் கோவில்ல வைச்சு கும்பிடணும்.''

''அதெல்லாம் வேணாம். காலா காலத்துல உன் பெண்ணை அந்த நாப்பது சவரனோட எங்க ஊட்டுக்கு அனுப்பு. என் புள்ளைக்கு கட்டிக் கொடு.''

கணேசலிங்கத்தின் தங்கை வடிவுக்கரசியிடம் ஒப்பந்தம் செய்து கொண்டாள். இந்த வீட்டில என் மருமகளுக்கு பங்கு உண்டு என்று கோடி காட்டினாள்.

இப்போது வேறு யாரோ பங்கு கேட்டு நிற்கிறார்கள்.

கணேசலிங்கம் அரை நாள் லீவு போட்டு விட்டு வீட்டிற்கு போனார்.

## 4

''எங்களையெல்லாம் சுத்தமா மறந்துட்டீங்ளாக்கும்.'' அந்த மதுரை மலையாளத்துப் பெண் வரவேற்பு தொனியில் குறை கூறிப் பேசினாள். அதற்கு என்ன பதில் சொல்வது என்று கணேசலிங்கத்திற்கு தெரியவில்லை.

அவர் மனைவியை ஏறெடுத்துப் பார்த்தார். அவர் மனைவி வடிவுக்கரசி அவருக்கு மட்டும் தெரிகின்ற ஒரு கோணத்தில் சமையலறையில் போய் நின்று கொண்டாள். வந்த விருந்தினருக்குத் தெரியாமல் புருஷனோடு பேச அவள் அந்த இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்வது வழக்கம்.

"இதுதான் உன் தங்கச்சி. பேர் சுசீலா. விழுந்து கும்புட்டுக்கடி" அம்மா கட்டளையிட அந்தப் பெண் சடக்கென்று எழுந்து வேகமாய் நடந்து கணேசலிங்கம் காலில் மண்டியிட்டு வணங்கி மறுபடியும் அம்மாவுக்கு அருகில் போய்விட்டது. இப்போதும் என்ன செய்ய வேண்டும் என்று அவருக்கு தெளிவாய் தெரியவில்லை.

அவர் மனைவி வடிவுக்கரசி வாய் திறக்காமல் சிரித்து தலையில் அடித்துக் கொண்டதற்கும் காரணம் புரிய வில்லை. அந்தப் பெண்ணுக்கு பதினாறு, பதினேழு வயதிருக்கும். முகம் குழந்தையாக இருந்தாலும் உடம்பில் ஒரு அபரிமிதமான வளர்ச்சி இருந்தது.

ஆனால் அந்த மலையாளத்துப் பெண்மணி அதிகம் மாறவில்லை. உடம்பினுடைய கட்டுமானம் அதிகம் கலையவில்லை. கன்னம் ஒட்டி முன்பக்கம் லேசாய் நரைத்திருந்தது. பேச்சில் மலையாள வாசனை குறைந்து மதுரைத்தமிழின் மணம் தூக்கலாக இருந்தது.

அப்பாதான் அடித்து நொறுக்கப்பட்டவர் போலிருந் தார். தலைமுடி உதிர்ந்து பற்கள் விழுந்து கன்னம் ஒட்டிப் போய், முதுகு கூன் போட்டு, தடித்த சோடா புட்டி கண்ணாடி அணிந்து பழுத்த கிழவனாய் காட்சி யளித்தார். அவரும் லேசான அதிர்ச்சியில் இருந்திருக்க கூடும் நெடுநாள் கழித்து அந்த வீட்டிற்குள் நுழைவதால் அவர் வாழ்க்கையின் வாலிப ஏடுகள் அவர் நெஞ்சுக்குள் புரட்டப்பட்டிருக்க கூடும்.

தேர்ட் பார்ம் முதல் தடவை பெயிலான போது இந்த இடத்தில்தான் எங்கப்பனிடம் அடி வாங்கினேன் என்று ஹாலில் ஒரு மூலையை வெகு நாள் முன்பு அவர் காட்டியிருந்தார். அந்த மூலையில்தான் அப்பா இப்போது உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பா உட்கார்ந்த விதம் அவர் மீது பரிதாபத்தை கொடுத்தது. நல்லவனாக இருந்தாலும், கெட்டவனாகயிருந்தாலும் வாழ்க்கை இப்படித்தான் வயோதிகத்தைக் காட்டி வஞ்சித்து விடுகிறது.

''உங்கப்பா முன்ன மாதிரியில்ல அவருக்கு உடம்புக்கு முடியலை. ராத்திரி இருமஆரம்பிச்சா ரெண்டு மணி நேரம் விடாத இருமறார். இருமல் நிக்க மாத்திரை கொடுத்தா வயிறு கலங்கிடுது, வேட்டியோட போயிடுறார். ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணி வைத்தியம் பாக்கறதுக்கு வசதியில்லை.''

''இப்பஅவரை விட்டுட்டுப் போகணும்னு வந்துஇருக்கீங்களா'' வடிவுக்கரசி வீட்டினுள் இருந்தபடியே மடக்கினாள் போல் ஒரு கேள்வி கேட்டாள். அந்த கேள்வியால் அங்கே நடந்த பேச்சு சூடு பிடித்துக் கொண்டது.

''நான் ஏன் அவரை விட்டுட்டு போவப் போறேன். அவரை இங்க விட்டுட்டுப் போனா யார் பார்த்துக்குவா, அந்தம்மா மகராசி அவர் பொண்டாட்டியிருந்தா இதான் சாக்குன்னு விட்டுட்டுப் போயிருப்பேன். அந்தம்மா இல்லாதபோது நான்தானே பார்த்துக்கணும். நான் ரெண்டாவதோ, மூணாவதோ, நாலாவதோ. புருஷன், புருஷன் தானே. அவருக்கு பொறந்த பொண்ணு இவருக்கு தங்கச்சிதானே. இங்கே விடறதாயிருந்தா நான் ஏன் வந்து இங்கே நடுக்கூடத்தில உட்கார்ந்துனுகிறேன். வண்டி ஏத்தி வுட்டுட்டு தந்தி கொடுத்திருப்பேன்''

''அப்போ என்னாத்துக்குதான் இப்ப நடுக்கூடத்தில உட்கார்ந்து இருக்கீங்களாம்.' வடிவுக்கரசி உள்ளிருந்தபடியே கேட்டாள். அவள் குரலில் காரம் தெறித்தது.

ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டு உடனடியாய் பதில் பேச, அந்த பதிலையும் தாக்குதலாய் செய்ய எல்லோராலும் முடியாது. வடிவுக்கரசி போன்றவர் களால்தான் முடியும்.

வடிவுக்கரசியின் அம்புக்கு, பதில் அம்பு மலையாளத் துக் காரியிடமிருந்து வந்தது.

''உங்க கை சோறு தின்ன நாங்க வந்திடலை. நீங்க குழந்தைகளுக்கு கூட கூழு கொடுக்காதவங்கன்னு தெரியும். என் புருஷன் அவன் புள்ளையை பார்க்கணும்னாரு. என் புள்ளை நல்லவன், நான் சொன்னா கேட்பான் அப்படின்னாரு. அவரு கேட்கறதை கேட்கட்டும். அவர் கொடுக்கறதை கொடுக்கட்டும். நாங்க வரும் போது ஓட்டல்ல வண்ணமா சாப்பிட்டுதான் வந்தோம்.''

''ஏங்க என்னா வேணும்னு கேளுங்களேன்'' வடிவுக் கரசி புருஷனைப் பார்த்துக் கட்டளையிட்டாள்.''

''என்னாப்பா''

அப்பா காக்கை போல் தடித்த கண்ணாடி வழியே எல்லோரையும் திரும்பி திரும்பி பார்த்தார்.

''என்னான்னு கேக்கிறாங்களே சொல்லேன்.''

''நீயே சொல்லு''

''நான் சொன்னாதான் பொல்லாப்பு வந்துடுதே. நீ யார் கேட்கிறதுக்குன்னு தூக்கி சொருகிக்கினு சண்டைக்கு வராங்களே''

''யாரும் சண்டைக்கு வரலை என்னா வேணும்னு சொல்லுங்க.'' கணேசலிங்கம் லேசாய் அதட்டினான்.

''ஒன்னுமில்லிங்க, உங்களுக்கும் குழந்தையிருக்கு, நீங்களும் பொண்ணு பெத்து இருக்கீங்க, இப்ப என்னா அதுக்கு பன்னிரெண்டு வயசு இருக்குமா. பொண்ணு

பெத்தவங்களுக்குத் தெரியும் பொண்ணு பெத்தவங்களோட கஷ்டம். சுசீலாவுக்கு வரன் திகைஞ்சு வந்திருக்கு. பையன் டிரான்ஸ்போர்ட்ல கண்டக்டராயிருக்கான். கவர்மெண்ட் சம்பளம். ஒரேயொரு அக்கா அவளை கட்டிக் கொடுத்துட்டாங்க. அந்தப் பையனுக்கு சுசீலாவ புடிச்சுப் போய் ரெண்டு மூணு தடவை வந்து பாத்துட்டு போயிட்டான். பதினைஞ்சு சவரன் நகை, கட்டில், பீரோ, பாத்திரம், பண்டம் கேக்கிறாங்க. கல்யாணத்துக்கு பாட்டு கச்சேரி வைச்சு முன்னூறு பேருக்கு சாப்பாடு போடுன்றா. நீங்க பெரியவங்க நின்னு நடத்தி கொடுக்கணும். உங்கப்பாவுக்கு தள்ளாமை வந்துடுச்சி. அவர் சார்பா நீங்க சபையில நிக்கணும்.''

''அது எப்படி நாங்க சபையில நிக்கிறது. இவர் நாப்பத்தி எட்டு கல்யாணம் பண்ணிக்குவாரு. நானூறு பொண்ணு பெத்துக்குவாரு. நாங்க ஒவ்வொரு சபையில ஏறி மரியாதை பண்ணனும். தேவைதானா எங்களுக்கு.'' வடிவுக்கரசி சீறினாள்.

''எம்மா வடிவுக்கரசி நான் உன்னோட பேசலை. என் புருஷன் என்னா சொல்ல நினைக்கிறாரோ, அதை உன் புருஷன்கிட்டச் சொல்றேன்.''

''உன் புருஷனுக்காக நீ பேசற மாதிரி என் புருஷனுக்காக நான் பேசறேன். எங்களுக்கும் உங்க பொண்ணுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.''

''அவ உங்க மாமனாருக்கு பொறந்தவதான். உங்க புருஷனுக்கு தங்கச்சிதான் ''

''அதை நீங்க சொன்னா போறுமா. ஊரு சொல்லணும். இன்னைககு மதுரையிலிருந்து வந்த மாதிரி நாளைக்கு மன்னார்குடியிலிருந்து வருவாங்க. இவ உங்க மாமனாருக்கு பொறந்தவதான்னு குண்டாயாரையாவது ஒரு பொண்ணை காட்டுவாங்க.''

''ஏம்பா இப்பனா வாயைத் திறந்து நீயாச் சொல்றியா. இல்லை நானா வாயைத் தொறந்து அவுத்தது, ஆடனது எல்லாம் சொல்லட்டுமா.'' அந்த மலையாளத்துக்காரியின் கண்களில் கோபம் மின்னியது.

மிக ஆபாசமான ஒரு சொற்பொழிவை அவள் நடத்த தயாராயிருப்பது தெரிந்தது.

கணேசலிங்கம் பேச வாயெடுப்பதற்கு முன் அவருடைய அப்பா பேசினார்.

''சுசீலா என் பொண்ணுதான். அவளுக்கு நீ எதுனா செய்யணும்பா.''

வீடு மௌனமாகியது.

''என்னா செய்யணும்.''

''சட்டப்படி சுசீலாவுக்கு அவுங்க அப்பா சொத்துல பங்கு உண்டு.'' மதுரைக்காரி அடுத்த பீரங்கியை முழங்கினாள்.

''எந்த சொத்துல?'' வடிவுக்கரசி பதிலுக்கு முழங்கினாள்.

''ஏன் இந்த சொத்துலதான். இந்த வீட்டுலதான்.''

''இதுன்னாடி கூத்து. யார் சொத்துக்கு யார் பாத்தியதை கொண்டாடறது. புள்ளைக்கு தூக்கியா கொடுத்தாரு. லட்ச ரூபாய்க்கு வித்துட்டு இல்லை போனாரு. அந்த லட்ச ரூபாய் புரட்ட நாங்க பட்டபாடு எங்களுக்கும் அந்த கபாலிக்கும்தான் தெரியும்.

''லட்ச ரூபாய்க்கு ஒன்னும் வித்துடலை. அடமானம் வைச்சா மாதிரிதான் எழுதி கொடுத்தாங்க. மிச்சகாசு இன்னா வறது.''

''ஐயோ, ஐயோ, இன்னாங்க இது. இவ்வளவு அநியாயமா பேசறாங்க. சும்மா உட்கார்ந்துனு இருக்கிங்களே.'' கணேசலிங்கத்தை சமையலறையிலிருந்து வந்து உலுக்கினாள்.

"என்னா செய்துடுவாரு அவரு. வெட்டிடுவாரா." மலையாளத்துக்காரியும் தரையிலிருந்து எழுந்தாள்.

தனக்கு சம்பந்தமேயில்லாக ஒரு நாடகத்தில் தான் பங்கு வகிக்க வேண்டிய நிர்பந்தம் போல் கணேசலிங்கத்துக்கு தோன்றியது.

உட்கார்ந்தபடியே மனைவியை கையமர்த்தினார்.

"என்னாப்பா இது" வெறுத்துப் போனது போல் தகப்பனிடம் பேசினார்.

"நான் அடமானம் மாதிரி தானே எழுதிக் கொடுத்தேன்."

"அப்படியா, போ, போய் வக்கீல் நோட்டீஸ் அனுப்பி சிவில் கோர்ட்ல கேஸ் போடு. அடமானமா விற்பனையான்னு அங்க தீர்ப்பாகட்டும்." கணேசலிங்கம் நிதானமாய் பேசினார்.

"ஏன் நாங்க போட மாட்டோம்னு பாக்கறீங்களா?"

"நீங்க கேஸ் போடுங்க. அதான் எனக்கு நல்லது. நீங்க எங்கப்பாவுக்கு சட்டப்படியான பொம்பளையே இல்லை. இந்த குழந்தை எங்கப்பாவுக்கு பொறக்கவேயில்லைன்னு நான் பக்கீல் வைச்சு வாதடறேன். எங்கப்பனுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையும் கப்பலேறட்டும்."

மறுபடியும் வீடு மவுனமாயிற்று.

"என்னாட இப்படி பேசற." அப்பா தழுதழுத்த குரலில் கையேந்திப் பேசினார்.

"அவங்க சட்டம் பேசறாங்களே."

"சுசீலா உன் தங்கச்சிடா."

''அதுக்கு நான் என்னா செய்யனும்.''

''கல்யாணத்துக்கு எதுனா செய்ய வேணாம். நீயும் பொண்ணு பெத்தவன் தானே''

''நாங்க இன்னா மொத்த வீடும் எங்களுக்கு வேணும்னா கேட்டோம். மூணு பங்கா பிரிச்சு அதுல ஒரு பங்கு சுசீலாவுக்கு கொடுக்கணும்னு சொல்றோம்.''

''அது முடியாது. அந்த மாதிரி ஒரு விஷயம் கிடையாது.''

''அப்ப எதுனா காசாகொடுத்துடுங்க.'' மலையாளத்துக்காரி இறங்கி வந்தவள் போல பேசினாள்.

''எங்கயிருக்குது காசு. நான் என்னா குஷால் தாஸ் ஊட்டுல திருடியா சம்பாதிககிறேன். எனக்கு வாத்தியார் வேலை. வாய்க்கும், வயித்துக்கும் வருமானம் சரியா இருக்குது. துட்டு கொடுன்னா நான் எங்க போவேன்.''

''மூணு லட்சமாவது வாங்கித் தரேன்னுதான் கூட்டியாந்தாரு.''

''மூணு லட்சமாவது'' கணேசலிங்கம் வாய் பிளந்தார்.

வடிவுக்கரசி சுவரோரம் உட்கார்ந்து விசும்ப துவங்கினாள்.

''உனக்கு கஷ்டம்தான் எனக்குத் தெரியும். கேஸ் எல்லாம் போட்டு காரியமாவது அதுவும் தெரியும். எதுனா செய்து எங்கனா புரட்டி ஒரு ஒன்னரை லட்ச ரூபாய் கொடுத்தினா அந்த பொண்ணு கழுத்தில தாலி ஏறும். இதை உன்கையா நினைக்கலை. காலா புடிச்சி கேக்கிறேன். இல்லேன்னு சொல்லிடாத.'' அப்பா தழுதழுத்த குரலில் பேசி கை பிடித்ததும் கணேசலிங்கத்திற்கு குபுக்கென்று கண்ணீர் வந்து விட்டது.

இந்த உருகலுக்குத்தான் அந்த மலையாளத்துக்காரி காத்திருந்தாள் போலிருக்கிறது

"பொறந்தது புள்ளையாயிருந்தா இந்தப்பக்கம் தலை வைச்சு கூட படுத்திருக்க மாட்டேன். வெறும் கோவணத்தைக் கட்டி கேரளாவுக்கு அனுப்பி சம்பாதிச்சுனு வாடான்னு அனுப்பியிருப்பேன். பொறந்தது பொட்டையா பொறந்துடுச்சே. புடவை, ரவிக்கை, பாவாடை, பாடீஸ்ன்னு வேணும். மொட்டையடிக்க முடியாதே. எண்ணை வைச்சு சீவணுமே. ஆம்பளையாயிருந்தா அரணா கயிறு போதும். பொம்பளைக்கு காதுல, மூக்குல கழுத்துல நகை வேண்டியிருக்கே. நாங்க அடாவடி பண்ண வரலை தம்பி. எப்படிறா கல்யாணத்தை முடிக்கப் போறோம்னு அச்சப்பட்டு வந்து நிக்கிறோம். பொண்ணு பெத்தவன் எல்லோரும் ஒருநாள் இல்லை ஒருநாள் அச்சப்பட்டுத்தான் ஆவணும்."

மறுபடியும் வீட்டில் மௌனம் நிலவியது.

மேற்கொண்டு அந்தப் பேச்சை எப்படி தொடருவது என்று கணேசலிங்கத்திற்குத் தெரியவில்லை.

"சாப்பிட்டீங்களா" சம்பந்தமில்லாமல் கேட்டார்.

"காலையிலேயே கற்பக விலாஸ் சாப்பாடு சாப்பிட்டோம். மணி நாலாச்சா. எங்கனா காபி சாப்பிட்டு கபாலி கோயில் போய் வந்துடறோம்."

"எங்கனா போய் சாப்பிடுவானேன். வடிவு காபி போடு." மனைவிக்கு கட்டளையிட்டார். அவர் மனதில் எங்கோ ஒரு மூலையில் அந்தப் பெண் சுசீலாவுக்கு தான் எதாவது செய்தாக வேண்டும் என்று தோன்றியது.

ஆனால், என்ன செய்ய வேண்டும், எவ்வளவு செய்ய வேண்டும். எப்போது செய்ய வேண்டும் என்றுதான் தெரியவில்லை.

அவர்கள் காபி குடித்துவிட்டு கீழே இறங்கிப் போனார்கள். அப்பா அந்த சுசீலாவின் தோளைப் பிடித்தபடியே தள்ளாடி கோவிலுக்குப் போவது தெரிந்தது.

திருவிழாவில் தீப்பந்தம் சுற்றிப்போன முதலியார், கபாலி, கபாலி என்று தோள்புடைக்க தேர் இழுத்த முதலியார், எவளாவது இரவு படுக்கைக்கு கிடைக்க மாட்டாளா என்று கையில் காசோடு அலைந்து திரிந்த முதலியார் மூன்று ஏக்கர் தென்னந்தோப்புகளையும், கோட்டை மாதிரி இரண்டு வீடுகளையும் அழித்த புண்ணியவான். முழங்கால் மடிக்க முடியாமல் அகட்டி, அகட்டி நடந்து போவதைப் பார்த்து கலங்கினார். தனக்கும் ஒரு நாள் இந்த நிலை வரும் என்று தோன்றியது.

வடிவுக்கரசி மெள்ள அருகே வந்து அவர் முகத்தைத் தொட்டாள்.

''என்னாங்க பண்ணப் போறீங்க.''

''தெரியலை.''

''எவ்வளவு பண்ணப் போறீங்க''

''தெரியலை.''

''எப்படி பணம் புரட்டப் போறீங்க''

''உன் நகைங்க தான். வேற வழி''

''உள்ள வாங்க''

''எதுக்கு''

''எவ்வளவு நகையிருக்குன்னு பாத்துடலாம். ஒரு லட்சமாவது கொடுக்க வேணாமா'' அவள் திரும்பி உள்ளே நடந்தாள்.

கணேசலிங்கம் நாலே எட்டில் மனைவியை நெருங்கினார். அவளை தனக்காய்த் திருப்பினார். இடுப்பில் கைகொடுத்து இறுகத் தழுவி அவள் உதட்டில் முத்தமிட்டார்.

''எனக்கு வேற எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலைடி'' அவள் தலையை கோதிவிட்டார். வடிவுக்கரசி அவர் நெஞ்சில் சாய்ந்து கிடக்க புருஷனும், மனைவியும் சற்று நேரம் அன்பில் கட்டுண்டு கிடந்தனர்.

அன்பு என்பது ஒரு உணர்வு. அதை எப்படி சொல்ல முடியும். உடம்பால்தான் சொல்ல முடியும். ஒரு உடம்பின் மீதுதான் பொழிய முடியும்.

## 5

''அடமானம்னு வைக்கிறதாஇருந்தா ஒரு கிராமுக்கு மூன்னூறு ரூபாய்தான் தரான். பண்டாபீஸ்ல கொஞ்சம் கூடுதலா ஒரு சவரனுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் தராங்க. நம்ம குழந்தைக்கு நாம போட்ட நகை தொடவேணாம். நான் போட்டுகினு வந்ததையும் தொட வேணாம். தடுக்குனு உங்கம்மா கொண்டு வந்து கொடுத்தாங்க பாருங்க. நாப்பத்தி மூணு சவரன் அதை அப்படியே பண்டாபீஸ்ல வைச்சு காசு கேட்போம். உங்கம்மா கொடுத்த நகையில் பொடி நகை கம்மி. நமக்கு பொண்ணு பொறந்த உடனேயே கொடுத்தாங்க பாருங்க அந்த கல்லு நெக்லெஸ் அதைப்போட வேணாம்.'' வடிவுக்கரசி பீரோவைத் திறந்து நகைப் பெட்டியை எடுத்து தரையில் உட்கார்ந்து கொண்டாள். எப்போது

நகைப் பெட்டியை எடுத்தாலும் தரையில் உட்கார்ந்து கொள்வதே வடிவுக்கரசியின் வழக்கம்.

பொழுது போகாத நாட்களில் கூட நகைப்பெட்டியை எடுத்து தரையில் உட்கார்ந்து தன்னிடம் உள்ள நகைகளைப் பார்த்து பார்த்து சந்தோஷப்படுவாள். இந்த சந்தோஷத்தை அடுத்த வீட்டுப் பெண்மணியோடு பகிர்ந்து கொள்ள முடியாது. சொந்த தங்கையோடு கூட அதிகம் பேச முடியாது. வடிவுக்கரசி அநேகமாய் தன் மகனோடும். மகளோடும் உட் கார்ந்து நகை கடை பரப்புவாள். அம்மாவும் பொண்ணும் மாற்றி மாற்றி நகைகளை போட்டுக் கொண்டு மறுபடி பெட்டியில் வைப்பார்கள். வடிவுக்கரசி தனியே அமர்ந்து மிகுந்த புலம்பலோடு அந்த நகைகளை எடுத்து தனியே வைத்தது பார்க்க பாவமாக இருந்தது.

இந்த உலோகத்தின் மீது பெண்களுக்கு இருக்கும் ஆசையால்தான் உலக வாணிபமே நடந்து வருகிறது. தங்கம் ஒரு முக்கியமான உலோகம் எனக் கொண்டது ஒரு முட்டாள்தனம். ஏதோ ஒரு காலகட்டத்தில் அலுமினியத்திற்கு வெள்ளியைவிட மதிப்பு அதிகமா இருந்ததாம். அலுமினியப் பாத்திரங்களை அரசக் குடும்பங்கள் மட்டுமே பயன்படுத்தலாம் என்று இருந்ததாம். அலுமினியம் அதிகம் கிடைத்ததும் அரசகுடும்பத்து பாத்திரங்கள் தெருவில் தூக்கிப் போடப்பட்டனவாம்.

திடீரென்று பூமியிலிருந்து இருபது அடிக்கு இருபது அடி பாறை ஒரு இருபது அடி நீளத்தில் சொக்கத் தங்கமாக கிடைத்தது என்றால் இந்த நகைகள், பாத்திரங்கள், சிம்மாசனங்கள் தெருவுக்கு வந்து விடும். நெல்லைக் கொத்த வரும் கோழியை தங்கக் காதணி கழற்றி துரத்துகின்ற ஒரு காலம் வரும்.

தென் ஆப்பிரிக்காவில் மிகப்பெரிய வைரக்கல் கிடைத்தது என்றும், அந்த வைரக்கல் சந்தைக்கு வந்தால்

பல லட்சக் கணக்கான வைரக் கம்மல்கள் செய்யப்படலாம் என்றும் அதனால் வைர மார்க்கெட் பாதிக்கப்படும் என்றும் புரிந்துகொண்டு அந்தவைரக்கல்லை நடுக்கடலில் வீசி எறிந்து விட்டார்களாம்.

ஆனால், தங்கம் வெகு நாளாக பூமியில் ஆட்சி செய்து வருகிறது, பல யுத்தங்களுக்கு காரணமாக இருந்திருக்கிறது. பல கொலைகள் நடந்துள்ளன. உலோகம் உண்ண முடியாது. பசியாற்றாது. ஆனால், உணவின் விலையைக் கூட இந்தஉலோகம் தான் கட்டுப்படுத்துகிறது.

புருஷனும் மனைவியும் அவசர அவசரமாக மைலாப்பூர் சாஸ்வத நிதிக்கு போனார்கள். நகைகளை எடை போட்டார்கள். ஒரு லட்சத்து பன்னிரெண்டாயிரம் ரூபாய் காசு கிடைக்கும் என்றுசொல்லப்பட்டது. அனேகமாய் அந்த சாஸ்வத நிதியில் எல்லாரையும் கணேசலிங்கத்திற்கு தெரியும்.

"என்னா திடும்னு பெரிய தொகையா கேக்கிற பொண்ணுக்கு கல்யாணம் பண்ற மாதிரியான வயசு கூட இல்லையே."

"அவனுக்கு என்னாப்பா சொந்த வீட்டு மகராசன், மாடி மேல மாடியா கட்டறதுக்கு நகை அடமானம் வைக்கிறான். வீடு கட்டி அட்வான்ஸ் வாங்கி இந்த மாதிரி ரெண்டு மடங்கு நகையை பொண்டாட்டிக்குப் போடுவான்."

அவர் வயது ஒத்த, அவருக்கு நன்கு தெரிந்த பண்டா பீஸ் நண்பர்கள் அவர் மனைவி எதிரேயே அவரைக் கேலி செய்தார்கள்.

ஆனால், உள்ள நிலமையை அவர்களுக்கு எப்படி சொல்வது. இங்கே வேலை செய்கிறவர்கள் பல பேருக்கு

அப்பாவைத் தெரியும். அப்பாவின் ஆட்டங்கள் தெரியும். அப்பா மதுரைக்குப் போனதும் அவரைப் பற்றி அவர்கள் மறந்து போனார்கள். இப்போது அப்பா வந்திருப்பதை பற்றியும் இவர்களிடம் சொல்ல முடியாது.

ரொம்ப அவசரம்னு வெறுமனே சொல்லும் போது, காரணம் விளக்காத போது, நம்மகிட்ட கூட சொல்ல மாட்டன்றான் பார் என்கிற ஒரு அன்னியம் ஒரு சின்ன அலட்சியம் இந்த நண்பர்களுக்கு வரக்கூடும்.

இப்பெல்லாம் நகை பேர்ல கடன் கொடுக்கறதில் லைப்பா என்று இந்த நண்பர்கள் ஏதாவது இடைஞ்சல் தரக்கூடும்.

"மடிப்பாக்கத்துக் கிட்டக்க நிலம் ஒன்று விலைக்கு வருது, வாங்கிப் போட்டுரலாம்னு ஐடியா பண்றேன். தங்கத்தை விட நிலத்துக்கு இப்ப மரியாதை. அதான் இப்பமே பணம் கிடைக்குமா?"

"மணி அஞ்சு பத்து. இப்பஎப்படி துட்டு கிடைக்கும். மூணு பேர் நகை எடைபோட்டு மதிப்பு போடணும். கையெழுத்துப் போடணும். சட்டப்படி தனித்தனியா உரசிப் பார்க்கணும். இது கணேசலிங்கம் நகைன்னற துன்னால ஒருத்தர் மட்டும் உரசிப் பார்ப்போம். மத்த ரெண்டு பேர் கூட இருப்போம். கையெழுத்து போட்டு எத்தினி கொடுக்கலாம்னு எழுதி சேர்மேனுக்கு அனுப்பிடு வோம். இப்ப கொடுத்தினா நாளை காலை பத்து மணிக் குள்ள துட்டு வாங்கிடலாம். நாளை காலைல கொடுத் தினா காசு பார்க்க ஒரு மணி ஆயிடும். அதுவும் கணேச லிங்கம் இன்றதுக்காக." அவர்கள் நகையை எடைபோட ஆரம்பித்தார்கள்.

ஒவ்வொரு நகை எடுக்கும் போதும் புருஷனுக்கும் மனைவிக்கும் ஒவ்வொரு விதமான நினைவுகள் வந்தன.

''என்னா சார் உங்கப்பா போறாரு. நீங்க இங்க உட்கார்ந்துட்டு இருக்கீங்க'' பண்டாபீஸ்காரன் திடீரென்று கேள்வி வீசினான். குழந்தை நக்கிக் கொண்டிருந்த பலூன் சட்டென்று வெடித்தது போல் தூக்கி வாரிப் போட்டது.

புருஷனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்து மிரள, மிரள விழித்தார்கள்.

'என்னாங்கடா இது புதுக்கதையா இருக்கு. பத்து வருஷமா ஊர்ல இல்லாத அப்பா வந்திருக்கார். நீ நகையை அடமானமா வச்சு லட்ச ரூபாய் கேட்கிற. கணேசலிங்கம் என்னா பிரச்சனை உனக்கு'' நண்பர்கள் அக்கறையும் ஆவலுமாய் கேட்டார்கள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. அவங்கப்பா சும்மா வந்திருக்காரு இது நிலம் வாங்கிறதுக்கு.'' வேகமாய் சுதாரித்துக் கொண்டு வடிவுக்கரசி நிதானமாய் பதில் சொன்னாள்.

''உங்கப்பாவால வீட்டுக் கடன் பட்டுட்டு நீ பட்ட கஷ்டம் நல்லாத் தெரியும். மறுபடி அப்படி மாட்டாத. உங்கப்பா திருந்தற ஜாதியில்லை. இப்பவும் புதுசா கல்யாணம் கட்டி எவ கூடயாவது...''

என்னதான் தகப்பன் அயோக்கியன் என்றாலும் பிறர் சொல்ல கேட்கும் போது மனசு மிகவும் வலித்தது. அப்பாவின் மீது கோபம் வருவதற்குப் பதில் தன் மீதே பரிதாபம் வந்தது.

''தப்பா நினைச்சுக்காதீங்க கணேசலிங்கம் சிநேகிதன் என்ற முறையில் பேசிட்டேன்.''

நகைகள் கொடுத்ததற்கான ரசீது வாங்கி புருஷனும், மனைவியும் வெளியே வந்தார்கள்.

''ஊர் அப்படித்தான் பேசும். அதெல்லாம் மனசுல வைச்சுக்காதீங்க.'' வடிவுக்கரசி அவர் முகத்தைப் பார்த்தபடியே புறங்கையை தொட்டாள்.

''இன்னிக்கு அவமானப் படணும்னு எழுதியிருந்தா அவமானப்பட்டுத்தான் ஆகணும். வேற வழியில்லை.'' அவர் அலுப்போடு பேசினார்.

''நீ வீட்டுக்குப் போ வடிவுக்கரசி. பசங்க வந்துடும். நான் கோயிலுக்குப் போய் அப்பா எங்க இருக்கார்னு பார்த்துட்டு வந்துடறேன்.'' அவர் பிரிந்து கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

உலகில் வேறு எந்த அப்பாவைப் பற்றியும் இத்தனை மோசமாய் பேசப்பட்டதில்லை என்று அவருக்குத் தோன்றியது. பண்டாபீஸ் ஒட்டிய குறுகிய தெருவில் நடந்தார்.

மத்திய தர வகுப்பினர் இருக்கும் பகுதியில் காய்கறிக் கடையும், பத்திரிக்கை கடையும், வெற்றிலை பாக்கு கடையும் வந்து விடுகின்றன.

மைலாப்பூர் அந்தணர்கள் அதிகம் வசிக்கும் பகுதி. அந்தணர்கள் இருக்கும் பகுதியில் காய்கறி கடைகள் முதலில் வந்து விடும். வெறும் சோறு அவர்களால் சாப்பிட முடியாது. பொறுக்கி எடுத்து நல்ல காய்கறிகள் சாப்பிடுவதில் அவர்கள் விருப்பமுடையவர்கள். விருந்து, விருந்து என்று சுற்றத்தோடு சாப்பிடுகிறவர்கள்.

ஆனால், மைலாப்பூரில் காய்கறி மார்க்கெட் இந்த பத்து வருடத்தில் மூன்று மடங்காய் பெருத்துப் போயிற்று. மைலாப்பூர் வீட்டை விற்று விட்டு வெளியேறியவர்கள் கூட அபிராமபுரம், அண்ணாமலைபுரம் என்று தள்ளிப்போனவர்கள் கூட காய்கறி வாங்குப் சாக்கை வைத்து மைலாப்பூர் வந்து விடுகிறார்கள்.

குளத்தை உள்ளடக்கின பெரிய மாட வீதிகள் கொண்ட மைலாப்பூரில் தங்கினவர்களுக்கு வேறு எங்கேயும் தங்கப் பிடிக்காது.

மயில் ஆர்ப்பு ஊர் என்பதே மைலாப்பூர் என்று மாறிற்று. இரண்டாயிரம் வருடத்துக்கு முன்பு ஒரு கிராமமாய் மைலாப்பூர் இருந்திருக்கிறது. கந்தபுராணத்திலும், கருட புராணத்திலும் இதைப் பற்றி பெருமையோடு பேசப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து பிறந்து இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாலமி என்கிற புவியியல் அறிஞன் தன் பயணக் கட்டுரையில் மாலியார்பா என்று மைலாப்பூரைக் குறிக்கின்றான். ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமழிசை ஆழ்வார் மாமயிலை என்று இந்த ஊரைக் கூப்பிடுகிறார். அப்பர், சம்பந்தர் எல்லோரும் இதை மயிலை என்று குறிப்பிடுகிறார்கள். நந்திக் கலம்பகம் இதை மயிலாப்பூர் என்று குறிப்பிடுகிறது. திருவள்ளுவர் பிறந்து வளர்ந்த இடமென்றும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான வாயிலார் நாயனார் வாழ்ந்த இடமென்றும், ஏசுநாதரின் சீடர் செயிண்ட்தாமஸ் வாழ்ந்து மறைந்த இடமென்றும் திருஞான சம்பந்தர் பத்து பாடல்கள் பாடி இறந்துபோய் அஸ்தியாக இருந்த பெண்ணை உயிர்பிக்கச் செய்த தலமென்னும் பல பெருமைகள் உண்டு.

இவை நடந்த காலத்தில் இந்தக் கோயில் இல்லை. இந்தக் கோயில் முன்னூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. பழமையான மயிலைக்கோயில் சாந்தோம் சர்ச் உள்ள பகுதியில் இருந்தது என்றும், போர்ச்சுக்கீசியர் அதை கைப்பற்றி இடித்து விட்டு, கோட்டை கட்டினார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கோவில் புதிதாகக் கட்டப்பட்டிருந்தாலும், ஊரின் தொன்மையால், புராணத் தொடர்பால் சாத்திரங்கள் பல கண்டதால் பிரபலமாகி விட்டது.

இனம் புரியாத ஒரு அழகு, ஒரு அமைதி கட்டிட அமைப்பில் ஒரு கவர்ச்சி வணங்கப்படும் மூர்த்தியாய் உண்டான மகிமை மைலாப்பூரை சுகமாக ஆக்கிக் கொண்டிருக்கிறது.

லஸ் பாலத்தைக் கடந்து மைலாப்பூருக்குள் நுழைய குபீரென்று குளமும், நீராழி மண்டபமும் மேலே கோபுரமும் ஆகாயப் பின்னணியில் மிக அற்புதமாக காட்சி தரும். ஒரே கோணத்தில் இவைகள் கண்ணில் பட்டு உள்ளுக்குள் ஒரு பரவசத்தை ஏற்படுத்தும். கோயில் மிகப்பெரிதுமில்லை. சிறிதுமில்லை. சுற்றி, சுற்றி திசை தெரியாமல் திகைக்க வேண்டியதில்லை. பராமரிக்க முடியாமல் இருள்டைந்து வௌவால் நாற்றம் அடிக்கிற கோயில் இல்லை. வெளிச்சமாய் சுத்தமாய் உள்ள கோயில்.

கணேசலிங்கம் பிள்ளையார் சன்னதிக்கு எதிரே போய் குட்டிக் கொண்டார். கருங்கல்லில் புடைப்பு சிற்பமாய் உள்ள நர்த்தன விநாயகர். ஆரம்பத்தில் இந்த சிற்பம் மட்டுமே இருந்தது. இந்த இடத்தின் பின் பகுதியில்தான் கோயில் அகலப்படுத்தப்பட்டது. இந்த நர்த்தன விநாயகர் மிகமிகத் தொன்மையானவர். கோயிலை வலமாகச் சுற்றிக் கொண்டு முருகன் சன்னதி தாண்டி, கொடிமரத்தை சுற்றிக் கொண்டு கற்பகாம் பாள் சன்னதியில் நுழைந்தால் அளவான உருவம், அமைதியான அலங்காரம் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதாய் ஒரு ஈர்ப்பு.

கை குவிந்த போதே மனமும் குவிந்தது. உன் எல் லையில் உன் அருளால் இருக்கின்றவன் அம்மா நான். எவர்க்கும் கெடுதல் நினைக்காத மனமும், ஆரவாரம் இல்லாத வாழ்க்கையும் கொடுத்திருக்கிறாய் நீ. ஒவ் வொரு தெய்வமும், ஒவ்வொரு அம்சத்தோடு விளங்கு கின்றன. உன்னை வணங்குகிறவர்களுக்கு குடும்பம் என்ற

சுகத்தை கொடுத்திருக்கிறாய். ஆரவாரம் இல்லாத வாழ்க்கையை நீ வரமாகத் தருகிறாய்.

கர்வம் கொடுக்கின்ற பெரிய விஷயங்களை கற்பகாம்பாள் தருவதேயில்லை. வெற்றி தருகிற போதே தளும்பாத மனமும் தருகிறாய். நாகரீகம் கற்றுத் தருகிறாய். அன்பாய் இருகக வேண்டும் என்று ஆசைப் படுபவர்கள் அமைதியாய் இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் உன்னிடம் வருவார்கள்.

அம்மா, என்றும் அகலாத அன்பையும், அமைதியையும் எனக்கு கொடு. மனைவி, மகன், மகள், அம்மா, அப்பா, தாய், தந்தை, மைத்துனன், மைத்துனி அண்ணா, தம்பி, தங்கை என்று எல்லா உறவோடும் ஆனந்தமாய் இருக்க விரும்பியவர்கள் உன்னைச சரணடைவார்கள். நல்ல உறவுகளை வழங்குவதே, உன் விசேஷம். நண்பர்களுக்கு பஞ்சமேயிருக்காது. கோபம் பொங்காமல் இருக்கின்ற தன்மையை உன்னிடம் கேட்டுப் பெறலாம். கற்பக வல்லி நீ கனிவு மிக்கவள். கண்ணியம் சொல்லித் தருபவள். உன் எதிரே நிற்கும் போது மனம் மிகுந்த சாந்தமாகி விடுகிறது. உன் சன்னதியின் விஷேசம் அது.

கற்பகாம்பாளை வலம் வந்து விட்டு கபாலீஸ்வரர் சன்னதிக்குள் நுழைந்தார். லிங்கத்தின் மீது ஐந்து தலை நாகம் கவிழ்ந்திருந்தது. கபாலீஸ்வரர் தபோவனர். ஞானதாரகர், சித்த புருஷர், கபாலி எதிரே வேண்டவே தோன்றாது துதிதான் செய்ய முடியும். வெறுமே வணங்கி விட்டுத்தான் போக முடியும். அப்படி துதிப்பது வணங்குவதும் மிகப்பெரிய நிறைவைக் கொடுக்கும். ஆழ்ந்த உள்ளுணர்வை ஏற்படுத்தும். கைகூப்ப கூட அவசியமில்லை. கைகளை தொங்க விட்டு கபாலியையே பார்த்துக் கொண்டிருந்தால் போதும். உள்ளே ஒரு மனமாற்றம் ஏற்படும். தான் யார் தன் யோக்கியதை என்ன என்பதை எதிரே இருப்பவருக்கு கபாலி பரிமாறி

விடுவார். கபாலியைச் சுற்றி வரும்போது கபாலிக்கு இடப்பக்கம் உள்ள துர்கையின் அழகு சொல்லுக்கு அடங்காது.

மகிஷனின் தலைமேல் மெல்லிய புன்னகையோடு, அற்புதமான அழகோடும் சக்தி மிளிரும் சன்னதியாய் அந்த இடம் இருக்கிறது. சிவனைச் சுற்றி அறுபத்து மூன்று நாயன்மார்கள். நாயன்மார்களுக்கு எதிரே குறுஞ்சிரிப்போடு தட்சிணாமூர்த்தி.

கோவில் முழுவதும் ஆவேசமில்லாத மூர்த்திகள் அர்த்தம்செறிந்த அமைதி. அமைதியில் ஏற்பட்ட நிறைவு. நிறைவால் ஏற்பட்ட தெளிவு. கோயிலுக்குள் போனதும் அதிகமாக எல்லோருக்கும் இந்த உணர்வே தோன்றும். நந்தியைச் சுற்றி கொடி மரம் வந்து விழுந்து வணங்கி விட்டு சனீஸ்வரர் சன்னதியை அடைந்த போது, அப்பா மட்டும் யாக சாலை மண்டபத்தில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

அப்பா அந்த மண்டப படிக்கட்டில் ஆழ்ந்த யோசனைகளோடு அமர்ந்திருந்தார்.

''என்னாப்பா இங்க உட்கார்ந்திருக்க. அவங்க எல்லாம் எங்க.''

''நீயா உன்னைத்தான் நினைச்சினு இருந்தேன். வா, உட்கார். அவங்க லாட்ஜுக்குப் போயிட்டாங்க.''

''ஏன் லாட்ஜ் நம்ம வீட்லேயே தங்கலாமே.''

''வேணாம். அதுங்க சிரிச்சுப் பேச லாட்ஜ்தான் சௌகரியம். வீட்டுக்கு வந்தா நீங்களும் உம்முனு இருப்பீங்க அதுங்களும் உம்முனுதான் இருக்கும். என் பக்கத்தில் உட்கார். நல்லா இருக்கியா?''

''இருக்கம்பா''

''சந்தோஷமா இருக்கியா''

''இருக்கம்பா''

''பொண்டாட்டி பிரியமா இருக்காளா''

''ரொம்ப, ரொம்ப பிரியம்''

''அப்படியா'' அப்பா உற்றுப் பார்த்தார். மனிதன் இரண்டு கைகளையும் எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''என்னாப்பா இது.''

''என்னை மாதிரி லோல் படாத. எப்பவும் சந்தோஷமா இரு. தினமும் கோயிலுக்கு வருவியா.''

''நிதம் வருவேன். சில நாள் முடியாம போய்டும்.''

''இது நமக்கு கோயில் மட்டுமில்லை. பரம்பரை சொத்து. நம்ம மூதாதையர் நம்ம ஜாதி ஜனம் கட்டின கோயில் இது. வியாசர்பாடி முதலியார்கள் வகை கட்டின கட்டடம் இது.''

''ஒவ்வொரு தலைமுறையிலும் அவங்க நன்கொடையா ஒவ்வொரு இடம் கட்டினு வந்து இருக்காங்க. கட்றதுன்னா துட்டைக் கொடுத்துட்டு கையைக் கட்டினு நிக்கறதில்லை. தானே தோள் மேல் கல்லுத் தூக்கியிருக்காங்க. தொலை தூரத்திலிருந்து மாட்டு வண்டியில பாறை கல்லு கொண்டு வந்திருக்காங்க. சிற்பிகளை ரொம்ப மரியாதையா கவனிச்சு இருக்காங்க. செங்கல் பட்டு பக்கமிருந்து கல்லு கொண்டாந்து இருக்காங்க.''

''அப்படி கோயிலுக்கு உழைச்ச நம்ம மூதாதையரை கடைசி நேரத்துல கல்லுல சிலையா வடிச்சிருக்கான். தூண் வைச்சு மண்டபம் எழுப்பின பிறகு என்னா வேணும்னு சிற்பி கேட்க என் சிலை கோயில்ல இருக்கணும்னு சொல்லியிருக்கார் முதலியார்.''

''முன்னாடியே சொல்லியிருக்க கூடாதா தூண் நிக்க வைக்கிறதுக்கு முன்னாடி செய்திருப்பேனே சரி இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகலை. அப்படின்னு தூணை குடைந்து சிற்பி செய்தானாம். இந்த எல்லா தூண் களிலும் புடைப்பு சிற்பம் இருக்கும். முதலியார் சிலை மட்டும் தூண் குழிவுல இருக்கும். என்னுடைய தாத்தா வுக்கு தாத்தான்னு இவரைச் சொல்லுவாங்க. ஞாபகம் வைச்சுக்கடா, ஞாபகம் வைச்சுக்கடான்னு என் தாத்தா அந்தப் பேரை பல தடவை சொன்னார். நான் தான் மறந்துட்டேன்.''

''இவர் நம்ம மூதாதை. இவர் ஒரு முதலியார். இந்தப் பக்கம் வர்றபோது கண்ணை மூடி இவரையும் கும்பிட்டுக்கோ.''

அப்பாவும், பிள்ளையும் அந்த ஒரு அடிச் சிலையை தொட்டுத் தடவிப் பார்த்தார்கள்.

தூணின் ஒரு பக்கத்தை இரண்டடிக்கு குழிவு படுத்தி அதில் ஒரு அடிச் சிலையை புடைப்பாய் செய்திருந்தது. இடது பக்கம் குடுமியும், கூப்பிய கைகளும், கழுத்தில் ருத்ராட்ச மாலையும், இடுப்பில் வரிந்து கட்டிய வேட்டியும், காலில் கழலுமாய் அந்த உருவம் இருந்தது. அப்பாவின் தாத்தாவுக்கு தாத்தா என்றால் எந்த வருடம் என்று தெரியவில்லை. அப்போது வாழ்க்கை என்ன விதம் என்று தெரியவில்லை. அப்போது யார் அரசாண்டார் என்று தெரியவில்லை. இவர் இருநூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்திருப்பார் என்று கொள்ளலாமா. ஆயிரத்து எழுநூத்தி எண்பத்தி ரெண்டாம் ஆண்டில் கூட இந்த மைலாப்பூரில் போர் நடந்திருக்கிறது மைசூரிலிருந்து ஹைதர் அலியும், திப்புசுல்தானும் சாந்தோம் மீது படை யெடுத்து மைலாப்பூரை எரியூட்டி விட்டு போனார்கள். ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்தான் மைலாப்பூர் அமைதியா யிற்று. அதற்கு முன் ஏகப்பட்ட படையெடுப்புகள். போர்த்துக்கீசிய தாக்குதல். பிரெஞ்சு படைகள் முற்று

கையிடுதல், கோல்கொண்டா நவாபுக்கும், போர்த்துக்கீசியருக்கும் நடந்த சண்டை, விஜயநகர மன்னர்களின் ஆளுமை.

மைலாப்பூரும், அதைச் சுற்றியுள்ள இடமும் இடைவிடாது ரத்தக் களறியை சந்தித்துள்ளன. சாந்தோம் சர்ச்சை சுற்றி மிகப்பெரிய கோட்டை போர்த்துக்கீசியரால் கட்டப்பட்டது. அறுபது வருடம் இருந்த அந்தக் கோட்டையை கோல்கொண்டா சுல்தான் இடிக்கத் துவங்கினான். அந்தக் கோட்டையை இடிக்க இருபத்திரெண்டு வருடங்களாயின.

கோயில் இருந்த இடம் கோட்டையாக கட்டப்பட்டு, கோட்டையிருந்த இடத்தில் வெறும் சர்ச மட்டும் நிற்கிறது. அந்த சிலையை தடவும் போதே மிகப்பெரிய சரித்திரம் கொண்ட ஊரில் இருக்கிறோம் என்பது புரிந்தது.

எல்லாத்துக்கும் ஈடுகொடுத்து இன்னும் இந்த ஊர் தெய்வீகமா இருக்கு. மெட்ராஸ்ல மைலாப்பூர் மாதிரி ஒரு சுகமான இடம் எதுவுமேயில்லை.

''நம்ம தலைமுறையில என்னையத் தவிர எல்லாருமே கோயிலுக்குப் பண்ணியிருக்காங்க நான் ஒருத்தன் தான் ஒண்ணும் பண்ணாம வுட்டுட்டேன்.''

''நான் ஒரு விஷயம் சொல்றேன். என் அனுபவத்திலிருந்து சொல்றேன். அது மத்தவங்களுக்கு எப்படியாவது புரிய வைக்கிறதுக்கு முயற்சி பண்ணு.''

''படிக்க வேண்டிய வயசில, ஒரு தொழில் கத்துக்க வேண்டிய வயசில புத்தி பொம்பளை ருசியில ஈடுபடக் கூடாது. அப்படி ஈடுட்டா தொழில் படிப்பு வளராது. சிந்தனை எப்பவும் பொம்பளை மேலேயே இருக்கும். ஒரு ஆம்பளைக்கு அப்பாவித்தனம் குறைஞ்சபட்சம் பதினெட்டு வயதுரை இருக்கணும் கொஞ்சம் மனசு

அடக்கப்பட்டு விளையாட்டு படிப்பு, செய்தொழில் இதான் முக்கியம். இதான் வாழ்க்கைன்னு சொல்லி வைக்கணும்.''

''ஆணுக்கு பெண் அவசியம்தான். அதுசந்தோஷம் தான். ஆனா ஒரு வேலையில ஈடுபட்டிருக்கிற போது பெண் ஈர்ப்பு தொந்தரவு படுத்தக் கூடாது மனசு தடு மாற வைக்கக் கூடாது. நான் எதுவுமே கத்துக்கலை. பொம்பளை சுகத்தைத் தவிர. இப்பதான் அது வெட்க மான விஷயமா வேதனையான விஷயமா எனக்குத் தெரியுது. எனக்கு ரத்தக் கொதிப்பு இல்லை. சக்கரை இல்லை. ஆனாலும், உடம்பு துவண்டு பேச்சு, கை காலெல்லாம் குடைச்சல், வலி பார்வை மங்கிப் போச்சு. இதுக்கு மேல தடிமன் கண்ணாடி போட முடியாது.''

''நாம சோழிய வெள்ளாளர், வியாசர் பாடி வினயாக் முதலியார் பரம்பரை. வினாயக முதலியார் இந்தக் கோயிலுக்கு நிறைய செய்திருக்கார். சித்திர சத்திரம்னு தெற்கு மாட வீதியில் ஒன்னு கட்டியிருக்கார். ஏகப்பட்ட ஓவியம் சேத்து வைச்சிருக்கார். பொய்க் கதவுன்னு ஒரு ஓவியம் துணியில வரைந்த ஓவியம். சுவத்துல தொங்க விட்டுருப்பாங்க. நிஜக் கதவு மாதிரியே இருககும்.''

''இன்ன, இன்ன குத்தம் பண்ணவனுக்கு இன்ன, இன்ன எம தண்டனை. வித விதமா ரொம்ப தத்ரூபமா சித்ரவதைகளை பொம்மையா பண்ணி வைச்சுருக்கு. முதல்ல நிக்கறவங்கதான் முதலியார். முன்னோடி, தலை வன்னு அர்த்தம். நாலு பேர் பாராட்டறது நம்ம ஜாதி ஆளுங்களுக்கு ரொம்ப புடிக்கும். நாலு பேர் பாராட்டற துக்காகவே அன்னதானமும், துணி தானமும், கோயில் கட்டறதும், சத்திரம் கட்றதுமா இருந்திருக்காங்க. நம்ம மைலாப்பூருக்கு நான் ஒன்னும் பண்ணாம போயிட் டேன்.''

''மதுரையில எங்கியோ வயககாட்டு பக்கம் குடியிருக்கோம்டா, சுத்து பத்துல சிவன் கோவிலே இல்லை. வெறும் கல்லை நட்டு எல்லைக் காளியம்மன்னு சொல்றாங்க. அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் ஆச்சுன்னா நான் இந்தப் பக்கம் வந்துடலாம்னு இருக்கேன். அப்ப நம்ம வீட்டுககு நான் வரலாமாடா. உன் பொண்டாட்டி விடுவாளா.''

''வடிவுக்கரசி சத்தம் போட்டு பேசும் போது கஷ்டமாயிருந்தது. என்னால உன் வீட்டுல குழப்பம் வருதோன்னு பயமாயிருந்தது. ஆனா நான் ஒன்னும் பண்ண முடியாது. இந்த பொம்பளையை நான் ரொம்ப கஷ்டப் படுத்தியிருக்கேன். இப்ப அவ டர்ன், துட்டு வாங்காத போமாட்டா. துட்டுக்கு எதுனா பண்ணியிருக்கியா.''

பேசிக்கொண்டே போகும் அப்பாவுக்கு பதில் சொல்ல தோன்றவில்லை. கை பிடித்துக் கொண்டு போய் கற்பகம் லாட்ஜில் விட்டுவிட்டு வீடு திரும்பினான்.

''என்னா எனக்குப் பாட்டி கொடுத்த நகையெல்லாம் உங்கப்பாவுக்கு வாரிக் கொடுத்திட்டியா'' கணேசலிங்கத்தின் பத்து வயது மகள் வழியில் மறித்து வம்புக்கு இழுத்தாள்.

மகள் வீட்டுக்குள் நுழைந்ததுமே மனைவி புலம்பியிருப்பாள் போலும்.

கணேசலிங்கம் குழந்தையை அணைத்துக் கொண்டார்.

''உனக்கு நகைதானே நான் போடறேன். கவலைப் படாத கடவுள் புண்ணியத்துல கையும், காலும் நல்லா இருக்கு. இருக்கிறது ஒரு பொண்ணு. உன்னைய கரைச் சேர்க்க முடியாதா? செய்து போட்டுறலாம் வா.''

வீட்டின் மேல் மாடியில் நின்றவாறு மைலாப்பூர் கோபுரத்தை வியந்து பார்த்தான். குனிந்து தெருவைப் பார்த்தான். கொஞ்சம் மனசு அடங்கியவுடன் வெள்ளை ஹார்ட் போர்டை மரப்பலகை வைத்து மனசுக்குள் எப் போதும் இருக்கும் கற்பகாம்பாளை பென்சில் உருவமாய் வரைய ஆரம்பித்தார். அரை மணியில் ரெண்டு அடி உயரத்திற்கு கற்பகாம்பாள் மூலப்படம் மிக அழகாக பேப்பரில் உருக்கொண்டது. இதை கறுப்பு வெள்ளைப் படமாக்குவதா, வண்ணப் படமாய் எழுதுவதா யோசனை வந்தது. படம் வரையும் மேஜையைவிட்டு எழுந்து வெளி முற்றத்திற்கு வந்தார் கோபுரத்தின் உச்சியில் விளக்குகள் எரிய ஆரம்பித்து விட்டன. மாலை மயங்கி சரிந்து கொண்டிருந்தது. தெரு விளக்குகள் ஒளியை உமிழ்ந்தன. மைலாப்பூர் வேறொரு தோற்றம் கொண்டது. வானத்தில் புருவ வளையமாய், மேல் உதடு வடிவாய் நாரைகள் தெற்கு நோக்கி பறக்கத் துவங்கின.

இன்று காலையைப் போல் இன்று மாலை இல்லை. இன்று மாலையைப் போல் நாளை காலை இருக்குமா என்று தெரியாது. இன்று விடியலில் எழுந்து திறந்த வெளியில் நிற்கும்போது ஒரு லட்ச ரூபாய் காசு பற்றிய கவலை வரவேயில்லை. அப்பாவைப் பற்றிய சிந்தனை எழவேயில்லை. ஆனால், சூரியன் மறைவதற்குள் என்னன்னமோ சிக்கல் வந்து விட்டது. இப்படி ஒரு சிக்கல் வருமென்று கூட நினைக்கவில்லை.

சிக்கல் வரும்போதே தீருகின்ற வழியும் வந்து விட்டது. எந்த மனைவியும் இப்படி சட்டென்று தூக்கித் கொடுக்க ஒப்புக்கொள்ள மாட்டாள். தரமுடியாது என்று ஒற்றைக் காலில் நிற்பாள். நாலு பேரிடம் சொல்லி அவமானம் சேர்ப்பாள்.

அந்த மதுரைக்காரியிடம் ஆங்காரமாய்ச் சத்தம் போட்டதோடு சரி, வடிவுக்கரசி ஒரு அளவுக்கு மேல் பெரிது படுத்தவில்லை. தன்னுடைய முகத்தில் தர்ம

சங்கடமான நிலையைப் பார்த்ததும் சரியென்று விட்டுக் கொடுத்து விட்டாள்.

உள்ள போய் என்னா நகையிருக்குன்னு பார்க்கணும் வேற வழி. இதைச் சொன்னபோது அவள் முக பாவம் வினோதமாய் இருந்தது. கோபமெல்லாம் போய் அவள் முகத்தில் கவலையும் விட்டுக் கொடலும் வந்து விட்டன.

வடிவுக்கரசி மட்டுமில்லை. தனக்கும் பணத்தின் மீது மிகப்பெரிய பிடிப்புமில்லை. கொலை செய்தாவது, துன் புறுத்தியாவது பணம் சம்பாதிக்கின்ற ஆர்வமில்லை. அடித்து காசு பிடுங்க வேண்டும் என்ற ஆசையில்லை. விஜயநகரத்து அரசர் ராமராயர் பெரும்படையுடன் மைலாப்பூர் வந்து சாந்தோம் கோட்டையை முற்றுகை யிட்டு போர்த்துக்கீசியரிடம் ஒரு லட்சம் பொற்காசுகள் கேட்டார். ஆனால், போர்த்துக்கீசியர்கள், அவருக்கு ஐம்பதாயிரம் பொற்காசுகள் கொடுத்தனர். மீதிக் காசுக்கு ஐந்து போர்த்துக்கீசியர்களை பிணைக் கைதி களாக ராமராயர் இழுத்துக்கொண்டு போனார். விஜய நகரம் போனதும் அவர்களை துரத்தி அனுப்பி விட்டார். காசுக்காக பிணையக் கைதிகள், காசே இல்லை என்று தெரிந்ததும் பிணைக் கைதிகளை விரட்டி விடுதல்.

எந்த நேரமும் நிறைய காசு என்பதுதான் பல பேரின் கனவாக உள்ளது.

அப்படி நிறையக் காசு சம்பாதிக்க ஆசை உள்ளவர்க ளிடத்தில்தான் பெண்ணுக்கு அலைகிற சுபாவமும்' கொலை வெறியும் துன்புறுத்தும் ஆசையும் வந்து விடு கின்றன. பச்சை பொய்களால் நிரம்பிய போலியான வாழ்க்கை அங்கே வந்து விடுகிறது.

அப்பாவுக்கு காசு தரமாட்டேன் என்றால் வாய்ச் சண்டை வலுத்திருக்கும். வார்த்தைகள் கறைபட்டிருக்கும் காசு மறுத்ததின் வேதனை அதிகரித்து இருக்கும். புருஷன் மனைவியின் பிணக்குகள் அதிகரித்து இருக்கும்.

தரவேண்டுமா, தரவேண்டாமா என்று யோசிப்பதை விட சட்டென்று தந்துவிட்டது மனசுக்கு நிறைவாகி விட்டது. பெரிய பாரம் குறைந்து விட்டது. இது மிகப் பெரிய நிம்மதியைக் கொடுக்கிறது. இந்த நிம்மதிதான் இப்போது ஓவியம் வரையச் சொல்கிறது. நிறைய ஓவியம் வரைய வேண்டும். அலுக்கும்வரை ஓவியம் வரைய வேண்டும்.

இந்த கற்பகாம்பாளை கறுப்பு வெளுப்பாய் பென்சில் ஓவியமாய் வரைவதா இல்லை வண்ணமாக்கு வதா, வரைந்து என்ன செய்வது, யாருக்குத் தருவது.

அந்த சுசீலாவுக்கு தந்து விடலாமா உன் கல்யாணத் துக்கு என் பரிசு என்று கொடுத்து விடலாமா?

கல்யாணத்துக்கு, கறுப்பு, வெளுப்பு படமா கொடுப் பார்கள். படம் வரைந்து சுருட்டிக் கொடுத்தால் எங்கா வது கசக்கி போட்டு விடுவார்கள். ஓவியம் என்று கொடுத்தால் சட்டமிடப்பட்டே கொடுக்க வேண்டும்.

அந்த சுசீலாவுக்கு ஓவியமே கொடுப்போம். இந்த வீட்டின் கல்யாணப் பரிசாய் கொடுப்போம். சட்ட மிட்டுக் கொடுப்போம்.

இந்த ஓவியத்தை புதுவிதமாய் வரைவோம். பின் னணி திருவாசிகை கீழேயுள்ள பழத்தட்டு, தொங்குகின்ற சரவிளக்கு எல்லாம் வண்ணத்தில், திருவாசிகையில் உள்ள பூமாலை கூட வண்ணத்தில் ஆனால், கற்பகாம் பாள் மட்டும் கறுப்பு வெளுப்பாய் இருக்கட்டும். நெற்றியில் உள்ள திலகம் மட்டும் சிவப்பு வைப்போம்.

கற்பகாம்பாளை மனசுக்குள் நினைக்கும்போது வர்ணம் வரவில்லை. ஒரு கோட்டுச் சித்திரம்தான் வருகிறது. அந்த கோட்டுச் சித்திரத்தை பேப்பரில் பதிய வைக்க முயற்சி செய்யலாம். சௌக்கியமாக இரு என்ற ஆசீர் வாதத்துடன் அந்தப் பெண்ணுக்கு கொடுக்கலாம்.

திரும்பி கோபுரத்தை நோக்கி கை கூப்பினார். இந்த பிரபஞ்சத்தில் நான் ஒரு தூசு, கற்பகவல்லியாகிய உன்னையும், மைலாப்பூரையும் இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிற தூசு. எங்கும் நிறைந்த சக்தி எனக்குப் புரிகிறது. ஆனால், உன்னை கற்பகாம்பாளாகத்தான் தெரிகிறது. அன்பு என்பதை எப்படி ஓவியமாக வரைவது. வடிவுக்கரசியைத்தான் அன்பு என்று வரைய முடியும். அககறை என்கிற முகம் காண்பிக்க முடியும்.

கணேசலிங்கம் வீட்டுக்குப் போனார். தூரிகையுடன் உட்காந்தார். இரவு பனிரெண்டரை மணிக்குப் படம் திருப்தியாக வந்தது. மனைவிக்கு அருகே படுத்து தூங்கிப் போனார்.

# 6

“கல்யாணம்னு ஒரு வார்த்தை சொன்னதுனால இவ என் பொண்ணுன்னு நீ வாயைத் தொறந்து சொன்னதுனால, நீங்க எனக்கு அப்பா என்குறதுனால என்னால முடிஞ்ச இந்த ஒரு லட்ச ரூபாயைத் தரேன். நான் தரணும்னு இல்லை. ஆனால், உனக்கு தர்றதுல எனக்கொரு சந்தோஷம். நீ நல்லவனோ கெட்டவனோ இவர்தான் மூதாதைன்னு காமிச்ச பார். அது எனக்கு பெரிய சந்தோஷம்.”

''அப்பா நான் பெரிய பணக்காரன் இல்லை. சாதாரண டிராயிங் மாஸ்டர். என் சம்பளத்துக்கு ஒரு சந்து வூட்டுலதான் இருக்கணும். இவ்வளவு நல்ல வீடு கிடைச்சதுக்கும். நல்ல பெண்டாட்டி, பசங்க கிடைச்ச துக்கும் நம்ம பெரியவங்கதான் காரணம்.''

''இந்த மைலாப்பூருக்கு ஒன்னுமே பண்ணலை டான்னு சொன்ன. நானும் ஒன்னும் பண்ணலை. உனக்கு சேத்து நான் பண்றேன். இந்த பொண்ணு கல்யா ணத்தை நல்லபடியா முடி. இங்க வாம்மா சுசீலா இது என் கல்யாணப் பரிசு'' மரச் சட்டமிடப்பட்ட கையில் வரைந்த கற்பகாம்பாள் படத்தை அந்த பெண்ணுக்கு கொடுத்தார். அந்தப் பெண், வணங்கி வாங்கிக் கொண்டும் போயிற்று. அந்தப் படத்தின் மீது வடிவுக் கரசி ஐந்தாயிரம் ரூபாய் நோட்டுக கற்றையை வைத் தாள்.

''இது எங்கப்பா சார்பா என் பிறந்த வீட்டு சார்பா நான் கொடுக்கிற சீர். எங்களால முடிஞ்சது செய்தோம்.''

சடேரென்று ஒரு மௌனம் அப்பிக் கொண்டது. அப்பா எழுந்து தள்ளாடி கிட்டே வந்தார். வந்து கட்டிக் கொண்டார். கட்டிக் கொண்டு, விம்மி அழத் தொடங் கினார்.

''போதும், போதும்'' அந்த மதுரைப் பெண்மணி அதட்ட விலகிக் கொண்டார்.

''மாட்டேன்னு சொல்லாத ஒரு லட்ச ரூபாய் கொடுத்தது பெருந்தன்மைதான். ஆனா உங்கலளா இவ்வளவுதான் முடியும்னு சொன்னது பொய். இவங்க பொண்டாட்டி நகையை என்கிட்ட கொடுத்திருந்தா நான் நல்ல விலைக்கு வித்திருப்பேன். கொண்டு போய்

அடமானம் வைப்பானேன். வட்டியில மூழ்கிப் போற துக்கா, வட்டிக்கொடுத்து மீட்க முடியுமா? அப்படின்ற வசதி உள்ளவங்க இன்னும் கூடவே செஞ்சிருக்கலாம். எடுத்துச் சொன்னா நான் கெட்டவளாயிடுவேன். இரு பத்தி ஏழு லட்ச ரூபாய் வீடு வைச்சுகினு தங்கச்சிக்கு ஒரு லட்சம் கொடுக்கறீங்க பாரு. இது எங்கயும் அடுக்காது.''

அவள் பணத்தை பையில் வைத்துக் கொண்டாள். கைப் பையை அக்குளில் இடுக்கி புடவையைப் போர்த்திக் கொண்டாள். அப்பாவை அழைத்துக் கொண்டு போனாள்.

நகை அடமானம் வைத்த சிகப்பு ரசீது மேஜையில் இருந்தது. பட்டியல் போட்டு நாப்பத்தி ரெண்டரை பவுன் என்று காட்டியது.

''அதிக பட்சம் ஒரு வருஷம். அதுக்கு மேல ஒரு நகை அடமானத்துல இருக்கக் கூடாது. இருந்தா அது நஷ்டம். அவசரத்துக்கு நகை வைச்சு காசு வாங்கணும். அதே அவசரத்தோட நகையை மீட்டுடணும். அப்பதான் இந்த கடனுக்கு மரியாதை. அப்படி மீட்க முடியாதுன்னு தோணிச்சுன்னா இப்பமே வித்துடு. அதுதான் புத்தி சாலித்தனம்'' பண்டாபீஸ் நண்பர்கள் புத்தி சொன்னார்கள்.

அம்மாவின் நகை விற்பதற்கு இஷ்டமே இல்லை. அம்மா என்கிற போது அந்த கல் அட்டிகையும், கனத்த தாலியும், ரெட்டை வட செயினும் கங்கண வளையலும் ஞாபகம் வருவதை தடுக்க முடியவில்லை.

அவைகள் வெறும் நகைகள் அல்ல. தங்கம் என்ற உலோகம் அல்ல. அம்மா என்கிற இனிமையான பெண் மணியை ஞாபகப்படுத்தும் விஷயங்கள்.

எனவே, அவசரமாய் அடமானம் வைத்து உடனடியாய் மீட்டு விடுவதே உத்தமான விஷயம். ஆனால், எப்

படி மீட்பது என்பதுதான் தெரியவில்லை. எப்படி சம்பாதிப்பது என்பதுதான் தெரியவில்லை.

எங்கே எப்படி காசை அரிப்பது என்று தெரியாமல் மனம் தடுமாறியது. நிலை கொள்ளாமல் தவித்தது.

ஒரு கணக்கு வாத்தியார் என்றால் சையின்ஸ் டீச்சர் என்றால் டியூஷன் காசு பார்க்கலாம். டிராயிங் சொல்லித் தருகிறேன் என்று டியூஷன் எடுப்பது காசுக் காக அல்ல. அது ஒரு விதமான கலைச் சேவை. அது ஒரு விதமான ஆத்மார்த்தம்.

என்ன சொல்லிக் கொடுத்தாலும் வரைய வருவது தான் வரும். அந்தக் கை எப்படி ஆரம்பத்தில் பென்சில் பிடித்ததோ அப்படியேதான் பிடிக்கும். பெரிய மாற்றங் களை ஆசிரியர் கறறுக் கொள்பவருக்கு தந்துவிட முடியாது.

கணக்கு பாடத்தில் கற்றுக் கொண்ட எல்லா மாணவரும் நூற்றுக்கு நூறு வாங்கலாம். ஓவியம் அப்படி அல்ல. ஒரு தராதரம் நிச்சயம் ஓவியத்தில் உண்டு. நூற்றுக்கு நூறு எல்லோரும் வாங்க முடியாது. ஓவியம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று லட்சம் பேருக்கு இரண்டு பேர்தான் முயற்சி செய்கிறார்கள். வெறும் பள்ளிக் கூடத்து சம்பளத்தை வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய செலவை புரட்ட முடியாது.

வடிவுக்கரசியும் இதே விதமான யோசனையில், அவஸ்தையில் இருந்திருப்பாள் போலிருக்கிறது. வாடகை உயர்த்தலாமா, வாடகையை உயர்த்தி அந்த தொகையை அட்வான்ஸாக கேட்கலாமா, தலா ஆயிரம் ரூபாய் உயர்த்தி இரண்டு வருட வாடகையை அட்வான்ஸாக கேட்கலாமா.

வாடகை உயர்வுக்கு கட்டுப்பட்டவர்கள் கூட, இரண்டு வருட வாடகையை அட்வான்ஸாக கொடுக்க வேண்டிய அவசியமென்ன.

"நான் ரெண்டாயிரம் ரூபாய் ஏத்தணும்னு நினைச்சேன். நீங்க அட்வான்சா கொடுப்பதாயிருந்தால் ஆயிரம் ரூபாய் போதும் எனறு கேட்கலாமா" என்று வடிவுக்கரசி தயங்கி, தயங்கி தன் திட்டத்தை சொன்னாள்.

கடை போட்டு இருப்பவர்கள் நல்லவர்கள். எந்த அடாவடியும் இல்லாமல் அமைதியாய் வியாபாரம் செய்பவர்கள். முகப்புக்கு ஒரு எடுப்பு வேண்டும் என்பதால் மூவரும் பங்கு போட்டு வர்ணமடித்துக் கொள்கிறார்கள். மொத்த கட்டிடமும் எடுப்பாக தெரிய வேண்டும் என்பதால் முதல் மாடி, இரண்டாம் மாடி முகப்புக்கும் அவர்களே வர்ணமடித்து விடுகிறார்கள்.

"பேசிப் பாருங்கள். தேறுகிறவரை தேறட்டும். அடைகிற வரை கடனை அடைத்து விடலாம். மீதி காசுக்கு கபாலி வேறு வழி காட்டுவார். எடுத்தவுடன் அப்பளக் கடையிடம் பேசுங்கள். நம் வீட்டிற்கு வரும் போது மிகச் சாதாரணமாய் வந்தவர்கள். இப்போது காரும் பங்களாவுமாய் உயர்ந்து விட்டார்கள். அவர்களுக்கு நாம் கேட்டால் கொடுக்க வேண்டும் என்று தோன்றும். அவர்கள் கொடுக்க சம்மதித்தால் அதை வைத்து மற்ற இரண்டு பேரையும் வற்புறுத்தலாம். இங்கே சரக்கு அடுக்க வரும்போது பேசாதீர்கள். வீட்டிற்குப் போய் அவர்கள் பெண்கள் இருக்கும்போது வேறு வழியில்லாமல் கேட்கிறேன் என்று சொல்லி நிதானமாய் பேசுங்கள்."

"சம்மதிக்கவில்லையெனில் யோசித்து சொல்லுங்கள் என்று அவகாசம் தருவது போல் வந்து விடுங்கள். எந்தக் காரணம் கொண்டும் கோபமாக பேச வேண்டாம். அவர்

சம்மதித்து விட்டால் யோசித்து நகைக் கடைக்கு போவோம்.''

''இதை நான் பேசக்கூடாது. இதை பேசும் போது நான் இருக்கவும் கூடாது. நீங்களாகத்தான் பேச வேண்டும். மிகுந்த சாமர்த்தியத்தோடு பேச வேண்டும். இது கடினமான காரியம்தான். கடவுள் அருளால் நடக்க வேண்டிய விஷயம்தான். வீட்டுச் சொந்தக்காரனை விட வாடகைக்கு குடியிருப்பவனுக்குத்தான் உரிமைகள் அதிகம்.''

புருஷனும் மனைவியும் வாடகை உயர்வைப் பற்றி பல கோணங்களில் பேசினார்கள்.

கணேசலிங்கம் அப்பளம் டிப்போ நாராயண அய்யரைத் தேடிப் போனார்.

# 7

ஏ ''ஏண்டா சினிமாக்காரி மூஞ்சியை ஒட்டிண்டு வர்ற, பைத்தியமா புடிச்சிருக்கு. அழகான பொண்ணு வரைய முடியாத, மொந்தை, மொந்தையா மூஞ்சி போட்டுனு வரயே. ராஜேஸ்வரி அப்பளம்னு கையில எடுத்து கண்ணுல ஒத்திக்க வேண்டாமா. அப்பளத்தை மூந்து பார்கக மாட்டாடா யாரும். வெட்கப்படுவா. கண்ணுல ஒத்திக்கற சாக்குல மூக்குல வாசனை படணும்னு பார்க்கிறேன். நான் கொடுத்த படத்தை தொலைச்சுப் புட்டு மொந்தை மூஞ்சியா உன்னை யார் பிளாக் பண்ண சொன்னது. நான் கொடுத்த பிளாக் எங்கே'' நாராயணன் என்கிற நாணா அய்யர் உரத்த குரலில் சீறிக் கொண்டிருந்தார்.

கணேசலிங்கத்திற்கு தவறான நேரத்தில் வந்து விட்டோமோ என்று பயம் வந்தது.

''யார் அங்க வாசல்ல''

''நான்தான்''

''கணேசலிங்க முதலியாரா. உள்ள வாங்க. என் பிளாக் என்னாச்சு.''

''உடைஞ்சு போச்சுங்க.''

''அடப்பாவி...ஆறு வருஷமா வைச்சிருந்த பிளாக் குடா.''

''அதாங்க உடைஞ்சு போச்சு.''

''என்ன சொல்றாய் நீ.''

''ஒரு பிளாக் ஆறு வருஷம் வராதுங்க. போட்டு முடுக்கி ஒரு தடவை ஓட்டினதும் பளாக்குனு உடைஞ்சு போச்சு.''

''நாலு தடவை தாண்டா ஓட்டினேன்.''

''நியாயத்துக்கு ஒரு பிளாக் ஒருவாட்டிதான். நீங்க நாலு வாட்டி ஓட்டினதே தப்பு ''

''சரி பிளாக் வேண்டாம். படம் எங்கே.''

''அதுதான் எங்கயோ இடதுகையா வைச்சுட்டேன் தேடித்தேடி பார்த்தேன். காணோம்.''

''யோவ் பிரம்மாண்டமான பேக்டரியா உன்னுது? வெறும் கல்யாண கடிதாசு அடிக்கிற பிரஸ்தானே சோம்பேறித்தனமா பதில் சொல்றியே. எனக்கு அந்தப் படம் வேணும்.''

''கிடைக்காதுங்க.''

''ஏன்?''

''நம்ம கடைல வேலை செய்யுற பையன் அதை எடுத்துப் பிரேம் போட்டு அவன் சிநேகிதக்கார பொண்ணு கல்யாணத்துக்கு அன்பளிப்பா கொடுத்துட்டான்.''

''அயோக்கிய ராஸ்கல் என்னா அடாவடித்தனம் இது. என் அப்பளத்தோட லோகோ எடுத்து எவனோ எவளுக்கோ வழங்கிடறதா. இதான் நீ பிரஸ் வைச்சு நடத்தற லட்சணமா.''

அந்தப் பிரஸ்காரரன் அவர் கத்த, கத்த கைகட்டி தலைகுனிந்து நின்றிருந்தான்.

''போ போய் எவளுக்கு பிரஸண்ட் பண்ணான்னு பாரு. பார்த்து அந்தப் படத்தை காசு கொடுத்து வாங்கினு வா. அது என் லோகோயா. என் கடை சிம்பல். கடை ஆரம்பிச்சதிதுலருந்து நான் வைச்சிருக்கிற படம். சர்வ சாதாரணமா தொலைஞ்சுடுச்சின்னு சொல்றியே.''

''நான் அதுவும் முயற்சி பண்ணி பார்த்துட்டேன். பொண்ணு கல்யாணம் கட்டி பெங்களூர் போயிடுச்சு.''

''அடடே''

''நான் பெங்களூர் விலாசம் கேட்டேன்.''

''பிடிச்சுட்டியா?''

''இல்லை. அந்தப் படத்தை அந்தப் பொண்ணு வேற ஒரு சிநேகிதிக்கு கொடுத்துடுச்சாம்.''

''ஏன் அதை வெச்சு வாழ கொடுத்து வைக்கலியாமா அந்த நாய்க்கு. என் படம் முள்ளா குத்தறதாமா.''

''இல்லீங்க ரொம்ப ராசியான படமாம். தனக்கு நல்ல புருஷன் கிடைச்சா மாதிரி தன் சிநேகிதிக்கு நல்ல புருஷன் கிடைக்கணும்னு வேண்டிகிட்டு கொடுத்தோம்.''

நாணா அய்யர் மௌனமானார். தலை குனிந்திருந்த அச்சகத்து ஆளை நிமிர்ந்து பார்த்தார்.

''அந்த் சிநேகிதி நல்லாயிருக்றாளாமா.''

''ரொம்ப நல்லா இருக்காம். போன வாரம் கூட வந்ததாம். ஆனா அது எங்க இருக்குன்னு தெரியலியாம். கேட்டு வைச்சுக்கலியாம்.''

''நல்லாயிருந்தா சரி.'' நாணா அய்யர் பெருமூச்செறிந்தார்.

''ஆனா எனக்கு இந்தப் படம் பிடிக்கலை. ராஜ ராஜேஸ்வரின்னா அரசி அரசின்னா உயரம், கம்பீரம், அழகு, சாந்தம், அலட்சியம் எல்லாம் இருக்கணும். அது சக்தியோட அம்சம். அந்த லைன் டிராயிங்ல எல்லாம் இருந்தது. கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாம தொலைச்சுட்டேன்ற.''

அந்த ஆள் மன்னிப்பு கேட்பது போல் கை கூப்பினான்.

''சரி போ. தொடைச்சு போடலியே அது வரைக்கும் சந்தோஷம். கிழிச்சு குப்பையில போடலயே அது வரைக்கும் திருப்தி. யார்கிட்டயோ பூஜை படமா இருக்குல்ல அதுபோதும். நீ போலாம்.''

''ஐயா இந்த சாம்பிள்''

''இந்த பிளாக் எங்க, எவ்வளவு ஆச்சு.''

''அறுநூத்தி நாப்பது ரூபாய்.''

''போய் கடையில வாங்கிக்க. நான் போன் பண்ணிச் சொல்றேன்.''

''லேபிள் பிரிண்ட் பண்ண வேணாமா.''

''பண்ணனும் நான் சொல்றேன். நீ போலாம்.''

அந்த ஆள் சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு படியிறங்கிப் போனார். அப்பளத்தின் மீது ஒட்டப்படும் லேபிள்கள் பத்து மேசையில் இருந்தன. எந்த அளவும் சரியாக இல்லாமல் மிக மோசமாக இருந்த லைன் டிராயிங் அது ஓவியத்தின் மிக சிரமமான விஷயம் விரல்கள் வரைவதுதான். அந்த ராஜராஜேஸ்வரி படத்தில் விரல்கள் மிக மோசமாக வரையப்பட்டிருந்தன. நாராயண அய்யர் மிகவும் கவலையானது தெரிந்தது.

''உங்க லேபிள் படம் ரொம்ப அம்சமா இருக்கும்.''

''எனக்கு திடுக்குனு ஆகிப் போச்சு கணேசலிங்கம். என்னமோ தப்பான மாதிரி தோணுது.''

''நீங்க ஒரிஜினலை கொடுத்து இருக்க கூடாது. ஜெராக்ஸ் எடுத்து கொடுத்திருக்கணும்.''

''நான் அப்படித்தான் நினைச்சேன். ஒரிஜினல்தான் வேணும்னு அடம்பிடிச்சான். பிளாக் நல்லா எடுத்து பிரிண்டிங் நல்லா வந்ததும் ஒரிஜினலை மறந்துட்டேன்.''

''இதைவிட நல்லதா ஒரு படம் வரைஞ்சிடலாம். கவலைப்படாதீங்க.'' கணேசலிங்கம் பழுப்பு நிற மைக்ரோ டிப் பேனாவை பிரித்து வைத்துக் கொண்டார். ராஜேஸ்வரி அப்பளக் கம்பெனியின் லெட்டர் பேடை இழுத்துப் பிரித்து அதில் படம் வரையத் துவங்கினார். மூன்று நிமிடத்துக்குள்ளாக ஒரு சிம்மாசனத்தில் உட்கார்ந்த நிலையில் இருக்கும் ராஜராஜேஸ்வரியின் படம் வரைந்து முடித்தார்.

''அடடே நீங்க டிராயிங் மாஸ்டர் இல்லை. இப்ப தான் ஞாபகமே வருது. ரொம்ப அம்சமா வந்திருக் குய்யா இந்த டிராயிங். அடடா அந்த குறுஞ்சிரிப்பு ரொம்ப நல்லா பண்ணியிருக்கீர். இதையே பிளாக் பண்ண கொடுத்திடலாம். சரோஜா, லலிதா, மைத் ரேயி'' உரக்க அவர் வீட்டுப் பெண்களை கூப்பிட்டார். பையன்களையும் அழைத்தார். மானேஜர் சமையல்காரர், வேலையாட்கள் எல்லோரும் சூழ்ந்து கொண்டனர்.

எல்லோருக்கும் படம் பிடித்திருந்தது. எடுத்துக் காட்டினார்.

''இந்த மொன்னை படத்தை போடறதுக்கு முன் னூறு ரூபாய் ஆச்சுன்னான். இவர் மூணே நிமிஷத்தில் இந்தப் படம் போட்டுட்டார். என்ன லட்சணம் என்ன அழகு. தோ பேசறேங்கிறேன் மாதிரி உதடு. அடடா, இதையே போட்டுடலாமா?''

''இது சாம்பிள். எனக்கு வரையத் தெரியும்னு காட் றதுக்காக வரைஞ்சது. ஒரு கேள்வி, ஏன் லைன் டிராயிங் போடணும்.''

''அதான் நான் நினைச்சேன்'' நாணா அய்யருடைய பெண் உரக்கக் கத்தினாள்.

''மல்டி கலர் டிராயிங் போட்டு பிரிண்ட் பண்ணா என்ன?''

''லேபிள் லைன் டிராயிங்லதான் இருக்கணும்'' இன் னொரு பெண் வாதாடியது.

''தேவையில்லை. கலர் பெயிண்டிங்காகவும் ரொம்ப தத்ரூபமாகவும் இருக்கலாம். அப்படித்தான் இருக்கணும். ஸ்கேன் பண்ணி லித்தோ பிரஸ்ல கொடுக்கணும். மூணு லட்சம், நாலு லட்சம்னு பிரிண்ட் பண்ணி வைச்சிக் கணும்.''

''நிறைய காசு ஆகும். கலர் பிரிண்டிங்குனா காஸ்ட்லி பேப்பர் போட வேண்டியிருக்கும்'' லைன் டிராயிங்கை ஆதரித்த பெண் எதிர்த்து பேசியது.

''காசு பத்தி கவலையில்லைம்மா. படம் பார்த்தா கண்ணுல ஒத்திக்கிற மாதிரியிருக்கணும். அப்பள உறையை சடேர்னு கிழிக்கக் கூடாது. பொறுமையா நிதானமா படத்தை எடுத்து பத்திரப்படுத்தணும். ராஜேஸ்வரி அப்பளங்கிற பேரு மனசில பதியணும்.''

''ஒரு லேபிளுக்கு மூணு பைசா செலவழிக்கலாம். அஞ்சு பைசா செலவழிக்கலாம். இப்படி பண்ணினாக கிட்டதட்ட நாப்பது பைசா செலவழிப்பே.''

''பரவாயில்லைங்கிறேன். அது விளம்பரங்கிறேன்.''

''ரேப்பரே இப்படின்னா உள்ள இருக்கிற அப்பளம் எப்படின்னு கஸ்டமருக்கு தோணுமா தோணாதா'' ஒரு பெண் சவால் விட்டாள்.

''எதிர்மறையாகவும் பேசலாம். பளபளன்னு ரேப்பர் தான் இருக்குது. உள்ள சமாச்சாரம் எப்படியோன்னு சந்தேகப்படலாம்.''

கணேசலிங்கம் புன்சிரிப்போடு அந்த வீட்டுப் பெண்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''குளிக்கிற சோப்பு, திங்கற பண்டம் எவ்வளவு நல்லா பேக் பண்ணணுமோ அவ்வளவு நல்லா பேக் பண்ணியிருக்கணும். நாப்பது பைசா என்ன, ஐம்பது பைசா செலவழிக்கலாம். அதை வேற எதுலயாவது எடுக்கலாம். ஒரு கலர் லேபிள் பத்து ரேடியோ விளம் பரத்துக்கு சமம்'' ஒரு பிள்ளை ஆணித்தரமாய் பேசினான்.

''ராஜேஸ்வரி அப்பளங்கிற பேர் மனசில் பதியணும். அப்பளம் பார்த்தா இந்தப் படம் ஞாபகம் வரணும். இந்தப் படம் பார்த்தா நம்ம அப்பளம் ஞாபகம் வர ணும். படம் வரையதுல மட்டும் இல்லை. அந்த எழுத்து, லேபிளா மாத்தும் போது லேபிளுடைய கலர் எல்லாம் முக்கியம்.''

நாணா அய்யர் பெண்களை, பையன்களை வியப் போடு பார்த்தார். சந்தோஷமானார்.

''கணேசலிங்கம் நம்ம பசங்க எந்த மேட்டரைத் தொட்டாலும் நல்லா பேசறாங்கைய்யா. இத்தினி பேச்சுத் திறமையும் செயல்ல இருக்குமான்னு தெரி யலை.''

''பேசக் கத்துக்கணுங்க. பேச்சுதான் முதல். இதுல என் அபிப்பிராயத்தைச் சொல்றேன். திங்கற பண் டத்தை அழகாத்தான் கொடுக்கணும். நாப்பது பைசா, ஐம்பது பைசா எல்லாம் மேட்டரே இல்லை. ஜனங்க இப்ப காசு பாக்கறதில்லை. தரமான பொருளான்னு பாக்கறாங்க. சுத்தமா இருக்கான்னு பாக்கிறாங்க.''

''மாஸ்டர் ஒரு லிட்டர் தண்ணி பன்னிரெண்டு ரூபா கொடுத்து ஜனங்க வாங்குது. மெட்ராஸ்ல மட்டும் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் தண்ணி பாட்டில் விற்பனை ஆவுது. யாரோ பணக்காரங்க செய்றதில்லை. மிடில் கிளாஸ் பணக்காரங்களா ஆயிட்டாங்க. காசு செலவழிக் கிறாங்க. நான் சொல்றது புரியுதா மாஸ்டர். சத்தான விஷயம். ஆரோக்கியமான விஷயம் அவசியம்னு பாக்க றாங்க'' நாணா அய்யரின் மகன் கை ஆட்டிப் பேசினான்.

''கண்ட இடத்துல தண்ணி குடிச்சுட்டு ஜுரம், டயரியா வந்து டாக்டருக்கு செலவழிக்கறத விட, வெளியே குடிக்கிற தண்ணி மினரல் வாட்டரா இருக் கலாம். அதுக்கு பதினைஞ்சு ரூபாய் செலவழிக்கலாம்.''

''அதே மாதிரிதான் அப்பளம் ஏர் பேக்டா இருக்கணும்.''

''கவர்ச்சியா.''

''கவர்ச்சிதான். கவர்ச்சி இன்னா ஆபாசமில்லை, அட்ராக்டிவ். மாஸ்டர் சொல்றபடி ராஜேஸ்வரி வாட்டர் பெயின்டிங்கை ஸ்கேன் பண்ணி பிரிண்ட் பண்ணா பல பேர் பூஜையில வைச்சுக்குவான்.''

''இந்த ஒரு படத்தை காலண்டரா போடணும். கடை வாசல்ல போடணும். பெரிய ஹோர்டிங்கா பண்ணணும். படத்துக்கு கீழே ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரின்னு எழுதியிருக்கணும். அதுக்கும் கீழே ராஜேஸ்வரி அப்பளம் டிப்போ மெட்ராஸ். அவ்வளவுதான் இருக்கணும். உயர்ந்த, தரமிக்க, சுவையான இதெல்லாம் வேண்டாம். இவ்வளவு லட்சணமா படம் போட்டவா சரக்குல தப்பு பண்ண மாட்டா அப்படின்னு இருக்கணும்.''

''அடேங்கப்பா, அடேங்கப்பா ஒரு நல்ல நாளா பார்த்து எல்லோரும் கடைக்கு வந்துடுங்கடா. ஒரு வருஷம் தொழிலை நன்னா ஊனி கத்துக்கோங்கோ. இப்ப இருக்கறதை விட பெரிசா விரிவு பண்ணலாம்.'' நாணா அய்யர் குதூலத்துடன் தன் குழந்தைகளுடன் பேசினார்,

''டிராயிங் மாஸ்டர் தகதகன்னு ஒரு படம் கொண்டு வந்து கொடுத்தார்னா, அது லட்சணமா அமைஞ்சதுன்னா அந்தப் படத்துடைய மகிமையிலேயே வியாபாரம் பெருகிடாதா'' நாணா அய்யரின் மனைவி வைர மூக்குத்தி தெறிக்கப் பேசினாள்.

''நாளை காலையில் படத்தோட வரேங்க.'' கணேசலிங்கம் எழுந்து கை கூப்பினார்.

''எத்தனை மணிக்கு?''

''காலையில் ஆறு, ஆறரைக்கு வந்துடறேன்.''

''ஒரு ராத்திரியில முடிஞ்சுடணுமா?''

''முடியணும். நல்ல விஷயம் ஆரம்பிச்சா தள்ளிப் போடக் கூடாது. நாளை காலையில படத்தோட வரேங்க.'' எல்லோருக்கும் பொதுவாக சொல்லி விட்டு கண்ணேசலிங்கம் வெளியே வந்தார். எதற்கு வந்தாரோ அந்த காரியம் அவருக்கு மறந்து விட்டது.

# 8

''ஏபசவேயில்லையா, ஜாடமாடையா கூட சொல்லலையா, படம் வரையச் சொன்னாங்கன்னு பெயிண்ட் பிரஷ் வாங்கினு வந்துட்டீங்களா, ஒரு அட்வான்ஸ் கூட வாங்கினு வரலியா'' வடிவுக்கரசி கோபம் கலந்த வியப்போடு பேசினாள்.

''ரொம்ப லட்சணமா ஒரு படம் வேணும்னு கேட்டாங்க. அந்தப் படம் வந்த ராசியில வியாபாரம் பெருகணும்னு ஆசைப்பட்டாங்க. ஸ்ரீராஜ ராஜேஸ்வரி படம், அம்பாள் ராணியா, சக்கரவர்த்தினியா சிம்மாசனத்துல உட்கார்ந்திருக்கிற படம். சிவனுக்கு மேல சக்தி ஆட்சி செய்யுற படம். அப்படி ஒரு படம் வரைஞ்சு அவங்க சந்தோஷமாகி லட்சக் கணக்கில லேபிள் அடிச்சு, ஊர் முழுக்க ஒவ்வொரு அப்பளக் கட்டுலயும் அந்தப் படம் போகணும்.''

‘‘லட்ச ரூபா கடன் இருக்கே. அதை யார் அடைப்பாங்க.’’

‘‘அந்தப் படம் நம்ம கடனை அடைக்கும் வடிவுக் கரசி.’’

‘‘பைத்தியமா புடிச்சிருக்கு உங்களுக்கு. காசுக்கு வழி பாருங்கன்னா, அப்பளக் கடைக்கு லேபிள் எழுதறீங் களா, லட்ச ரூபா கடன் ஆட்டை முழுங்கி, மாட்டை முழுங்கி, வீட்டை முழுங்கினாதான் உங்களுக்கு நிம்மதி யாகுமா.’’

‘‘ஆத்திரப்படாத வடிவுக்கரசி. என் உள் மனசு இந்தப் படம் வரையணும்னு சொல்லுது. வரைஞ்சா நல்லதுன்னு சொல்லுது. இந்த நேரம் இந்தப் படம் நல்லா அமையணுமேன்ற கவலைதான் இருக்கு. வீணா சத்தம் போடாத. எனக்கு சாப்பாடு போடு. முடிஞ்சா ஒரு பிளாஸ்க்ல ரெண்டு கப் டீ போட்டுக் கொடு. ராவோடு ராவா நான் அந்தப் படம் வரைஞ்சாகணும்.’’

‘‘பேய்க்கு வாழ்க்கைப் பட்டுட்டேனே வேற கதி. என் பேச்சு உங்க காதுல ஏறுமா, பிளாஸ்க் டீ குடிப் பானேன். என்னை உலுக்கி எழுப்புங்க, நான் டீ போட்டுத் தரேன்.’’

‘‘துப்பு கெட்ட புருஷனை வைச்சிருந்தா எப்படி தூக்கம் வரும். எழுந்து டி போட்டு தரேன். அந்த திருப்தியாவது எனக்கு இருக்கட்டும்.’’

உணவு முடிந்து, வெற்றிலை பாக்கு போட்டு, பலகையில் பொருத்தப்பட்ட வெள்ளைப் பேப்பரிலேயே கண் லயித்திருந்தது. அந்த வெள்ளைப்பேப்பரை பார்க்க பார்க்க அந்த வெள்ளையில், வர வேண்டியது என்ன என்பதை மனம் தீர்மானம் செய்தது.

கற்பகத் தாயே கபாலீஸ்வரா தலைமுறை தலைமுறையாய் உங்களை வணங்கி வந்த குடும்பத்தில் ஒருவர் என்கிற யோக்கியதையில் கணேசலிங்கம் உங்களை நமஸ்கரிக்கிறேன். இந்த சென்னை நகரம் முழுவதும் சந்தோஷப்படவேண்டும் என்று சித்திர சத்திரம் கட்டி, ஓவியங்களும், பொம்மைகளும் அமைத்து, குழந்தைகளையும், பெண்களையும், கிராமத்து ஜனங்களையும், சந்தோஷப்படுத்திய வியாசர்பாடி வினாயக முதலியாரின் வம்சத்தினன் நமஸ்கரிச்கிறேன். உன் அம்சத்தை என் சித்திரத்தில் வரவிடு. முக விலாசத்தை ஊர்முழுவதும் பரப்ப எனக்கு வரம் கொடு. பெண் என்பவள் கடவுள், அவள் ஆதிக்கம் அன்பானது என்பதை சித்திரத்தில் சொல்ல வலிவு கொடு. பெண் போகம் அல்ல காம்பிரியம் என்று என் தூரிகை சொல்லட்டும். உலகத்தில் யார் எல்லாம் தோல்வியில் துவண்டு துக்கப்படுகிறார்களோ அவர்கள் என் சித்திரத்தை பார்த்து நம்பிக்கை கொள்ளட்டும். கண் மூடி கணேசலிங்கம் தியானம் செய்தார். தூரிகையில் தண்ணீரை தோய்த்து வெள்ளை பேப்பரில் ஓம் என்று எழுதினார். பின்பு பரப்பினார்.

ஸ்ரீராஜராஜேஸ்வரி படம் மெள்ள, மெள்ள ஒரு பூ மலர்வது போல், ஒரு விடியல் நிகழ்வது போல் அந்த வெள்ளை பேப்பரில் உருவாயிற்று. கண்கள் தவிர மற்ற எல்லாம் வரைந்து முடித்தார். பின்புலம் சரிசெய்தார். மெள்ள வடிவுக்கரசியை உலுக்கி எழுப்பினார்.

''இன்னா?''

''ஒரு டீ போட்டு தர்றியா''

''மணி என்னாச்சு''

''மூணு''

வடிவுக்கரசி வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள். முகம் அலம்பி டீ போட்டுக் கொண்டு எழுந்தாள்.

டயை மேஜையில் வைத்துவிட்டு படத்தைப் பார்த்தாள். தாயே என்று கைகூப்பினாள்.

''ரொம்ப நல்லா வந்திருக்குங்க. இந்த பட்டுப் புடவை மடிப்பு எப்படி கொண்டு வந்திங்க. மைசூர் சில்க்கா. சிரிப்பு அவ்வளவு அழகாயிருக்கு. கண் வரைஞ் சுட வேண்டியது தானே.''

''காலையில குளிச்சுட்டு வரையலாம்னு இருக்கேன். கையளவு எல்லாம் சரியா இருக்கா?''

''ரொம்ப லட்சணமாயிருக்கு.''

''இது வரைஞ்சு கொடுத்த பிறகு வாடகையைப் பத்தி பேசலாம்னு இருக்கேன்.''

''என் ராசா'' வடிவுக்கரசி நெருங்கி நாற்காலியில் உட்கார்ந்திருந்தவரின் முகத்தை அணைத்துக் கொண் டாள்.

''கடன் இருக்கே என்கிற கவலையில படபடப்பா பேசிட்டேன். மத்தபடி நீ நல்ல புருஷன் சொக்கத் தங்கம்னு எனக்குத் தெரியும். ஊர்ல ஒவ்வொருத்தன் பொண்டாட்டியை எப்படி படுத்துறான்னு தெரியும். நான் கோபப்பட்டாலும், பதிலுக்கு கோபப்படாத ஆம்பளை அதனாலதான் உன் கையில இவ்வளவு நல்ல தொழில் இருக்கு. கை கூப்புற மாதிரி படம் வரைய முடியுது. இன்னும் வேலையிருக்குதா.''

''சிம்மாசனத்துல அந்த வெல்வெட் ஏத்தணும்.''

''காலையில ஏத்திக்கலாம் இப்ப வந்து படுங்க.''

''முடிச்சுட்டு வந்துடறேன் வடிவுக்கரசி.''

சிம்மாசனத்தை நகாசு வேலை செய்துவிட்டு வர்ணங் களை மூடி தூரிகைகளை அலம்பி வைத்துவிட்டு கணேச

லிங்கம் மனைவிக்கு அருகில் வந்து படுத்துக் கொண்டார். வடிவுக்கரசி அவர் வருகைக்கு காத்துக் கிடந்தவள் போல் திரும்பி அவரை கட்டிக் கொண்டாள். அவள் உடம்பின் மிருதுவும் சூடும் அந்த நேரம் அவருக்குத் தேவையாக இருந்தது. அவர் நெற்றியை பிடித்து விட்டு தோள்களை அழுத்தி எடுக்க அந்த சுகத்தில் அவர் தூங்கிப் போனார்.

ஐந்து பத்துக்கு டக்கென்று மனம் விழித்தது. புத்தி இயங்க ஆரம்பித்தது. கட்டிக் கொண்டிருந்த மனைவியை மெள்ள அகற்றிவிட்டு கடன்களை முடித்து அப்படியே குளித்து விட்டு வந்தார். பூஜை அறையில் விளக்கேற்றி னார். கண் மூடி சிறிது நேரம் அமர்ந்திருந்தார். விடிய லுக்கு முன் படத்துக்கு விழிகள் வரைந்தார். கண் திறந் தார். தூரிகையை வைத்து விட்டு படத்திற்கு எதிரே கை கூப்பினார். இனி இது காகிதம் அல்ல. இனி இது வர்ணம் அல்ல. வெறும் ஓவியம் அல்ல. இது கடவுள். ஆணுக்கு மேலான பெண்மை. ஆணை வழி நடத்துகின்ற பெண்மை. இது ஒரு சக்தி, ஒரு தூண்டுகோல், ஒரு கிரியா ஊக்கி.

ஒரு மனிதன் ஒரு படத்தின் முன்பு, அல்லது சிலையின் முன்பு கைகூப்பும் போது அவன் அவைகளின் முன்பு கை கூப்பவில்லை. அவன் தன்னுள் தன்னை நோக்கி வணங்கு கிறான். அவனுக்குள் அவனைப் பற்றி அவனோடு அவன் பேசுகிறான்.

உருவமில்லாத மனதை வணங்க, ஒரு உருவம் தேவை. கடவுள் உருவமற்றவர் தான். அவருக்கு உருவம் கொடுப்பது கடவுள் உருவமற்றவர் என்பதைப் புரிந்து கொள்ளவே. எல்லா மனிதர்களாலும் அருவத்தை அதாவது உருவமற்றதை வணங்கி விட முடியாது. தன் உருவத்தை பற்றி மதிக்காதவனை தன்னை உருவம் என்று கொள்ளாதவரே அருவத்தை வணங்க முடியும்.

உருவ வழிபாடு கூடாதென்று சொன்ன எல்லா மதமும் ஏதோ ஒரு வழியில் உருவ வழிபாட்டை வைத்துக் கொண்டுதான் இருக்கும் மனிதன் பலஹீனன். உருவ வழிபாடுதான் அவனுக்கு இதமானது. உருவமில்லாமல் அவனுக்கு இருக்க முடியாது. உருவமற்ற வெளியை அவன் உணர்ந்துவிட்டால் அவன் மனிதன் இல்லை. தேவன். தேவ நிலையில் வழிபாடே தேவையில்லை.

ஐந்தே முக்காலுக்கு மனைவியை எழுப்பாமல் உடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினார். வெளிச்சம் பூத்த நேரத்தில் நாணா அய்யர் வீட்டு வாசலில் நின்றார்.

யாரேனும் வாசலுக்கு வந்தால், உள்ளே போகலாம் என்று நினைத்தார் படச்சுருளோடு வாசலில் உட்கார உள்ள வாங்க முதலியார் என்று நாணா அய்யரின் குரல் கேட்டது.

உள்ளே போய் ஒரு பெரிய மணைப் பலகையில் ஓவியச் சுருளைப் பிரித்து மேலும் கீழுமாய் பெரிய ரப்பர் பேண்ட் போட்டார். படத்தை எடுத்து ஒரு சோபாவில் வைத்தார்.

''குட்மார்னிங், குட்மார்னிங்'' என்று நாணா அய்யரின் வளர்ந்த பையன்களும், பெண்களும் ஹாலுக்குள் நுழைந்தார்கள். எல்லோரும் குளித்து முடித்திருந்தார்கள். அமைதியாய் அரை வட்டமாய் நின்று பார்த்தார்கள்.

நாணா அய்யர் படத்தை நிமிர்ந்து பார்த்து கண்ணை மூடிக் கொண்டார். மறுபடியும் நிமிர்ந்து பார்த்து முகத்தைப் பொத்திக் கொண்டார்.

''படம் ரொம்ப நல்லா வந்திருக்குப்பா'' அவருடைய மூத்த பையன் பேசினான். அடுத்த பையன் படத்தை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

மாமி குத்துவிளக்கு எடுத்து வந்து அங்கு தீபம் ஏற்றி னாள் பெண் குழந்தைகள் பேப்பர் மீது படாமல் தோட்டத்திலிருந்து கொய்து வந்த பூக்களை வைத் தார்கள். நமஸ்கரித்தார்கள்.

''இதுதான் ராஜராஜேஸ்வரி படம். ஆரம்பத்தி லேர்ந்து இப்படித்தான் இருந்திருக்கணும். நம்ப எல்லா ப்ராடக்ட்லயும் இந்தப் படம்தான். படத்தை விட்டு கண்ணை எடுக்கவே முடியலை. இந்தப் படம் சிரிக்கிறது. சந்தோஷமா அமைதியா சிரிக்கிறது.''

''அப்பா காலண்டர் போடுப்பா. ஜூன் மாதம் காலண்டர் போடப்படாதா. ஜூன் டூ மே போடு. எல்லா வீட்டிலியும் காலண்டர் பழசாப்போய் அழுக்கா தொங்கும். மாச நடுவில இந்தப் படம் கொடுப்போம். அப்ப ரொம்ப சந்தோஷமாயிருக்கும். ஏம்பா ஒன்னும் பதிலே பேச மாட்டேங்கறே.''

''உனக்கு படம் பிடிக்கலையாப்பா'' குழந்தைகள் அவரை லேசாய் உலுக்கினார்கள்.

நாணா அய்யர் மெள்ள நிமிர்ந்தார். ''அந்தப் படம் எங்கம்மா மாதிரியே இருக்கு. செத்துப் போன எங்கம்மா வுக்கு ராஜராஜேஸ்வரி வேஷம் போட்ட மாதிரியிருக்கு. கிரீடம் போடாத இத்தனை நகைகள் போடாத வெறும் கொண்டையோட படம் இருந்தா அது அசல் எங்கம்மா படம்.''

''என் அம்மாவை நீங்களே பாத்தது கிடையாது கணேசலிங்கம் எங்க பாத்திருக்கப் போறார். இதுக்குப் பேருதான் கடவுள் அருள். மூத்தோர் புண்ணியம். டிராயிங் மாஸ்டர் கையில தெய்வம் புகுந்து வரைஞ் சிருக்கு''.

''ராத்திரி எட்டு மணிக்கு சொன்னோம். காத்தாலை கொண்டு வந்துட்டாரே எவ்வளவு உழைப்பு. இத்தனை வேகமா செய்தாலும் அதுல எத்தனை துல்லியம். எவ்வளவு

அழகு. முதலியார் நான் இதுக்கு எவ்வளவு தரணும்'' நாணா அய்யர் பிரியமா தோளில் கை வைத்தார்.

''இதுக்கு காசு வேண்டாம் அய்யரே''

''பின்னே''

''இது என் அன்பளிப்பு''

'''என்னய்யா இது?''

''இது பார்த்தா அம்மா மாதிரி இருக்குன்னு சொன்னிங்க. அம்மாவுக்கு யார் விலை வைக்க முடியும்?''

''கணேசலிங்கம் இந்த டிராயிங் போடவா வீட்டிற்கு வந்தீர். எதுக்காக வந்தீர். டிராயிங் போட்டுத் தரேன்னு எழுந்து போயிட்டீர். நேத்து நீங்க வந்த காரணம் என்ன?''

''இப்ப இது முக்கியமா இல்லை. நான் பிச்சைக் கேட்கனும்னு வந்தேன். ராஜராஜேஸ்வரி உழைச்சு சம்பாதிடான்னு சொல்லிட்டாங்க.''

''என்னா சொல்றீங்க கணேசலிங்கம்?''

கணேசலிங்கம் தன் தந்தையை பற்றியும் தான் பட்ட கடனைப் பற்றியும் நாணா அய்யரிடம் சொன்னார். அவர் வீடு மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தது.

''அப்போ இதுக்கு நீங்க காசு வாங்காம போகப்படாது. மூணு அடிக்கு ரெண்டு அடிப் படம் கீழே ராஜேஸ்வரி அப்பளம் கம்பெனின்னு இருக்கும். சென்னை நாலுன்னு போட்ருக்கும். இதை ஸ்கேன் பண்ணி பல்வேறு சைஸ்ல பிலிம் எடுத்து வைச்சுக்கப் போறேன். இந்தப் படத்தை கடையில் மாட்டப் போறேன். இதை வரைஞ்சது கணேசலிங்கம்னு போற வர்றவன்கிட்ட எல்லாம் சொல்லப்போறேன். இந்த மாதிரி படம் இருப்பது ரொம்பஉத்தமம்னு சொல்லப் போறேன்.'

‘‘இது என்காசு. என்னோட முதல் காசு. என் சன்மானம். இந்தப் படம் பல லட்சம் பெறும். ஆனா நான் கொடுக்கிற இந்தக் காசு உனக்கு அதைவிட அதிகமா கொண்டு வந்து தரும்.’’ செக் எழுதி சுவரில் போட்டு கைகளில் ஏந்தி வைத்து எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

வீட்டுக்குப் போய் சாப்பிட்டுத் தூங்கினார். நகைக் கடையில் இருந்து ஆள் வந்தது. கீழே போய் உட்கார்ந்ததும் பட்டுப்புடவை கடையிலிருந்தும் நகைக் கடையில் உட்கார்ந்திருந்தார்கள்.

‘‘வாடகை உசத்தி கேட்க வந்தீங்களாம். அப்புறம் வேணாம்னு சொல்லிட்டீகளாம். ரொம்ப அற்புதமா ஒரு படம் வரைஞ்சீங்களாம். நமக்கும் ஒரு படம் வரையணுமே. எங்க ஊர் சமயபுரம். சமயபுரம் மாரியம்மன் படம். நாலு அடிக்கு மூணு அடியா வரைஞ்சிடுங்க.’’

‘‘எங்க குல தெய்வம் திருநெல்வேலி காந்திமதி. அந்த படம் நாலு அடிக்கு மூணு அடி எங்க கடை பேர் விலாசம் போட்டு வரைஞ்சிடணும்’’

அந்த அந்த ஊர் கோவில்களின் சிறிய படங்கள் தரப் பட்டன. மைலாப்பூரின் வேறு கடைக்காரர்களும், வக்கீல்களும் பெரிய மனிதர்களும் திடீரென்று விழித்துக் கொண்டவர் போல் வந்தார்கள்.

ஒரு வட இந்திய துணி வியாபாரி கற்பகாம்பாளின் படம் மூலஸ்தனமாய் வேண்டும் என்று கேட்டார்.

கோயிலில் உட்கார்ந்து ஒரு பிற்பகல் வேளையில் கறபகாம்பாளைப் பார்த்து ஸ்கெட்ச் போட்டுக் கொண்டார். ஐந்து அடிக்கு நாலு அடியாய் வரைந்தார். கோவில் அதிகாரிகள் படம் பார்த்துவிட்டு வியந்து போனார்கள்.

கற்பகாம்பாள் உள் பிரகாரம் சுற்றி இந்த மாதிரி பெரிய படங்கள் வரைந்து வைத்தால் என்ன என்று அறங் காவலருக்கு எண்ணம் தோன்றியது.

பத்தாயிரம் ரூபாய் காணிக்கை கொடுத்தால் அவர்கள் சொல்கிற தெய்வத்தின் படம் வரையப்படும். அந்தப் படம் சத்தியின் படமாக இருப்பது முக்கியம். கீழே மூன்று அங்குல உயரத்துக்கு பெயர் எழுதிக் கொள் ளலாம். கடை பெயர் எழுதிக் கொள்ளலாம். கோவிலில் படம் வைத்த புண்ணியமும் உண்டு கடைக்கு விளம் பரமும் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது.

ஒரு மாதத்தில் பன்னிரெண்டு ஆர்டர்கள் வந்தன. கூேசலிங்கம் பள்ளிக்கூடத்துக்கு சம்பளம் இல்லாத விடுப்பு போட்டார் இரவு பகலாய் உட்கார்ந்து வரையத் துவங்கினார். அஷ்டலக்ஷ்மியின் படங்களும் வரலட்சுமி யின் திரு உருவமும். திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி யும், திருவாரூர் கமலாம்பிகையும், மதுரை மீனாட்சியும், அங்காள பரமேஸ்வரியும், கர்ப்பரட்சாம்பிகையும் ஐஸ்வரிலட்சுமியும் லலிதாம்பிகை படமும் வரைந்தார். கன்னியாகுமாரி அம்மனும் காளத்திநாதரும் ஒரு போலீஸ் அதிகாரியின் விருப்பப்படி ஐயப்பனும், இன்னொருவரின் விருப்பப்படி அடி முடி காணாத சிவனும் வரைய, வரைய ஆர்டர்கள் வந்து கொண்டேயிருந்தன. தடித்த சட்டங்கள் போட்டு எல்லாம் கோவில் உள் பிரகாரத்தில் மாட்டப்பட்டன.

''கோவிலுக்கு ஒன்றுமே பண்ணலைன்னு உங்கப்பா சொன்னாலும் சொன்னாரு அவருக்கு சேர்த்து நீங்க பண்ணீட்டீங்க. கோவில் கத்துற அத்தனை ஜனங்களும் ஒவ்வொரு படமா கும்பிடுதுங்க. எல்லா படத்து முன் னாடியும் கோலம் போடறாங்க. எல்லா படத்து முன் னாடியும் பூ வைக்கிறாங்க. அதுவும் அந்த அங்காள

பரமேஸ்வரியை வைச்சக் கண்ணு வாங்காம பார்க்கிறாங்க. மரப்பலகை போட்டு விளக்கேத்துறாங்க. இதை வரைஞ்சது என் புருஷன்தான்னு சொல்லிக்கணும்னு ஆசை, ஆனா சொல்லாமலேயே சந்தோஷத்தோட வந்துட்டேன்.''

''நான் ஒன்னு சொல்லட்டா, கோவிச்சுக்க மாட்டீங்களே. எனக்கு ஓவியம் பத்தி அவ்வளவு தெரியாது அதுல பல படங்கள்ல உங்கம்மா சாயல்தான் இருந்தது. உங்கம்மா உத்து பாப்பாங்களே அந்த மாதிரிதான் அங்காள பரமேஸ்வரியும், லலிதாம்பிகையும் ஐஸ்வர்ய லட்சுமியும் கண்ணால பேசறாங்க. படத்தை உத்துப் பார்க்கிற அத்தனை பேருக்கும் அந்த தெய்வம் கண்ணு வழிய பேசறது நிச்சயமா தெரியும்.''

''உங்க பொண்டாட்டின்ற திமிர்ல நீங்க செல்லம் கொடுத்ததால அப்பப்ப நான் அலட்டலா பேசியிருப்பேன். பள்ளிக்கூடத்து டிராயிங் மாஸ்டர் நினைப்புல நான் உங்களை மதிக்காம நடந்திருப்பேன். அதுக்காக என்னை மன்னிச்சுடணும்.''

''அத்தினி ஜனமும் படத்தை பார்த்து கன்னத்துல போட்டுனு போறப்ப உங்ககிட்ட திமிரா பேசிட்டமேன்னு மனசு குறுகுறுக்குது. நீங்க சாதாரணம் இல்லை எந்த மூதாதை எந்த டிராயிங் போடறவனுக்கு அள்ளிக் கொடுத்தானோ, எவ மனசை குளிரப்பண்ணானோ தெரியலை. உங்க ஒவ்வொரு படமும் அப்பேர்பட்ட மகத்துவமா கோயில்ல நிக்குது.''

''இன்னும் ஒரு கேள்வி. என் மூஞ்சி படம் எழுதி பார்க்கிற மூஞ்சியில்லையா. என் மூஞ்சியில அன்பு கருணையெல்லாம் வரவே வராதா. எம்மூஞ்சி எங்கியாவது வரையுங்களேன் அம்பாளுக்கு ஒரு தோழிப் பெண் மாதிரியாவது வரையுங்களேன்.''

கணேசலிங்கம் மனைவியை அருகே அழைத்தார். தொடையைத் தட்டி அங்கே உட்காரச் சொன்னார். இடுப்பை வளைத்து அவளை இறுக்கிக் கொண்டார். முகம் திருப்பி உற்றுப் பார்த்தார். முத்தமிட்டார்.

"அங்கம் பூம்பாவைக்கு சன்னதி எழுப்பி அதுக்கு மேல பொம்மை செய்ய சொல்லியிருக்காங்க. நான் இது வரைக்கும் பொம்மை செய்தது இல்லை."

"சிவனேசன் செட்டியாரையும், அவர் பொண்டாட்டியையும் பொம்மையா பண்ணணும். நடுவே அஸ்தி கலசத்திலிருந்து ஒரு பதினேழு வயசு பொண்ணு வர்றாப் போல பண்ணனும், எதிரே திருஞான சம்பந்தரை திடகாத்திரமா நிக்க வைக்கணும். அங்கியே உட்கார்ந்து பொம்மை செய்யப் போறேன். அங்கூப் பூம்பாவை சன்னதிக்கு மேல விமானத்துல இதை பொருத்தி வைக்கப் போறேன். விமான வேலைக்கு பத்தாயிரம் ரூபாய் தர்றேன்னு சொல்லியிருக்காங்க. யாரு உபயகர்த்தாரோ அவங்களே தரேன்னு இருக்காங்க."

"நான் அந்த காசு வாங்கி வர்ற அறுபத்து மூவர் விழாவுக்கு தயிர் சாதம் தரப்போறேன். ஒரு பொட்டலம் எட்டணா மதிப்பு. இருபதாயிரம் பொட்டலம் தரப் போறேன். காலையிலிருந்து, சாயந்திரம் வரைக்கும் நம்ம மூதாதையர் பெயரை சொல்லி, சொல்லித் தரப் போறேன். நீ என்னைத் திட்டறதாவே தெரியலைடி. ஒரு அம்மா, புள்ளைக்கு நல்லது சொல்லறது போலத் தான் உன் பேச்செல்லாம் படுது உன் மூஞ்சி படத்துல வராம இருக்கலாம்."

"லலிதாம்பிகை உடம்ப பாாத்தியா. அது உன் உடம்பு. வரலட்சுமி கை பாத்தியா. அது உன் கை. கன்னியாகுமரி அம்மன் தலை முடியை பார்த்தியா அது உன் முடி. உனக்கு உன் முகம் தானே வேணும். செய்யறேன் பார்."

அங்கம் பூம்பாவை விமானத்தில் அந்த பொம்மை களைப் பார்த்ததும் வடிவுக்கரசி திடுகிட்டுப் போனாள். குழந்தைகள் இரண்டும் குதித்து அது எங்கம்மா. எங்கம்மா என்று கத்தின. பூம்பாவையின் தகப்பன் சிவநேசச் செட்டியாரின் முகம் கணேசலிங்கம் முகமாக வும், சிவநேசச் செட்டியாரின் மனைவி முகம் வடிவுக்கரசி முகமாகவும் அந்த மலையாளக்காரியின் மகள் சுசீலா முகம் பூம்பாவையின் முகமாகவும் இருந்தன.

''ஏங்க நம்ப ரெண்டு பேர் முகத்தையும் கவலை யிருக்கிறதா பண்ணிட்டீங்க.''

''காசுக்கு ஆசைப்படறவங்க மூஞ்சி கவலையாத் தான் இருக்கும். வீட்டில் பணம் காய்ச்சி மரமே இருந்தா கூட முகத்துல சந்தோஷமே வராது. செல்வம் சம்பாதிப் பதும், துக்கம், செலவழிப்பதும் துக்கம், சேத்து வைத் ததை பாதுகாக்க வேண்டுமே என்ற துககம். எல்லா நிலையிலும் துக்கம் பிடிக்கிற செல்வத்தின் மீது ஆசை யுள்ளவர்கள் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும். அதுனால...''

''புரியுது.''

''நாளையிலிருந்து பள்ளிக்கூடம் போகப் போறேன். கோடை விடுமுறை மட்டும்தான் இதுமாதிரி படம் வரையற வேலை. மத்தபடிக்கி வாத்தியார் உத்தியோ கத்துல வர்ற சம்பளமும், வாடகைப் பணமும் போதும்.''

''அஞ்சு சவரனுக்கு ரெண்டு வளையல் பண்ணி மதுரைக்கு போய் கொடுத்துட்டு வருவோம். அங்கு ஏகப் பட்ட சிற்பம் இருக்காம். ஒரு நாலு நாள் தங்கி ஸ்கெட்ச் போட்டுட்டு வருவோம். உன் முகம் பொம்மையா பண் ணிட்டேன். சுசீலாவ நாம பெத்த பொண்ணா நினைச் சிக்கிட்டேன். உனக்கு சந்தோஷம்தானா.''

''கடவுளே நீ என்னா சொன்னாலும் சந்தோஷம். என்னா செய்தாலும் சந்தோஷம்.''

''அப்படியா, இங்க வா. இங்க வந்து உட்கார்'' கணேசலிங்கம் வலது தொடையைத் தட்டினார்.

''அடடா நாப்பத்தி அஞ்சு வயசுக்கு நாய் புத்தின்னு வாங்க. நாள் தவறாம தொந்தரவு பண்றிங்களே.''

''ஒரு ஓவியனைப் பார்த்து நாய்னு சொல்வியா?''

''கடவுளே தப்பு, தப்பு, தப்பு''அவள் அவர் தொடையில் அமர்ந்து அவர் நெஞ்சைத் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள். அவர் அவளை சந்தோஷமாக இறுக்கினார்.

**முற்றும்.**

---

இந்த நாவலில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. எவரையும் குறிப்பிடுவன அல்ல.

இந் நாவலுக்கு திருமயிலைத் திருத்தலம் இலக்கிய வரலாற்றுப் பார்வை என்கிற டாக்டர் அ. ராஜசேகர் அவர்களின் புத்தகம் பேருதவியாய் இருந்தது. அவர்களுக்கு என் நன்றி.

மயிலை கற்பகாம்பாள் கோயில் நிர்வாக அதிகாரிகள் திரு. குமாரசாமி அவர்களுக்கும், திரு. ராஜா அவர்களுக்கும், கபாலீஸ்வரர் கோவில் அறங்காவலருக்கும், அவரது சகாக்களுக்கும் என் வணக்கமும், அன்பும்.

என்றென்றும் அன்புடன்

**பாலகுமாரன்**

# தொட்டால் பூ மலரும்

## 1

நீருக்குள் காலை வைத்ததும் அதன் குளுமை உடம்பு முழுதும் பரவி லேசாய் சிரிக்க வைத்தது. ஸ்ரீதரன் கொள்ளிடம் நதியில் ஜட்டியோடு இறங்கி திரும்பிப் பார்த்தான். அவனைத் தொடர்ந்து இறங்கிய நண் பர்கள் எல்லோருமே அவனைப் போலவே நீரில் கால் வைத்ததும் பல் தெரியச் சிரித்தார்கள்.

ஒருவனுக்குக் குளுமையும், சந்தோஷமும் தாங்க முடியவில்லை போலிருக்கிறது. உடம்பைக் குலுக்கிக் கொண்டு கரைக்குப் போய் மறுபடியும் நீருக்கு ஓடி வந்தான்.

சாதாரணமாய் இறங்காமல் கால்களை உயரத் தூக்கித் தண்ணீரில் இருந்து கொண்டே தண்ணீரிலிருந்து விடுபடுவது போல ஒரு அவஸ்தை காட்டினான். அவன் குதித்து வருவதை, குளுமை தாங்காமல் தவிப்பதை மற்ற நண்பர்கள் சிரிப்போடு பார்த்தார்கள்.

''இங்க லேடீஸ் கும்பல் ஜாஸ்தி, கொள்ளிடம் போயிடலாண்டா'' என்று நகர்ந்தார்கள். யாரோ ஒருவன் இதை உரக்கச் சொன்னதும், எது சொன்னாலும் கேட்டுக் கொள்கிற ஜாதியாய் சிலர் டக்கென்று காரில் ஏறிக் கொண்டார்கள்.

அது பசுபதியின கார். பசுபதியின் சித்தப்பா வட்டச் செயலாளர். அந்த வட்டச் செயலாளருக்கு பத்து வயதில் மகன் இருக்கிறான். அவனைத் தூண்டி விட்டு அவன் காவிரியில் குளிக்க ஆசைப்பட்டதாய் கார் வாங்கி, அவனை முன் சீட்டில் அழுந்த உட்கார வைத்து—

''ஆத்துல குளிக்கப் போலாமா, கார் இருக்கு. ஒரு மூணு மணி நேரம் நீச்சல் போட்டுட்டு வருவோம்'' என்று பசுபதிதான் அழைத்தான்.

பசுபதி ஸ்ரீதரனின் நேரடி சிநேகிதன் அல்ல. ஸ்ரீதரனுக்கு முருகானந்தம் சிநேகிதம். முருகானந்தத்துக்கு பசுபதி சிநேகிதம்.

''பசுபதி, இவரு என் ஃபிரண்டு ஸ்ரீதரன். இவரும் ஆத்துக்கு வரணும்னு ஆசைப்படறாரு. கூட்டியாரட்டுமா?''

''நல்லா கூட்டி வாப்பா. சார் வாங்க. ஜாலியா போய்ட்டு வந்துருவோம்'' எல்லோரிடமும் பாசம் உள்ளவன் போல் பசுபதி நடித்தான்.

''நான் வரேன்னு ஒன்னும் ஆசைப்படலியேடா'' ஸ்ரீதரன் முருகானந்தத்திடம் கேட்க—

''நான் ஆசைப்பட்டேன் வாயேன்'' முருகானந்தம் சிடுசிடுப்பாய் பேசினான்.

கார் பெரிய கடைத் தெருவில் நகர்ந்து, நகர்ந்து விஷயம் சொல்லி நிறைய பேரை ஏற்றிக்கொண்டது. ஒருவர் மடியில் ஒருவர் உட்கார்ந்து கொள்ள உற்சாகமாய் காவிரி நோக்கிப் போயிற்று. இரண்டு வாலிபர்களைத் தவிர அனேகமாய் ஸ்ரீதரனுக்கு எல்லோரையும் தெரியும். பிறந்து வளர்ந்ததெல்லாம் திருச்சி என்பதால் காரில் உள்ள பலபேர் பால்யத்திலிருந்தே பார்த்தவர்களாயிருந்தார்கள். பேசிப் பழகியதில்லையே தவிர, பார்த்தவுடன் தெரியும் என்பதாய் சிரித்தார்கள். கொள்ளிடத்தில்

இறங்கிய போதும் கூட பசுபதி, முருகானந்தம் தவிர மற்ற நண்பர்களின் பெயர்கள் நினைவில்லை.

பழக்கம் உண்டு, ஆள் தெரியும். ஆனால் பெயர் தெரியாது என்கிற உறவு மிக விநோதமாக இருந்தது.

''சார், நீங்க ஸ்ரீதர் தானே, பெரிய கடைத்தெரு பக்கம் எங்கியோ இருக்கீங்கல்ல... நானும் அதே ஏரியா தான்'' உயரமாய் ஒரு வாலிபன் கைநீட்ட ஸ்ரீதரனும் கை நீட்டி பற்றி குலுக்கினான்.

''பரவால்லியே என் பேரு ஞாபகம் வைச்சிருக்கீங்களே. உங்களைத் தெரியும் சார், உங்க கடை கல்லாவுல உட்கார்ந்து இருப்பீங்க. நான் பாத்திருக்கிறேன். ஆனா பேர் தெரியாது...ஸாரி...''

''கல்லாவுலேயே உட்கார்ந்தா நம்மள பத்தியாருக்கும் எதுவும் தெரியாது ஸார். நமக்கும் ஊரைப்பத்தி ஒன்னும் தெரியாது. காசு காசுன்னு உட்கார்ந்துட்டு வாழ்க்கையை கோட் டை உட்டுறோம்.

''எம்பேரு எப்படி ஞாபகம் வைச்சுருக்கீங்க?''

''அதான் புள்ளையாரு சக்தி அன்னைக்கு பாட்டு பாடினீங்களே 'பூந்தோட்டத்தில, ஏய் காதல் கண்ணம்மா'' அந்த இளைஞன் பாடிக் காட்டினான்.

''நீங்க வந்திருந்தீங்களா அந்தக் கச்சேரிக்கு'' முருகானந்தம் உள்ளே புகுந்தான். ''பெரிய கடை முழுக்க பேச்சாயிடுச்சு சார் அன்னிக்கு. மெட்ராஸில யிருந்து வந்த ட்ரூப்பை விட நம்ம ஏரியா ஆளு நல்லா பாடறான்னு பேச்சாயிருச்சு. அப்படி கலையற ஜனங்கல்லாம் டக்கு டக்குன்னு நின்னுட்டாங்க. ஒன்ஸ் மோர், ஒன்ஸ்மோர்னு கத்தினாங்க.''

''அடுத்த பாட்டு இன்னும் நல்லா பாடினாரே.'' கை குலுக்கியவன் தொடர்ந்து பாராட்டினான். ''அந்தி மழை பொழிகிறது. ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது. நடுவில அந்த ஹம்மிங்கோட சேர்ந்து பாடற போது அள்ளிட்டிங்க சார்...''

''இந்த ரெண்டு பாட்டுக்கு கூட பிகில் அடிச்சேன் சார்.'' முருகானந்தம் பனியனைக் கழட்டிக் கொண்டே நினைவு கூர்ந்தான். ''ஆத்தாடி இள மனசொன்னு ரெக்கை கட்டிப் பறக்குது சரிதானா... கணீர்னு எடுத்தா பாருங்க சார்...அப்படி எடுத்ததுக்கே கை தட்டல் சார்.''

''முருகானந்தம், வுடுப்பா எப்பவோ பாடினது. அதையே சொல்லிட்டு இருக்காத...''

''அதில்ல ஸ்ரீதர். உங்களை மறக்க முடியாது அதுக்காக சொல்ல வந்தேன். நீங்க நல்லா பாடினீங் கன்றது மட்டும் வைச்சு நான் பேசல. நீங்க பாடினது என் லைப்புல ஒரு டர்னிங் பாயிண்ட்.''

''டர்னிங் பாயிண்டா... சார் பேரே சொல்லலியே.''

''என் பேர் குமாரவேல். நீங்க பாட்டு பாடற அன்னிக்கு, என் பொண்டாட்டி என் கடைக்கு முதல் முதலா வந்தா. அப்ப பொண்டாட்டி இல்லை. காலேஜில படிச்சிட்டு இருந்தா. சொந்தக்காரப் பொண்ணுதான். நான் கடையைத் திறந்து சேர் எல்லாம் எடுத்து பிளாட்பாரத்துல போட்டேன்.''

''மெட்ராஸ் ட்ரூப் நல்லாவே பாடலடி, போலாம்னு சிநேகிதிகளோட எழுந்த போதுதான் நீங்க பாட ஆரம்பிச்சீங்க. அந்த மூணு பாட்டும் செமை சாங்ஸ். நீங்க பாடற நேரத்தில ஒருத்தரை ஒருத்தர் உத்துப் பாத்து ஒரு மாதிரி லவ்வாயிடுச்சு போங்களேன். அப்புறம் பேசிப் பழகி ரெண்டு வருஷம் முன்னாடி

கல்யாணம் ஆயிடுச்சு சார். என் வொய்ப் கூட ஒரு தடவை உங்களை கடைவீதில பார்த்துதாம். அதுனால தான் சொல்றேன். உங்களை மறக்கவே முடியாது.''

ஸ்ரீதரன் பேசாமல் மெல்லிதாய் சிரித்தபடி நின்றான். இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் பாராட்டியவரை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தான்.

''மூணு பாட்டுக்கப்புறம் மெட்றாஸ் ட்ரூப் வெறுப் பாயிடுச்சு. மறுபடியும் மறுபடியும் அவங்க ஆளுகளாவே கொண்டாந்து பாட வைச்சிச்சி. இவனை மேடையை வுட்டு கீழ் இறக்கிடுச்சு. மெட்றாஸ் ட்ரூப் பாட ஆரம் பிச்ச உடனே கூட்டம் கலைஞ்சிடுச்சு பாவம், இவனுக்கு ஒரு மாலை கூட போடலை.''

''கூட்டம் கலைஞ்சதுதான். இவருக்குப் பாராட்டு. இப்ப கூட முடிஞ்சா ரெண்டு பாட்டு பாடுங்க சார்.'' குமாரவேல் நீரில் நடந்தபடியே கேட்டுக் கொண்டான்.

அகலமான கொள்ளிடம் மூன்று பிரிவாய் பிரிந் திருந்தது. தென் கரையோரம் கால்வாய் போலவும் நடுவே ஆழமின்றி பரவலாகவும் வடகரையில் ஆழ மாகவும், வேகமாகவும் ஓடிக்கொண்டிருந்தது. நண் பர்கள் நடு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். துணிகளை அவிழ்த்துக் கரையில் வைத்துவிட்டு முழங் கால் அளவு ஜலம் ஓடும் காவிரியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''இவரு பசுபதி, இவரு வெங்கிடேசன், இவரு சீனுவாசன், இவரு நாராயணசாமி. இது பசுபதியோட சித்தப்பா புள்ளை தமிழ்வேல் நான் குமாரசாமி, இவரு முருகானந்தம். இது ஸ்ரீதரன்.''

''உங்க பேரு இன்னாங்க சார்?'' சற்று ஒல்லியாய் அமைதியாய் இருந்தவரைப் பார்த்து குமாரவேல் கேட்டான்.

''பகத்சிங்.''

''சார்?''

''என் பேர் பகத்சிங்.''

நீரில் உட்கார்ந்த அனைவரும் அவனை விநோத மாய் திரும்பிப் பார்த்தார்கள்.

''நீங்க சிங்கு ஜாதியா சார்.''

''இல்லீங்க. சோழிய வெள்ளாளர். எங்க அப்பா காங்கிரஸ் கட்சி. தேசம், விடுதலைப் போராட்டம் இதெல்லாம் கொஞ்சம் ஈடுபாடான ஆசாமி. அதனால இந்த பேரு வைச்சாங்க.''

''பகத்சிங் சுதந்திரப் போராட்டதில் ஈடுபட்டாரா சார்...?'' யாரோ கேட்டார்கள்.

''ஆமாம்பா. ஆஷ் துரையை சுட்டுக் கொன்னாரு'' பசுபதி முகத்தை மும்முரமாக வைத்துக் கொண்டு பேசினான்.

''பசு, முங்கிக் குளி... தண்ணி குடி, சுதந்திரப் போராட்டமெல்லாம் பேசாதே. அதெல்லாம் பெரிய வங்க சமாச்சாரம்.''

''பகத்சிங் இன்னா பண்ணாரு...?'' பசுபதி கோப மாய் கேட்டான்.

''எனக்குத் தெரியாது. அப்ப நான் பொறக்கலை. ஆனா ஆஷ் துரையைக் கொன்னது பகத்சிங் இல்லை. அது தெரியும்.'' குமாரவேலின் இந்தக் கேள்விக்கு எல்லோரும் சிரித்தார்கள்.

''ஏங்க பகத்சிங் இன்னாங்க பன்னாரு?'' பசுபதி பகத்சிங்கைப் பார்த்துக் கேட்டான்.

''பார்லிமெண்ட் கட்டடத்துல குண்டு போட்டு... வாணாம் வுட்ருங்க, இதெல்லாம் தெரிஞ்சுட்டு என்ன பண்ணப் போறோம்?'' பகத்சிங் பேச மறுபடியும் சிரித்தார்கள்.

''நல்ல வேளை, காப்பாத்தினீங்க. நடு ஆத்துல உட்காந்து, பகத்சிங் பத்தி முழுக்கதையும் சொல்லப் போறீங்களோன்னு பயந்துட்டேன்'' கணபதி தலைக்கு மேல் கும்பிட்டபடி பேசினான்.

''ஒரு தடவை சொல்லி உதை வாங்கினேன். அதுல ருந்து உதைச்சாலும் சொல்றதில்லைன்னு தீர்மானம் பண்ணிட்டேன்.'' நண்பர்கள் மீண்டும் நீர் தெறிக்க சிரித்தார்கள்.

''சிரிக்காதீங்கப்பா. ஏன் சிரிக்கிறீங்க. உங்களுக்கு பகத்சிங்குனு உங்கப்பா ஏன் பேர் வைச்சாரு. அவரு ஞாபகாத்தமா தானே? நிஜமாலும் பகத்சிங் பத்தி எல்லோரும் தெரிஞ்சுக்கணும்னுதானே'' பசுபதி கோபமாய் பேசினான்.

''நீங்க பசுபதின்னா இன்னான்றதைப் பத்திப் பேசுங்க. அவரைப் பத்தி கதை சொல்லுங்க. அப்புறம் நான் பகத்சிங் பத்தி சொல்றேன். ''பசுபதின்னு யாராவது பெரிய ஆளு இருந்தாங்களா?''

''குளித்தலைல ஒரு பிக்பாக்கட் இருந்தான்'' கணபதியின் கேலிக்கு மீண்டும் சிரிப்பலை எழுந்தது.

''தயவு செய்து ஆத்தங்கரைக்கு வந்து ஆம்பளைங்களபத்தி பேசாதீங்கப்பா. ரசமான மேட்டர் ஏதாவது பேசுங்க. அலுக்கி, குலுக்கி'' நாராயணசாமி பேசினான்.

நீர் கொடுத்த நடுக்கம் இன்னும் அவன் உடம்பை விட்டுப் போகவில்லை. பலமுறை முங்கியும் போகவில்லை.

''உனக்கு சினிமாக்காரிங்களைப் பத்திப் பேசணும், இவ இப்படியாமே... அவ அப்படியாமேன்னு ஏகப்பட்ட பொய் சொல்லணும். தயவு செய்து அது மட்டும் வேணாம்.''

''வேற எதுக்குதாண்டா நீ பொறந்திருக்கே? பகத்சிங் பத்தி பேசமாட்ட, சினிமாக்காரிச்சி வேணாம். சயின்ஸ் பத்தி பேசலாம்றின்யா. எவ்வளவோ படிச்சாலும் அது ஒன்னுமே விளங்கமாட்டேன்னுது.''

''மெட்றாஸில பாத்தம்பா சயின்ஸில அட்வான்ஸ் டெக்னாலஜி டியுஷன் போட்டுப் படிக்கிறான். படிச்சி என்னா பிரயோஜனம்னு கேட்டேன். சும்மா விவரம் தெரிஞ்சுக்கப் படிக்கிறானாம். காலைல ஆறு மணிக்கு டியூஷன் சென்டருக்கு வந்துடறான். நமக்குத்தான் என்ன படிக்குறதுன்னே தெரியமாட்டேன்னுது.''

சட்டென்று அங்கு ஒரு அமைதி நிலவியது. தன் வயது ஒத்த இளைஞர்கள் எங்கோ, எவ்விதமாகவோ வேகமாய் முன்னேறிக் கொண்டிருக்க, எதுவும் தெரியாமல், செய்ய எந்த வாய்ப்புமில்லாமல், கூச்சல் மிகுந்த ஒரு பெரிய கடைத் தெருவில் முடிந்துவிடப் போகிறோம் என்ற பயம் ஏற்பட்டது. யோசித்துப் பார்த்தால் திருச்சிலயே இருக்கிற படித்த பையன் யாரும் இந்தக் குழுவோடு சேர வில்லை. ஒருநாளும் இப்படி ஏழு மணிக்கு கொள்ளிடப் துக்கு வந்ததில்லை. அப்படியே ஆற்றங்கரைக்கு படித்த பையன்கள் வந்தாலும் அரை மணிக்கு மேல் குளிப் பதில்லை. கரையோரமாய் நின்று சொம்பில் மொண்டு குளித்துவிட்டு ஹலோ என்று கையசைத்துவிட்டு போய் விடுகிறார்கள். இப்படி மூணு மணி நேரம் குளிக்கிற நண்பர்கள் வேறு ஜாதி என்பதாய் புறக்கணித்து விடு

கிறார்கள். உற்றுப் பார்த்தால் இங்கு சூழ்ந்திருக்கிற அத்தனை பேரும் திருச்சி பெரிய கடைத் தெருவையே பிழைப்புக்காக நம்பிக் கொண்டிருக்கிறவர்கள்.

பெரிய கடைத்தெரு முழுவதும் நகைக் கடைகளே அதிகம் இருக்கும். தங்க நகைகளும், வெள்ளிப் பாத்திரங் களும் வெகு வேகமாக வியாபாரம் ஆகும். திருச்சிராப் பள்ளியை ஊடறுத்து காவிரி நதிபோகிறது. கொள்ளிடம் பிரிந்து கால்வாய்களை அனுப்புகிறது. திருச்சியைச் சுற்றி முரட்டுக் கிராமங்கள் இருக்கின்றன அந்தக் கிராமங்களில் எல்லாம் மூன்று போக விவசாயம் நடைபெறுகிறது. கல் வீடுகளைக் கொண்ட அந்தக் கிராமங்களில் பண நடமாட்டம் நன்றாக இருக்கிறது. அந்தக் கிராமத்து விவசாயிகள் மிகப் பெரிய செலவாய் இரண்டு செய் வார்கள். ஒன்று நிலம் வாங்குவார்கள் அல்லது நகைகள் வாங்குவார்கள். நகைகள் விற்று நிலம் வாங்குவார்கள். நிலம் விற்று நகைகள் வாங்குவார்கள்.

இதைத் தவிர முக்கியமான வியாபாரம் அவர்கள் செய்வதில்லை. ரொம்ப சமீபமாகத்தான் டி. வி. யும், மொபட்டும் வாங்க ஆசை வந்திருக்கிறது. மற்றபடி மொசைக் தரையோ ஏர் கண்டிஷனோ, கிரைண்டரோ, குளிர் சாதனப் பெட்டியோ அவர்கள் அதிகம் வாங்குவது இல்லை.

தமிழ் கூறும் நல்லுலகில் திருமணம் என்கிற விஷயத் துக்கு மிக மரியாதை இருந்தது. இந்த மரபு வழி திருமணங்கள் நகைகளின் மதிப்பில் நடந்தேறின. இந்த நகைகளுக்கு திருச்சிராப்பள்ளி பெரிய நகைக் கடை நோக்கி சாரி சாரியாய் மக்கள் வந்தார்கள். நிறைய திருமணங்கள் நகைக் கடையில் நிச்சயம் செய்யப் பட்டன.

அசலுக்கு மிகப் பெரிய அந்தஸ்து கிடைக்கிறபோது, போலிக்கும் கொஞ்சம் பொழியப்படும். நல்ல ஜாதிக் கற்கள் பதித்த பதக்கங்களும், தோடுகளும், வளையல் களும், மோதிரங்களும், தமிழ்நாட்டுப் பெண்களின் மிகப் பெரிய விருப்பமாக இருந்தன.

கெட்டியான நகைகளை வாங்குகிற போது கண்ணைப் பிடுங்குகின்ற பளபளப்பான பொடி வைத்த கல் வைத்த நகைகளையும் பெண்கள் வாங்குவது உண்டு. கெட்டி நகைகளைவிட, இம்மாதிரி நகைகளுக்கு செய்கூலி அதிகம். செய்கூலி என்பது வியாபாரியின் விருப்பம். இதைத்தவிர சேதாரம் என்றும் காசு சம்பாதிக்க முடியும். ஒரு சவரன் வெறும் வளையலில் ஐந்து சதவிகிதம் லாபம் கிடைக்கும்.

அழுத்தி செய்கிற போது இதே சேதாரம் விரயம் இன்னும் பெரிதாய் பேசப்படும், நல்ல வைரத் தோடு முப்பத்தி ஆறாயிரம் ரூபாய். பட்டை நல்முத்து வடம் இருபத்தி ஓராயிரம் ரூபாய். முக்கால் சவரன் கோமேதக மோதிரம் ஐந்தாயிரம் ரூபாய். இந்தப் பொருட்களை எல்லாம் வசதியானவர்களே வாங்க முடியும். இதை வாங்க வேண்டும் என்கிற ஆசை எல்லோருக்கும் இருக்கத் தான் செய்யும்.

எனவே இமிடேஷன்கள் உருவாயின. செயற்கைக் கற்கள் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டன. சின்தடிக் கமலங்கள் என்று வர்ணிக்கப்பட்டன.

பட்டு நூல்காரர்கள் என்கிற சௌராஷ்டிர வகுப் பினரால் உருவாக்கப்பட்டு செட்டியார்கள்என்ற வணிகப் பிரிவினர்களால் வெளியே விற்கப்பட்டு இந்த செயற்கை வைரத்தொழில் எண்பதுகளில் மிக வேகமாய் வளர்ந்தது. வட இந்திய பணியாக்கள் காலூன்றி காசிரைக்க ஏழை

இஸ்லாமியர்கள் பீடியை விட இது வருமானம் அதிக மென்று குடும்பத்தோடு பட்டை தீட்டும் வேலைக்கு மாற இந்தத் தொழில் சூடு பிடித்தது. எல்லா ஜாதியினரும் இறங்கிச் செய்யும் வேலையாயிற்று.

இருபதாயிரம் ரூபாயில் வீட்டுக்குள்ளேயே பட்டறைப் போட்டுக் கொள்ள முடியும். பட்டை தீட்டும் வேலையும் பாலீஷ் செய்யும் வேலையும் பெண்ணே செய்ய முடியும்.

அசல் கல் நகைகளின் விலைகள் வருடா வருடம் அதிகமாயின. ஜனங்களின் ஆர்வம் அதிகரிக்க, அதிகரிக்க விலையும் வியக்கும் வண்ணம் உயர்ந்தது. அசல் நகைகளின் விலை உயர போலி கல் நகைளுக்கு மதிப்பு வந்தது. அத்தனை விலை கொடுத்து அசல் நகை வாங்க முடியுமா? அதே போல் அச்சாய் அசலைவிட பளபளப்பால் ஸின்தடிக் கமலங்கள் கடைக்கு வரத் துவங்கின.

வாங்குபவரை வைத்தே விற்பனை இருக்கும். தேவையை வைத்தே வியாபாரம் பெருகும்.

''ஏங்க இது கோமேதகமா?''

''இல்லீங்க கொஞ்சம் மட்டம்.''

''ஏங்க இது அசல் வைரமா?''

''இல்லீங்க அமெரிக்கன் டைமண்ட், செயற்கை வைரம்.''

''ஏங்க இது நல்ல பச்சையா.''

''நல்ல பச்சை இந்த பஜார்லய கிடையாதுங்க. இது கண்ணாடி கல்லு.''

''கண்ணாடி கல்லா இப்படி ஜொலிக்குது?''

''பட்டை தீட்டியிருக்காங்க, பக்குவமா பட்டை தீட்டியிருக்காங்க. ஒளி ஊடுருவுகிற கல்லை சரியான

கோணத்தில் பட்டை தீட்டினால் ஜொலிப்பு உடனே உண்டாகும். இந்த பட்டை தீட்டுதலால் ஒரு ஒளிச்சிதறல் ஏற்பட்டு இந்த கற்கள் இப்படி பிரகாசமாய் இருக்கின்றன. சூரிய ஒளியோ, விளக்கொளியோ உள்வாங்கி சிதறடிக்கின்றன. இதுதான் விஷயம், விற்றவர் ஆங்கிலத்தில் விவரிக்க, வாங்குபவர்கள் தலையாட்டி கேட்டுக் கொண்டார்கள்.

கேட்டது ஒரு குறுக்கு புத்திக்காரன். சந்தேகம் எழுப்பினான்.

வைரம் போலவே அமெரிக்க டைமண்ட் இருக்கு. மூக்குத்தி செய்யுற ஒரு சின்ன கல்ல ரெண்டாயிரம் ரூபாய்ன்னு சொன்னீங்க. அதே மாதிரி உள்ள அமெரிக்க டைமண்ட் ஒரு கல்லை இருபது ரூபாய்ன்றீங்க. இருபது ரூபாய் கல்லை ரெண்டாயிரம் ரூபாய்க்கு நல்ல கல்லுன்னு வித்தா என்ன. ஆயிரத்தி தொள்ளாயிரத்து எண்பது ரூபாய் கிடைக்குமே.''

''செருப்படியும் கிடைக்கும். நகை வியாபாரம் நம்பிக்கை பேர்ல நடக்கிற விஷயம். நகையைக் கூடையில போட்டுக்குனு தெருத் தெருவா போனோம்னா நம்மளை கண்டுபிடிக்க முடியாது. ஆனா, இங்க நமக்குன்னு அட்ரஸ் இருக்கு. ஒரு போர்டு இருக்கு. நாணயம் ஆனவங்கனு காப்பாத்தி வந்த பேர் இருக்கு. இந்த ஒரு கல்லை பொய் சொல்லி ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது ரூபாய் கூட வைச்சு வித்துட்டா என்ன ஆவும்... ஏதோ ஒரு நாள் ஏதோ ஒரு வகையில இது போலின்னு தெரிஞ்சு கடை வாசலுக்கு வரும். வாங்கினவன் வாசல்ல நின்னு தேவடியா மவனேன்னு ஆரம்பிப்பான். நாலு தலைமுறை பேர் கெட்டுப் போயிடும். ஸின்தடிக் ஜெம்மை இது சாதாரண கல்லுன்னு ஒரு தடவைக்குப் பல தடவை சொல்லிதான் விப்போம். செய்கூலி சேதாரத்தில கொஞ்சம் கூட குறைச்சு ஏமாத்தலாமே தவிர

அமெரிக்கன் டைமண்டுன்னு சொல்லியோ கண்ணாடி கல்லை நல்ல பச்சைன்னோ விக்க முடியாது. அப்படி வித்தா வாங்கறவன் அடிக்கிறானோ இல்லியோ பஜார்ல உள்ள மத்த நகைக் கடைக்காரங்க அடிப்பாங்க. நல்ல தொழிலாளியை வெச்சு நல்ல விதமா டிசைன் பண்ணி கண்ணைப் புடுங்கிறா மாதிரி பதக்கம், ஜிமிக்கி, வளையல், தோடுன்னு செய்தம்னா அந்த செய் நேர்த்திக்காகவே ஜனம் வாங்கிட்டு போவும். அதுல நூறு ரூபாய்க்கு பத்து ரூபாய் கிடைக்கும்.''

''நகைங்க ஆம்பிளைங்க போடற விஷயமில்லை. பொம்பளைங்க விஷயம். நகை பொம்பளைங்க பலஹீனம். பொம்பளைங்களோட நிஜமாலும் பலஹீனம் என்னா. தான் போட்டிருக்கிற நகையைப் பார்த்து, இன்னொரு பொம்பளை அடடா இந்த நகை நல்லாருக்கேன்னு சொல்லணும். அப்படி சொல்லிட்டா ரொம்ப சந்தோஷம். இது இத்தினி சவரன். இங்க வாங்கினது. இன்ன விலை எல்லாம் சொல்லிடுவாங்க.''

''இது விஷயமா ஒரு சம்பவம் சொல்றேன் கேளுங்க. பச்சை, வெள்ளை, சிகப்புன்னு மூணு ரகக் கல்லு வைச்சு நெக்லஸ், தோடு, ரெண்டு ஜதை வலையல்னு ஒரு அம்மா செய்துட்டு போனாங்க. கொஞ்சம் சளசளப்பான அம்மா நிறைய பேசும். நாலைஞ்சு இடத்தில ஒண்டிக்கட்டையா பூந்து புறப்படும். நகையில வைச்சது அத்தனையும் சிந்தடிக் கல்லு. இந்த அம்மா அதை சொல்லாத இது நிஜம் வைரம், உண்மையான ரூபி, சுத்தமான பச்சைன்னு வெளியே ரீல் அடிச்சிருக்கு. உண்மை விலை சொல்லாத ஒவ்வொருத்தர் கிட்டயும் வாய்க்கு வந்த விலை சொல்லியிருக்கு. நம்ம கடை பேர மட்டும் கரெக்டா சொல்லிடுச்சு. அந்த அம்மா பேச்சுல மயங்கி நமக்கு நாலஞ்சு கஸ்டமர் வந்துட்டாங்க.

அதே விலையில நல்ல பச்சை வைச்ச வளையல் வேணும்னு கேட்கிறாங்க. ரூபியிலே பதக்கம் பண்ண ணும்னும், வைரத்தோடும் கேட்கிறாங்க. நான் விலை சொன்னாக்க, அந்த பொம்பளை இத்தினி விலை சொல்லலியேன்னு கேட்கிறாங்க. அந்த பொம்பளைக்கு செஞ்சதெல்லாம் போலின்றதா, இல்ல இதான் விலைன்னு கறாரா பேசறதான்னு ஒண்ணும் புரியலை.

அந்த அம்மா பழைய நகைல இருந்து கல்லு பிரிச்சுக் கொடுத்தது... உங்களால அப்படி செய்ய முடியாது. ரூபி மாதிரியே இருக்கிற தோடு பண்ணித் தர்றேன். ஆனா எல்லாம் அஞ்சு ரூபாய், பத்து ரூபாய் கல்லு. நீங்களா சொன்னாலொழிய யாருக்கும் கண்டு பிடிக்க முடியாது. அடிக்கடி போடாத அப்படிப் போட் டாலும் எதிலயும் உரசாத நீங்க ஜாக்கிரதையா வைச் சுக்கணும்னு விவரமா சொன்னோம். அவங்க சொல்லி இவங்கன்னு, இவங்க சொல்லி அவங்கன்னு ஏகமான ஆர்டர். நாம பொய் சொல்லாத நம்ம கஸ்டமர் பொய் சொல்ல வுட்டுறது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு பொம்பளை காலைல பொய் சொன்னா, சாயந்திரம் தெரிஞ்சுடும். நெருங்கிய தோழிகிட்ட உனக்கு மட்டும் சொல்றேன்னு உண்மை சொல்லிடு வாங்க. அந்த நெருங்கிய தோழி எல்லார்கிட்டயும் சொல்லிடுவா. இப்பல்லாம் நகை தங்கம், போலின்னு தெரிஞ்சே வாங்கறாங்க மூணு மணி நேரத்தில் கழட்டி வைச்சுடறாங்க, நகை அடிபடாத, கருக்கழியாத அஞ்சு ஆறு வருஷம் இருக்கு. அப்புறம் அதைப் போட்டுட்டு வேற பேட்டன் வாங்கிக்கிறாங்க.

இவங்களாலதான் பெரிய கடைத் தெரு பொழைப்பு நல்லா ஓடுது. பட்டணத்துல படிச்ச பொம்பளை நகையை எப்படி பாதுகாக்கிறாளோ, அதே மாதிரி நாட்டுப்புறத்து பொம்பளையும் பராமரிக்க கத்துகிட்டா.

அழகா மடிச்சு நைலான் புடவை கட்டிக்க எல்லாரும் கத்துக்கலயா. மண்ணு தட்டு தூக்கற பொம்பளை கூட உடுத்திறதுல நறுவிசா இல்லியா. எல்லாருக்கும்தான் நல்லாருக்கணும்னு தோணுதுங்க. அதன் விளைவுதான் நகை. நகைக்கு அடுத்தபடி புடவை இருபதாயிரம் கொடுத்து நல்முத்து வாங்கிறதை விட, ரெண்டாயிரத்த கொடுத்து கல்ச்சர் முத்து வாங்கிறாங்க. கண்ணாடி பச்சை பொடிக்கல்லு பத்து ரூபாய்,பெருங்கல்லு இருபது ரூபாய். கண்ணாடி பச்சையும், கருங்கல் பச்சையும் பக்கத்து பக்கத்துல வைச்சா, எது நல்ல பச்சைன்னு கண்டு பிடிக்க உங்களால ஆகாது. எது எப்படியோ, ஒரு பதினைஞ்சு வருஷமா ஸின்தடிக் கல்லு வியாபாரம் திருச்சியில ஓஹோன்னு ஓடுது. எனக்கு தெரிஞ்சு ஒரு பத்தாயிரம் குடும்பம் இந்தத் தொழில்ல இருக்கு.

பள்ளி முடித்த மத்தியத்தர வர்க்கத்து இளைஞர்களுக்கு உடனே வேலை தேவை ஆயிரம் ரூபாய் ஊதியம் தரக்கூடிய ஒரு இடம் தேவை. பிளஸ் டூ முடித்தாலும் ஆயிரம் ரூபாய்தான் சம்பளம். டிகிரி முடித்தாலும் அதே ஆயிரம்தான் சம்பளம் இன்ஜினியரிங்கோ, மருத்துவமோ படித்தால்தான் வாழ்க்கை நிலை உயரும். அஞ்சு லட்சம், ஆறு லட்சம் கொடுத்தாலொழிய இன்ஜினியரிங் சீட் கிடைக்காது. அந்தக் காசை பெரிய கடைத்தெருவில் போட்டால், சந்து நகைக் கடையாகத் திறந்தால் பேச்சு சாமர்த்தியத்தில் கஸ்டமர்களை பிடித்துக் கொண்டால் நல்ல உயரம் வந்து விடலாம் ஒரு டாக்டரை விட அதிகம் சம்பாதிக்கலாம். கொஞ்சம் அதிர்ஷ்டமிருந்தால் கார் வாங்கலாம். கொள்ளிடம் தாண்டி சமயபுரம் போகும் வழியில் சொந்தமாய் நிலம் வாங்கி வீடு கட்டலாம். பெரிய படிப்பு படிப்பதை விட படிக்காமல் தொழிலில் இறங்கலாம். ஆனாலும் யாரோ பெரிய படிப்பு படிக்கிறார்கள் என்று கேள்விப்படும் போது, ரிம்லஸ் மூக்குக்கண்ணாடி அணிந்து படித்த களையாய்,

பெரிய தடிமனான புத்தகத்தோடு ஒரு பையனைப் பார்க்கிற போது, உள்ளே ஒரு வலி தோன்றத்தான் செய்யும்.

உட்கார்ந்தால் மார்பளவு வரும் நீரோட்டத்தில் கைகள் அளைந்தபடியே பேசிக் கொண்டிருந்த நண்பர்கள் படிப்புப்பற்றி மயக்கத்தில் மௌனமானார்கள்.

''இந்த மாதிரி இடத்துல ரெண்டு விஷயம் பேசாதீங்கப்பா.'' கணபதி கூவினான். ''பாலிடிக்ஸ் பத்தியும் பேசாதீங்க, படிப்பைப் பத்தியும் பேசாதீங்க. பாலிடிக்ஸ் பத்திப் பேசினா சண்டை வருது. படிப்புப் பத்தி பேசினா மௌனம் ஆயிடறோம்.''

''சினிமா பத்தியும்தான் பேச வேணான்றிங்க.'' நாராயணசாமி அலுத்துக்கொண்டான். வாழ்க்கையைப் பத்திப் பேசலாம், காசு இருக்கு இல்லை. சந்தோஷமா வாழறது எப்படின்னு பேசுவோம். பேசித் தெரிஞ்சுக்கிற விஷயம்தான் இது.'' அந்த பகத்சிங் மிக நிதானமான குரலில் பேசினான். அவனை மற்ற நண்பர்கள் எல்லோரும் வியப்பாகப் பாரத்தார்கள்.

''உங்க பேரு என்னா ஏதோ விநோதமா இருந்தது... டக்குனு மறந்து போச்சு,'' பசுபதி ஆவலுடன் கேட்க, அந்த இளைஞன் மறுபடியும் பெயர் சொன்னான்.

''அந்த மாதிரி எதாவது நீங்கதான் பேசுங்களேன். அதுக்கு முன்னாடி ஒருத்தர் பற்றி ஒருத்தர் நல்லா தெரிஞ்சுக்கலாம். யார் யார் என்ன தொழில் பண்றாங்கன்னு பேசிடலாம்.''

''அது ரொம்ப முக்கியமா?'' பசுபதி புரியாமல் கேட்டான்.

''நீ ஏண்டா வெக்கப்படுற? ஒரு தொழிலும் பண்ணலைன்னா ஒரு தொழிலும் பண்ணலைன்னு சொல்லேன்;

அது ஒன்னும் தப்பில்லயே?'' பசுபதியை நோக்கிய கணபதியின் குரலில் கேலியிருந்தது.

''எதுனா தொழில் பண்ணணும். நல்ல நாள் பார்த்துக்குனு இருக்காங்க வீட்டில.''

''நீ தொழில் பண்றதுக்கு வீட்டில நல்ல நாள் பாக்கிறாங்களா? அதை நீதான் பார்க்கணும்.''

''ஒரு ரெண்டரை லட்ச ரூபாய் துட்டு கேட்டுக்கிறாம்பா எங்க சித்தப்பாவை. அதுதான் நல்ல நாள் பார்க்கிறாங்க. ரெண்டு மாசம் பொறுத்துத்தான் எங்க சித்தப்பாவுக்கு நல்ல காலமாம். அது வரைக்கும் பெரிசா எதுவும் செய்ய மாட்டாராம். அவருக்கு டைம் சரியான உடனே எனக்கு துட்டு கிடைச்சுடும்.''

''அதுவரைக்கும்?'' பகத்சிங் கேள்வி கேட்டான்.

''சித்தப்பா பையனை கொள்ளிடத்துக்கு கூட்டியாந்து குளிப்பட்ட வேண்டியதுதான்.'' நாராயணசாமி பெரிய சிரிப்போடு சொன்னான்.

''இவனைக் குளிப்பாட்டறதுனாலதான், எனக்கு பேண்ட் சட்டையாவது கிடைக்குது. இல்லைன்னா வெறும் கரைவேட்டியோட அலைய வேண்டியதுதான்.''

''அப்போ எம்.எல்.ஏ வா இருக்கிற உங்க சித்தப்பார காக்கா புடிக்க அவர் பையனை கொள்ளிடத்துக்கு கூட்டிட்டு வந்து குளிப்பாட்டறதுதான் வேலை.'' பகத்சிங் நீட்டி முழக்கி கேட்டான். பசுபதி ஆம் என்று தலையசைத்தான். பகத்சிங் தவிர எல்லார் முகத்திலும் சிரிப்பிருந்தது.

''நானா இருந்தா இந்த வேலையை ரொம்ப நல்லா செய்வேன். இந்தப் பையன் தமிழ்வேலை ரொம்ப நல்லா கவனிச்சுக்குவேன். அவன் வர்ற கார்ல இத்தினி பேர் ஏத்தமாட்டேன். நாளைக்கு தமிழ்வேல் போய் பசுபதி

பத்து பேரைக் கார்ல ஏத்திட்டு போனான்னா, உங்க சித்தப்பார் கோபப்படலாம்...''

''இல்லை போகாதேன்னும் சொல்லிடலாம்'' கணபதி இடைமறித்தான்.

''வீட்டிலேயே இருந்து கட்சிப் பணி கவனித்துக் கொள் என்று சொல்லிடலாம்'' நாராயணசாமி கண் சிமிட்டினான்.

''அப்போ அப்படி சொன்னது வேதனையாயிடும். பையனை பாத்துக்கிறதுதான் வேலைன்னா' அப்படி சொன்னவரு ஒரு எம்.எல். ஏன்னா, அவரு எனக்கு சித்தப் பான்னு ரொம்ப, ரொம்ப கவுரமா நான் செய்வேன்.''

''ஏன்னா, ஒரு எம்.எல்.ஏ.வுக்கு பெண்டாட்டி, புள்ளைய கவனிக்கிறதுக்கு நேரமிருக்காது. குறிப்பா புள்ளையினுடைய படிப்புல அக்கறை செலுத்தமுடியாது. நான் அந்த வேலையை நல்லா செய்தா, நான் புள்ளை படிப்பை யாரோ பாத்துக்கிறாங்கன்னா உண்மை யிலேயே சந்தோஷமாயிடுவார். ஒரு எம்.எல்.ஏ. சந்தோஷமாயிட்டா நம்ம மாதிரி ஆளுங்களுக்கு என்னா வேணா கொடுக்கலாம்.''

பசுபதிக்கு வாயடைத்துப் போயிற்று.

''இவனுக்குப் பாடம் சொல்லித் தர சொல்லிறீங் களா. இவன் பாடம் எதுவும் எனக்குப் புரியலைங்க.''

''டியூஷன் ஏற்பாடு பண்ணணும். பையன் டியூஷன் போறானா பாக்கணும். டியூஷன் கொண்டு போய் வுடனும் உடற்பயிற்சி சொல்லித் தரணும்.''

''உடற்பயிற்சியா? பசுபதி எழுந்திருக்கிறதே எட்டு மணி.''

''அதான் தப்பு. காலைல சூர்ய உதயத்துக்கு முன்னாடி எழுந்திருக்காதவன் இருந்தும் ஒன்னுதான், இறந்தும் ஒன்னுதான்.''

''சார், நைட் டூட்டி பண்றவன்...'' நாராயணசாமி குறுக்கே பாய்ந்து கேட்டான்.

''நீங்க நைட் டூட்டி பண்றீங்களா?''

''இல்லை...''

''அப்ப ஏன் கேட்கறீங்க? எதுனா காரணம் காமிச்சு தப்பிச்சுக்கப் பாக்காதீங்க சார். அஞ்சு அஞ்சரைக்குப் படுக்கையை வுட்டு துள்ளி எழுந்துடுங்க.''

''எழுந்திருந்து...'' ஸ்ரீதரன் ஆவலாகக் கேட்டான்.

''பல்லு தேய்ச்சு வெறும் வயித்துல தண்ணி குடிச்சுட்டு, ஒரு ஆறு கிலோ மீட்டர் வேகமா நடங்க. வேர்த்து ஊத்தணும். அப்படி நடங்க.''

''காலைல ஏழரை மணிக்கே கம்பெனிக்குப் போறதா இருந்தால்.'' நாராயணசாமி மறுபடியும் இடக்கு செய்தான்.

''சாயந்திரம் நட. தனியா நட.''

''ஏன் தனியா நடக்கணும் பகத்சிங்?''

''தினம் கொஞ்ச நேரமாவது உன் கூட பேசு.''

''என் கூடப் பேசி என்ன ஆவணும்?'' பசுபதி அலுப்பான குரலில் கேட்டான்.

''என் கூடப் பேசினா என்னப்பத்தி கொஞ்சம் புரியுதில்லியா நான் யாரா. என்னன்னு தெரியுதில்லையா, அது மாதிரி நீங்க உங்க கூட பேசுங்க. நீங்க யார், எதுன்னு உங்களுக்குப் புரியும்.''

''ஒரே தத்துவமா பேசறீங்களே, பகத்சிங்.''

''உடனே புரியாதுன்னு வுட்டுராதீங்க. உங்களுக்கு புரிஞ்சிக்க விருப்பமில்லாததுதான் தத்துவம்னு சொல்லிடாதீங்க.''

''நீங்க என்னா சொல்ல வர்றீங்கன்னே புரியலையே'' கணபதி கேலியை விட்டு விட்டு கூர்மையானான்.

''பெரிய படிப்பு படிக்கலைன்னு நொந்துக்கிட்டிங்களே, அது அவசியமில்லை. ஒழுங்கா வேலை செய்றது, உண்மையா வேலை செய்றது இதை ரெண்டுத்தயும் இப்பவே பழகிட்டா போதும், ரொம்ப நல்ல உயரத்துக்கு வந்துடலாம்.''

''என்னா சொல்றீங்க பகத்சிங்? இந்தப் பையனை ஒழுங்கா குளிப்பாட்டி, நல்லா கவனிச்சா எங்க சித்தப்பன் அள்ளி, அள்ளி செஞ்சுடுவான்றீங்களா, நாம என்னதான் நேர்மையாயிருந்தாலும் அவங்க செய்றததான் செய்வாங்க. நாம எவ்வளவுதான் கெஞ்சினாலும் அவங்க தீர்மானம் பண்றதுதான் தருவாங்க'' பசுபதி கவலையோடு பேசினான்.

''எல்லா வேலையும் வாங்கிக்கிட்டு குறை சொல்லுவாங்கப்பா. ஒரு ரூபா கூலி கொடுக்க வேண்டிய இடத்தில பத்து பைசா கூலி கொடுத்தா போதும்னு நினைக்கிறாங்க.''

''இருக்கலாம். நீங்க சொல்றபடியும் ஆட்கள் இருக்கலாம். அப்பவும் உண்மையாய்தான் நடத்துகணும். நம்ம வேலை செய்ற மாதிரிதான் பிறத்தியார் வேலையை செய்யணும். அவங்க பத்து பைசா கூலியை பேசாத வாங்கிக்கணும். கூலி கொடுக்கிற போது அவங்களுக்கு உறுத்தணும். கொஞ்சம் கூட வேலையினுடைய தன்மையைக் குறைக்காம கூலி உயர்வு கேட்கணும். தரலேன்ற போது வேற இடத்துல வேலைக்குப்

போகணும். அந்த வேற இடத்துல வேலைக்குப் போற போது முன்னைய விட உண்மையாய் இருக்கணும்.''

''இதனால முத இடத்தில என்ன ஆயிடும்ன்றீங்க.''

''உங்களை இழந்துட்டம்ன்னு அவங்களுக்கு தெளிவா புரியும். ஜெயிக்கறதுக்கு நல்ல வழி உண்மையா வேலை செய்றதுன்னு ஏன் சொல்றேன் தெரியுமா, உண்மையா வேலை செய்றவங்க ரொம்ப கம்மி. நீ வேலையை விட்டுப் போனா அடுத்தபடியா ஒரு கோயான் வந்து உட்காருவான். அப்ப தெரியும், நீ எவ்வளவு அருமையான ஆளுன்னு தெரியும். எங்கியாவது உங்களைப் பாத்து உன்னை வுட்டுடம்பா. நீ மறுபடியும் வேலைக்கு வர்றியா அப்படின்னு முதலாளி சொல்லிட்டான்னு வைச்சுக்கங்க. அதைவிட பெரிய பொக்கிஷம் வேற எதுவும் இல்லை.''

''எனக்குப் புரியுதுங்க பகத்சிங்'' ஸ்ரீதரன் நிதானமாக சொன்னான்.

''உண்மையா உழைக்கிறது உடம்புல படிஞ்சிக்கணும் ஸ்ரீதரன். அப்படி படிஞ்சுட்டா வெற்றி பக்கத்துல இருக்குன்னு அர்த்தம்.''

''எதிலயுமே ஒரு இன்ட்ரஸ்ட் வரமாட்டேங்குது பகத்சிங்.''

''உங்கள யாருமே காப்பாத்த முடியாதுன்னு அர்த்தம்.''

''சினிமா பாக்கிறதில மட்டும் இன்ட்ரஸ்ட் வருதே எப்படி?''

''அது பொய், கனவு, அதுல வர்றா மாதிரி அழகா பொண்ணுங்க உங்க வீட்டிலயும் இருக்கலாம். சினிமால வர்ற சண்டை மாதிரி சண்டை உன்னால போட முடியாது. அது கனவு, அழகான கனவு, ஜாலியான கனவு. அதான் புடிச்சிருக்கு.''

''வேலைல சின்ன தப்பு பண்ணா கூட கண்ணா பின்னான்னு பேசறாங்களா, அது அப்செட் ஆயிடுது.'' நாராயணசாமி தன் அனுபவம் போல் பேசினான். ''சின்னத்தப்பு கூட வேலைலசெய்யக்கூடாது. அலட்டலா வார்த்தையை வுடறாங்க பாருங்க. அது அப்படியே வாங்கிக்கணும். ரொம்ப அலட்டி பேசறவன் குப்பையா இருப்பான். வார்த்தையை பெரிசுபடுத்தாதீங்க.''

''நான் இதை ஒத்துக்க மாட்டேன்'' பசுபதி வன்மையாய் மறுத்தான்.

''கொஞ்சம் இடத்தைக் குடுத்தா மடத்த புடுங்கிடுவானுவ. நம்ம பேசாத இருந்தம்னா தத்தின்னுடுவானுங்க. திட்டனுதுக்கு முறைச்சுக்காத இருந்தா புழைச்சோம்.''

''தப்பு. ஒதுக்கிடுவாங்க. ரெண்டு இடத்தில கத்தினா முரடன்னு லேபிள் கட்டி விட்டுடுவாங்க. ஒரு தடவ தப்பா லேபிள் வாங்கினா அழிக்கிறதுக்கு அஞ்சு வருஷமாயிடும். பொறுமையாய் இருக்க கத்துக்கணும்.''

''வயசானவங்க மாதிரி பேசறீங்க, எல்லா வயசானவங்களும் பொறுமை பத்திதான் பேசறாங்க.''

''இப்ப என்னா வயசு உங்களுக்கு?''

''இருபத்தி ஒன்னு.''

''என்ன செய்றீங்க?''

''கல்லு விக்கிற கடையில இருக்கேன்.''

''எத்தினு வருஷமாச்சு?''

''ரெண்டு வருஷம்.''

''பஜார்ல எத்தனை பேருக்குத் தெரியும்?''

''ஒரு அம்பது பேருக்குத் தெரியும்,''

''போறாது. வியாபாரிக்கு மூலதனம் ஆள் பழக்கம் தான். உனக்கு இந்தக் கடை ஆளு உங்ககிட்ட ரெண்டு கிலோ ஜெம்ஸ் கொடுத்தனுப்பலாம். நாலு கிலோ தளம் தோள்ல வைச்சு அனுப்பலாம். பத்து கிராம் கூட குறை யாத நீங்க கொண்டு போய் கொடுப்பீங்கன்ற நம்பிக்கை அவங்களுக்கு வரணும். அறுத்த கல்லை கொண்டுனு போய் பட்டை தீட்டறவங்ககிட்ட கொடுத்து, பட்டை தீட்டறவங்ககிட்டருந்து கல்ல பாலீஷ் போடறவங்க கிட்ட கொடுத்து பாலீஷ்க்கு போட்ட கல்லை வியா பாரிங்ககிட்ட கொடுக்கணும். வியாபாரிகிட்டருந்து கல்லை குரியர்லியோ ரயில்வே பார்சல்லியோ அனுப் பணும். எத்தினி பேர்கிட்ட நீ இதமா நடந்துக்கணும். எத்தினி பேரை நீ புரிஞ்சு நடந்துக்கணும்.'' எவ்வளவு ஜாக்கிரதையா நடந்துக்கணும்.'' மறுபடியும் அங்கு மௌனம் நிலவியது.

''நாமதாங்க ஒழுக்கம், நியாயம் பொறுமை அப் படின்னு பேசிட்டு இருக்கோம். உண்மையில இதுக்கெல் லாம் ஒரு வேலையுவும்இல்லை. ஏமாத்தறவங்க, ரவுடிங்க, மொள்ளமாறி பசங்க எல்லாம் மேல வந்தினுருக் கானுங்க.''

''ஏறின வேகத்திலயே இறங்குவான். அதோட' வேகமா இறங்குவான்.நான் சொல்றதை நம்ப முடியலயா நீங்க மொள்ளமாறியா, முடிச்சவுக்கியா, ரவுடியா மாறிடுங்க. அப்பத்தான் அதனோட வேதனை தெரியும். கரியற போது உண்டான வேதனை புரியும்.''

''தபதபன்னு வாழ்க்கைல முன்னேறனும்னா...?'' பசுபதி ஆரம்பித்தான்.

''தேவையில்லீங்க, தபதபன்னு வாழ்க்கையில முன் னேற வேண்டிய அவசியம் இல்லை. இந்த நண்பர் ஸ்ரீதருக்கு இருபத்தியொரு வயசு. இந்த வேலையிலதான்

ஈடுபட போறேன்னு இந்த வயசிலேயே தீர்மானம் பண்ணிக்கணும். இருபத்தி அஞ்சு வயது வரைக்கும் தொழிலை நல்லா கத்துக்கணும். இருபத்தஞ்சிலேருந்து முப்பதுக்குள்ள இவன்தான் இந்தத் தொழில்ல பெஸ்ட் ஆளுன்னு சொல்லும்படியா வளரணும். முப்பதிலேருந்து அம்பத்தைஞ்சி வயசு வரைக்கும் வருஷா வருஷம் உயர ணும், ஒரு வருஷம் கூட அசரக் கூடாது.''

''பேசறதுக்கு நல்லா இருக்குங்க. இப்படி ஒரு எண்ணத்துக்கு இடைஞ்சலே வராதா? இப்படி செய்தால் நிச்சயம் உசந்துர முடியுமா? உசராதவங்கள்லாம் செய்ய லன்னு அர்த்தமா?''

''ஆமாம். செய்யலேன்னுதான் அர்த்தம். இதை மறுத்து பேசனும்னா முதல்ல செய்றதுக்கு ட்ரை பண்ணுங்க. அஞ்சு மணிக்கு எழுந்திருக்க முடியுமான்னு முயற்சி பண்ணுங்க. ஆறு கிலோ மீட்டர் நடக்க ஆரம் பிங்க.''

''இது வெட்டி வேலை'' பசுபதி முணுமுணுத்தான்.

''நீங்க காலி. உங்க சித்தப்பா எம்.எல்.ஏ.வா இருந் தாலும், உங்கப்பா எம்.பி.யா இருந்தாலும் உங்க சொந்தக்காரங்க சீஃப்மினிஸ்டரா இருந்தாலும் நீங்க முன்னேற முடியாது. இப்படியே சித்தப்பார் பையனை ஜட்டியோட குளிப்பாட்டி வுட்டுட்டு இருக்கவேண்டியது தான். வாழ்கைகை முழுச்க எடுபுடியா இருக்க பழகிட்டா எந்த இடத்திலயும் கம்பீரம் வராது. அதிர்ஷ்டவசமா ஒரு எடுபுடிக்கு காசு வந்திடுச்சின்னு வச்சிக்கிங்க. அவங்க கம்பீரத்தை தாங்கிக்க முடியாது. கடிக்க ஆரம்பிச்சுடு வான். ஒரு ஆள் எடுபுடியா இருக்கறதை விட நாண் டுக்கினு சாகலாம்.''

''நீ நாண்டுக்கினு சாவுடா. வுட்டா பேசிக்கிட்டே போறியே... என் கார்ல வந்துட்டு என்னையே எடு

புடின்றியா, எங்க சித்தப்பன் எம்.எல்.ஏ.வா இருக்கிறது பொறாமை. ஏதோ தத்துவமா பேசறியேன்னு பார்த்தா என்னைய தூக்குப் போட்டு சாவுன்றியே நான் எடுபுடிதான்டா. எவனோ தெருவிலே போறவனுக்கு எடுபுடியில்ல. எங்கப்பாருடைய சொந்தத் தம்பிக்கு நான் எடுபிடி. ஒரு அப்பனுக்குப் புள்ளை எடுபுடியா இருக்கிறதுல என்னாட தப்பு. எனக்கு என்னா சம்பளம் தெரியுமா. கேட்டா நெஞ்சடைச்சு செத்திடுவீங்க. அந்த பேண்ட் பாக்கட்ல நாலாயிர ரூபாய் காசு வைச்சிருக்கிறேன். எடுபுடிக்கு நாலாயிரம் எவனாவது சம்பளம் தருவானா? உங்கள்ள எவனாவது சம்பாதிக்க முடியுமாடா. மாடு மேய்க்கறவன் தாண்டா காலைல அஞ்சு மணிக்கு எழுந்திருக்கணும்.'' பசுபதி உரக்கக் கத்தி அதன்பின் கெட்ட வார்த்தையில் சொன்னான்.

பகத்சிங் சடக்கென்று எழுந்திருந்தான். ''நான் கொஞ்ச முன்னாடி என்ன சொன்னேனோ அதை நீங்க நியாயப்படுத்திட்டீங்க. எடுபுடிக்கு காசு வந்துட்டா என்ன செய்வான்னு சொன்னேனோ... அதைத்தான் நீங்க செய்யறீங்க.''

''நீங்க சொன்னதில எனக்கு ஒன்னும் கோபம் இல்லை. நீங்க இப்படித்தான் பேசுவீங்கன்னு எனக்குத் தெரியும். உங்க பின்னணி சரியில்லை. ஆனாலும் மறுபடியும் சொல்றேன். வாழ்க்கைல ஒரே ஒரு தடவை அஞ்சு மணிக்கு எழுந்து ஆறு கிலோ மீட்டர் நடந்து பாருங்க. அந்தப் பழக்கம் படிஞ்சுடுச்சுன்னா உங்களால எடுபுடியா இருக்க முடியாது. நான் வரேன்யா'' பகத்சிங் சரேலென்று நீர் விட்டு எழுந்து போனான்.

ஸ்ரீதரனுக்கு அவனைப் பின் தொடர வேண்டும் என்ற ஆசை எழுந்தது. பசுபதி காரில் வந்துவிட்டு பாதியில் போகலாமா என்ற கேள்வி இருந்தது.

‘‘போனா போறான் மயிரு’’பசுபதி ஆங்காரத்தோடு பேசினான்.

‘‘அவரு உங்களுக்கு நல்லதுதாங்க சொன்னாரு’’ கணபதி சமாதானமாகப் பேச, ‘‘அப்ப நீயும் போ’’ பசுபதி நீரை அவன் மீது வீசி அடித்தான். அந்த நீரில் ஒரு பகுதி ஸ்ரீதரன் மீது சுள்ளென்று விழுந்தது. ஸ்ரீதரன் கோபமானான். விலுக்கென்று எழுந்து பகத்சிங்கைப் பின் தொடர்ந்தான்.

‘‘ஸாரி சார்’’ முதுகின் பின்னே பசுபதியின் குரல் கேட்டது. ஸ்ரீதரன் திரும்பினான். ‘‘அஞ்சு மணிக்கு எழுந்து ஆறு கிலோ மீட்டர் நடங்க. ஒரு நாளாவது எழுந்திருங்க. அப்பத்தான் மாடு ஓட்டறவன் மட்டும் எழுந்திருக்கலை, ஊர்ல நிறைய பேர் எழுந்திருக்காங் கன்னு உங்களுக்குத் தெரியும். அஞ்சு மணிக்கு எழுந்துக் கலைன்னா அந்தப் பழக்கம் உங்களுக்கு வரலைன்னா, நீங்க நாண்டுகிட்டுதான் சாவீங்க. எனக்கு என்னமோ அப்படி தோணுது.’’

‘‘ஏய்...’’ என்று பசுபதி ஸ்ரீதரன் பேச்சுக்கு எழுந்த போது, அவனை இரண்டு பேர் அழுந்த உட்கார வைத் தார்கள். ஸ்ரீதரன் துணிகளை எடுத்துக் கொண்டு பகத்சிங்கைப் பின் தொடர்ந்தான். பகத்சிங்கை கை தட்டி கூப்பிட்டு அவனோடு பேச ஆசையாக இருந்தது. ஆனாலும் கூப்பிடவும் தயக்கமாக இருந்தது. என் பின்னால் ஏன் வருகிறாய் என்று சொல்லி விட்டால்... ஸ்ரீதரன் தயங்கினான்.

முன்னே போன பகத்சிங் சட்டென்று திரும்பினான். ‘‘என்னங்க ஸ்ரீதரன், நீங்களும் வந்துட்டீங்க.’’

‘‘அவர் பேசினது புடிக்கலைங்க.’’

‘‘அவருக்குப் பேசத் தெரியலை.’’

''மேனர்ஸ் இல்லீங்க.''

''கையை வீசி சத்தமா பேசிட்டா தான் சொன்னது சரின்னு நினைக்கிறாரு.''

''அவர வைச்சு எல்லார்க்கும் நல்லதா ஒரு விஷயம் சொன்னீங்க. அவர் கத்தி எங்களுக்கு நஷ்டம் உண்டாக்கிட்டாரு. நாங்க அந்த விஷயத்தை முழுக்க கேட்க முடியாத போயிடுச்சு.''

''எடுபுடி விஷயத்தைச் சொல்றீங்களா?''

''இல்லீங்க, அஞ்சு மணிக்கு எழுந்து ஆறு கிலோ மீட்டர் நடக்கிறத ரொம்ப முக்கியம்ன்னு நானும் நினைக்கிறேன்.''

''நினைச்சா போறாது. உடனே செய்துடணும். நாளைக்கே நடக்க ஆரம்பிச்சுடுங்க.''

''நீங்க தினம் நடக்கிறீங்களா பகத்சிங்?''

''ஆமாங்க, ஆனா இன்னும் கொஞ்சம் சீக்கிரமா எழுந்து நடக்க ஆரம்பிப்பேன்.''

''சீக்கிரமான்னா எத்தனை மணிக்கு?''

''மூன்றரை மணிக்கு.''

''என்னது ''ஸ்ரீதரன் அதிர்ந்தான்.

''முட்டாள்தனம்னு தோணுதா ஸ்ரீதரன். அஞ்சு மணிக்கு ஆரம்பிச்சு மொள்ள மொள்ள அட்வான்ஸ் பண்ணி ஒரு மூன்றரை மணியில வந்து நிக்குது.''

''ஏங்க அவ்வளவு சீக்கிரம்?''

''அதான் பிரம்ம முகூர்த்தம், மனசும் உடம்பும் ரொம்ப அமைதியா இருக்கும் நேரமது. மழையோ, வெய்யிலோ, பனியோ அந்த நேரத்துல முழிப்பு வந்து

நடக்க ஆரம்பிச்சுட்டீங்கன்னா மனசு ரொம்ப அமைதியா இருக்கும். ஒரு நல்ல உற்சாகம் உடம்பில ஓடும்.''

''மூன்றரை மணிக்கு எழுந்திருக்கணும்னா ராத்திரி எத்தனை மணிக்குப் படுக்கணும்?''

''ஏழரை மணிக்குப் படுத்துடுங்க.''

''ஏழரை மணிக்குப் படுக்கிறதா, நிறைய வேலை இருக்குமே?''

''ஏன் உங்களது மளிகைக் கடையா... பத்து மணிக்கு தான் வேலை முடியுமா?''

''இல்லீங்க. எங்களது சொந்தத் தொழில்.''

''என்ன தொழில்?''

''நான் ஜெம் கட்டர்.''

''பட்டறைக்குப் போகணுமா?''

''இல்லை. வீட்டிலேயே மெஷின் வைச்சிட்டிருக்கேன்.''

''எங்க இருக்கு வீடு?''

ஸ்ரீதரன் தெருப் பெயரைச் சொன்னான்.

''அடட, நம்ம ரூம்லர்ந்து கிட்டக்கதான்'' பகத்சிங் தன் தெருப் பெயரைச் சொன்னான்.

''எனக்கு கல்லு பட்டை தீட்டறதும், பாலீஷ் பண்றதும் வேலைங்க. ஆறு மெஷின் வைச்சுருக்கேன். மெஷின் வாடகைக்குக் கொடுக்கிறேன். லேபர்ஸ் வைச்சு செய்றேன். நானும் கல்லு தேய்க்க உட்கார்ந்திடறேன்.''

''வண்டிகை யாருகிட்டருந்து வாங்கறீங்க?''

''பாலீஷ் கல்ல வாங்கனா அந்த ஆளே கட் பண்ண கல்லையும் தறார்.''

''யாருகிட்டயிருந்து கல்லு அவங்க வாங்கறாங்க?''

''தெரியலையே சொல்ல மாட்டேன்றாங்க.'' தொடர்ந்து பேசி ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்ளலாமா என்று அவர்கள் தயங்கி நின்றார்கள். மௌனமாய் ரங்கநாதர் தெற்கு வாசல் நோக்கி நடந்தார்கள்.

பெரிய பெரிய கப்பல்களுல் முன்பக்க புரொபல்லர் சுழலும். அந்த சுழற்சியில்தான் கப்பல் நகரும். கப்பல் இன்ஜினோடு அந்த புரொபல்லர் நீண்ட ஷாப்டால் இணைக்கப்பட்டிருக்கும். அந்த ஷாப்டில் நடுவே நான்கு அடி விட்டமுள்ள ஸின்தடிக் வாஷர் போடப்பட்டிருக்கும். ஒரு அடி அகலத்துக்கு உள் வட்டம் இரண்டு அடியும், வெளி வட்டம் நான்கு அடியுமாய் ஒளி ஊடுருவும். மிக கெட்டியான இரும்பு போன்ற உறுதியான அதே நேரம் வெப்பம் கடத்தாத அந்த வாஷர்கள் விரிசல் கண்டால் குப்பை என்று தூக்கி எறிந்து விடுவார்கள். அதை வணிகர்கள் வாங்கி வருவார்கள். திருச்சிராப்பள்ளிக்கு எடுத்து வந்து விற்பார்கள். சிகப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்று பல்வேறு கலரில் இந்த ஸின்தடிக் பொருள் பெரிய பஜாருக்கு வரும். இதற்கு தளம் என்று பெயர். கருங்கல் ஜல்லி போல் உடைந்து கிடக்கும் இந்தத் தளத்தை ஒரு கிலோ, இரண்டு கிலோ என்று ஸ்ரீதரன் வாங்கி வருவான். சின்னச் சின்னத் துண்டுகளாய் மெஷினில் கொடுத்து வெட்டுவான்.

அவன் வீட்டில் இங்கிலீஷ் மோட்டாரோடு பெல்டால் இணைக்கப்பட்ட ஷாப்ட் உள்ளது. மோட்டார் சுழல ஷாப்டும் சுழலும். ஷாப்டின் இருபுறமும் வட்டமான தகரக் கத்தி இருக்கும். அந்தக் கத்தி மட்டும்

ஸின்தடித் தளத்தை வெட்டாது. வைரப் பொடியால் அறுக்க வேண்டும். வெறும் வைரப் பொடியை எப்படி கத்தியில் சேர்ப்பது. மாதர் சங்கு என்ற மருந்தும், நாமக் கட்டியையும் நைசாய் அரைத்துக் கொள்ள வேண்டும். வைரத் துணுக்குக்கு வைர வடி என்று பெயர். இந்த வைர வடியை ஆறங்குல உயரமுள்ள குழாய் உருளையில் போட்டு வெற்றிலை பாக்கு இடிப்பது போல் இடைவிடாது இடிக்க வேண்டும். வைர வடி நைஸ் பவுடரான பிறகு மற்ற மருந்தோடு கலக்க வேண்டும்.

வட்டக்கத்தி சுழலும் போது மருந்தை வட்டக் கத்தியில் ஒட்டப் பிடிக்க வேண்டும். அப்படி ஒட்டுதற்கு கொஞ்சம் நீரில் நனைக்க வேண்டும். கத்தியில் ஒட்டிக் கொண்ட வைரத்தூள். ஸின்தடிக் தளத்தை கையேந்தி கொடுக்க வேண்டும். செவ்வகமாய், திலகமாய், வட்டமாய் நீள் வளையமாய் மேற்பரப்பு வைத்து தங்கத்தில் பதிவதற்காக அடியில் கூம்பு வடிவம் கொடுத்து ஸின்தடிக் தளத்தை அறுக்க வேண்டும்.

பிரபாத், ரைஸ், பட்டு, பாதாமி, மொக்கை, சவுக்கை, பட்டன்ஸி என்று பல வடிவங்களுக்கு பெயர் இருக்கிறது. ஆயிரம் பாதாமி, இரண்டாயிரம் சவுக்கை என்று ஆடர் கிடைக்கும். அப்படி வெட்டிக் கொண்டு போய் கொடுத்தால் அதை கடைக்காரர்கள் வாங்கி பட்டை தீட்டுபவர்களிடம் கொடுப்பார்கள். பட்டை தீட்டப்படுவதற்கு முன் உள்ள கல்லுக்கு வண்டிகை என்று பெயர். பிறகு பட்டை தீட்டி, தீட்டிய கல்லுக்கு பாலீஷ் கொடுத்தால் அது ஜெம்.

இங்கே வெட்டுவதுதான் மிகக் கடினமான வேலை. கத்திக்கு மருந்து புடிக்கிற போது விரல் துண்டாகிவிடும். கண்ணில் மருந்து அடிக்கும். பிசிறில்லாமல் சேதாரம் அதிகமில்லாமல் இடுப்பு நிமிர உட்கார்ந்து தளம்

அறுப்பது அற்புதமான வேலை. பத்து மணி நேரம் அசையாது உட்கார்ந்தால் நல்ல தொழிலாளி நூற்றி அம்பது ரூபாய் சம்பாதித்து விடமுடியும். இது அரசாங்க உத்தியோகம் அல்ல, சுயவேலை. இதில் விடுமுறை இல்லை. வேலை நேரம் இல்லை.

அய்யா...இன்று தலை நோவும், சளியும் இருக்கின்ற படியால் தயவு கூர்ந்து இரண்டு நாட்கள் மருத்துவ விடுப்பு தருமாறு பேட்டுக் கொள்கிறேன் என்கிற பொய் இல்லை. குறுக்கி நிமிர்த்தி உழைத்தால் காசு.

ஸ்ரீதரன் வெட்டிக் கொண்டு வருகிற கல்லைத்தான் பகத்சிங் ஆள் வைத்தும், தானாகவும் பட்டை தீட்டி பாலீஷ் போடுகிறான்.

ஒரு கிலோ தளம் கொடுத்து முக்கால் கிலோ வண்டிகை வாங்கி நூத்தி அம்பது ரூபாய் கூலியும் கொடுப்பார்கள். அதைப் பாலீஷ் ஆளிடம் கொடுத்து அங்கேயும் கிலோவுக்கு இத்தனை ரூபாய் என்று லேபர் சார்ஜ் தருவார்கள். அப்படியே பேக் செய்து பம்பாய்க்கோ, சூரத்துக்கோ அனுப்பி விடுவார்கள். மூன்று ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கல் அங்கு முப்பது ரூபாய்க்கு விலை போகும். நகைகளில் மட்டுமல்லாது' ஆடைகளிலும் இந்தக் கற்கள் வைத்துத் தைக்கப்படும். ஒயிட் மெட்டல் பாத்திரங்களில் வைத்து பதிக்கப்படும். சில சமயம் அந்தப் பொருட்களில், மரச் சாமான்களில் பதிக்கப்படும், ஐரோப்பாவிலும், அரேபியாவிலும் இந்தக் கல்லுக்கு அதிக வரவேறபு. ஏகப்பட்ட மதிப்பு.

திருச்சிராப்பள்ளி சந்துகளில் உருவான இந்த கற்கள். வெளிநாடுகளில் மிகப்பெரிய அரண்மனைகளில் அலங் கரித்தன.

இப்படி பட்டை தீட்டிய கற்களாலேயே அறுபது அடி நீளச்சுவர் ஒன்றில் நாற்பது அடி உயரம் படம் வரையப்பட்டது. பல்வேறு நிறங்களில் ஒன்னரை டன் கற்கள் தேவைப்பட்டன,

யானைக்கு பாப்கார்ன் கொடுத்து பசியாற்றுவது போல் திருச்சி பஜார் பாலீஷ் கற்களுக்கு அலை மோதியது, இரவு பகலாய் எந்திரங்கள் ஓடின. கல்லுக்கு ஒரு ரூபாய் கூட தரப்பட்டது. கல்லுக்கு அஞ்சு ரூபாய் அதிகம் விலை வைக்கப்பட்டது.

வட இந்திய பனியாக்கள் ஸின்தடிக் தளம் விற்று, பாலிஷ் கற்களை வாங்கிக் கொண்டார்கள். கிலோவுக்கு முன்னூறு ரூபாய் கூலி கொடுத்து ஆயிரம் ரூபாய் லாபம் சம்பாதித்தார்கள்.

பெரிய கடைத் தெருவில் பல சந்துகளில் பல குடும்பங்கள் இரண்டு வேளை சாப்பிடுவதற்கு இந்தத் தொழிலே காரணம். பல பெண்கள் சுமாராய் உடுத்துவதற்கு இந்தத் தொழிலே மூலதனம். ஆனால் சூரத்தில் சரிகைத் தொழில் போலவோ, ஆந்திராவில் மரவேலை போலவோ, கேரளத்தில் தந்தச் சிற்பம் போலவோ, கல்கத்தாவில் கைத்தறி போலவோ, கர்நாடகாவில் ஊதுவத்தி போலவோ, காஷ்மீரில் கம்பள வேலை போலவோ, டெல்லியில் வெள்ளித்தட்டு வேலை போலவோ இதற்கு ஒரு மரியாதை வரவில்லை.

தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு இப்படி ஒரு கைத் தொழில் இருப்பது தெரியவில்லை. கல் பட்டறையில் வேலை செய்பவர்களுக்குப் பெரிய மதிப்பில்லை. இது படித்துவிட்டு செய்கிற வேலை இல்லை. படிப்பில்லாமல் பீடி சுருட்டிக் கொண்டிருப்பவர்கள், பொடி இடித்துக் கொண்டிருப்பவர்கள் நகைக் கடை வாசலில் சாக்கடை

சலித்து தங்கத் துணுக்குத் தேடுகின்ற பெண்கள் செய்கிற வேலையாக இது இருந்தது.

''பிளஸ் டூ படிச்சுட்டு கல் பட்டறை வேலை ஏண்டா செய்யுற ஸ்ரீதரன்?'' வீட்டிலும் கேட்டார்கள். சிட் ஃபண்டில் காசு கலெக்ட் பண்ணுகிற வேலை உயர்வு என்றார்கள்.

நான் சீட்டுக்கு காசு வசூல் பண்ணுவது மட்டு மில்லாமல், கொடுத்த கடனை வசூல் செய்வதும் அங்கு செய்ய வேண்டும். எப்பாடு பட்டாவது கடனை வசூல் செய்தாக வேண்டும்.

''சோறு தின்றியா, மலம் தின்றியா?'' கேளுடா, வண்டை வண்டையா கேளு'' சீட்டுக் கம்பனி முதலாளி கத்துவார். ஆங்காரத்தோடு கெட்ட வார்த்தை சொல்லக் கற்றுக் கொடுப்பார். ஒரே வாரத்தில் சீட்டுக் கம்பனியின் காசு அலுத்து விட்டது. விரல்களைக் கீறி' கீறி ரத்தம் சிந்தி இந்தக் கட்டிங் தொழிலை கற்றுக் கொண்டான். அவன் குணத்திற்கு இந்தக் கட்டிங் வேலை பொருத்தமாக இருந்தது.

அப்பா ஒரு பிரைவேட் பஸ் கம்பனியில் குமாஸ்தா வாக இருந்தார். அக்கா ரேவதி டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் கேஷியராக இருந்தாள். அம்மா வீடு கவனித்துக் கொண்டாள். சாப்பாடு, வாடகை. துணி மணி எதிலும் பெரிய குறை இல்லை. ரேவதியின் கல்யாணம் என்கிற போதுதான் ஒரு பயம் வயிற்றைக் கவ்வும். ஆறு சவரன் நகை கூட இல்லாமல் ஒரு பெண்ணை எப்படி மணமேடைக்கு அழைத்து வருவது என்று கேள்வி வரும். அம்பது பேருக்காவது சாப்பாடு போட வேண்டுமே. நூறு பேருக்காவது சோடா, கலர் கொடுக்க வேண்டுமே. பத்து மணி நேரமாவது

லௌட் ஸ்பீக்கரில் பாட்டுப் போட வேண்டுமே. எழு பத்தி அஞ்சாயிரம், எண்பதாயிரம் சுலபமாக ஆகும். ஆனால் கையில் பத்தாயிரம் ரூபாய் காசு கூட இல்லை. சேமிக்கும் அளவு வருமானம் இல்லை.

கடன் வாங்கி, பிறகு மெல்ல, மெல்ல கட்ட வேண்டும் என்றால் அது வாங்கிய கடன் போல் இரு மடங்கு ஆகும். அம்பதாயிரம் வாங்கினால் ஒரு லட்சம் அடைக்க வேண்டும். இது முட்டாள்தனம். வயிற் றெரிச்சல். ஆனால் ரேவதிக்கு இருபத்தி நாலு வயது. அவள் கண்களில் கணவனுக்கான ஏக்கம் அதிகம் தெரிகிறது.

பெண் ஏங்கினால் இளைத்துப் போவாள். ரேவதி இளைத்துத்தான் போயிருந்தாள். பகத்சிங் சோழிய வெள்ளாளர் ஸ்ரீதரன் என்ன ஜாதியோ அதே ஜாதிதான். ஸ்ரீதரனுடைய வேலையேதான். கிட்டத்தட்ட அதே வருமானம் தான் இருக்கும். மெல்ல பகத்சிங்கைக் கேட்டுப் பார்க்கலாமா?

ஒரு வேளை திருமணம் ஆகியிருக்குமோ, முகத்தைப் பார்த்தால் அப்படி தெரியவில்லை. ஆனால் முகத்தை வைத்துக்கொண்டு ஒன்றும் சொல்ல முடியாது. அந்த பசுபதிக்கு கல்யாணம் ஆகவில்லை. ஆனால் மூன்று கல்யாணம் செய்தவன் போல் முகம் உள்ளது.

''திருச்சிக்கு பஸ் ஏறுகின்றீர்களா?'' ஸ்ரீதரன் கேட்டான்.

''குளிக்க வந்துட்டு எதுக்கு பஸ் ஏறணும். அம்மா மண்டபம் போய் குளிக்கலாம்.''

''சுழல் அதிகமிருக்குமே.''

''அதுககுத்தான் தடுப்புப் போட்டிருக்காங்க இல்ல. தடுப்பு தாண்டியா குளிக்கப் போறீங்க.''

''கொள்ளிடத்துல பயமில்லாம குளிக்கலாம்.''

''எதிலயும் கொஞ்சம் பயமிருக்கணும் ஸ்ரீதரன். நீங்க கத்தியிலதான் வேலை செய்றீங்க. எத்தினி பழக்க மானாலும் கண்ணை மூடிக்கிட்டா வேலை செய்ய முடியும். அசந்தா வெட்டிடும் என்ற பயத்தோடு வேலை செய்யணும். அதான் நல்லது. கொள்ளிடத்துல குளிக் கிறவன் சோம்பேறி. போனவுடனே எல்லாரும் வட்டமா உட்கார்ந்துட்டோம் பாருங்க. அப்படி உட்கார்ந்ததால தான் வம்பே ஆரம்பிச்சது.''

மறுபடியும் துணிகளை அவிழ்த்து விட்டு, மடித்து பைகளில் வைத்து விட்டு நீரில் இறங்கினார்கள். நீர் இழுத்துக்கொண்டு போயிற்று. ஆளை தடுப்பில் மோதி யது. சிரமப்பட்டு கரைககு நீந்த வேண்டியிருந்தது. நீந்துவதிலேயே கண்ணும், கருத்துமாய் இருக்க வேண்டி யிருந்தது. உடம்பு அயர்ந்து போகும் வண்ணம் நீந்தி விட்டு கரையேறி சோப்பு போட்டுக்கொள்ளும் போது சந்தோஷமாக இருந்தது.

''நீங்க கிராஜுவேட்டா, பகத்சிங்?''

''நானா...நான் எட்டாவது வரைக்கும்தான் படிச் சேன்.''

''நிறைய விஷயம் சரியா பேசறீங்க.''

''அது அனுபவம். புஸ்தக படிப்பு. படிச்சு பக்குவ மானவங்களோட ஏற்பட்ட ஃபிரண்ட்ஷிப். கொஞ்சம் தனியா உட்கார்ந்து உருப்படியா யோசிக்க வைக்கும். நான் தெரிஞ்சுக்க வேண்டியது இன்னும் நிறைய இருக்கு ஸ்ரீ தரன்.''

''கல்யாணம் ஆயிடுச்சீங்களா?''

''இல்லை, இப்போதைக்கு செய்துக்கிறதாவும் இல்லை.'' பகத்சிங்கிடமிருந்து பதில் உறுதியாய் வந்தது. ஸ்ரீதரன் முகம் மாறினான்.

''உங்களுக்கு கல்யாணம் ஆயிடுச்சா, ஸ்ரீதரன்?''

''இன்னும் ஆகலே. ஆனா செய்துக்கணும். எங்க அக்காவுக்கு ஆன பிறகு நான் செய்துக்கணும்.''

''அக்கா படிச்சிருக்கா?''

''பிளஸ் டூ. டிபார்மெண்டல் ஸ்டோர்ல கேஷியரா இருக்கா.''

''முதலியாரா?''

''இல்லை சோழிய வெள்ளாளர்.''

''அடடே நான் கூட...''

''சொன்னீங்களே...'' ஸ்ரீதரன் இடைமறித்தான்.

ஜாதியைப் பற்றிப் பேசப் பிடிக்கவில்லை. அதே சமயம் கேட்காமலும் இருக்க முடியவில்லை. சுயஜாதி என்று தெரிந்த பிறகு ஒரு நட்பு வருகிறது. அந்த நட்பு பயமாகவும் இருக்கிறது.

''எனக்கொன்னு தோணுதுங்க.'' பகத்சிங் பேசத் துவங்கியபோது ஸ்ரீதரன் ஆவலானான். ரேவதியின் ஜாதகம் கேட்பானா? எங்கிருக்கிறது? அம்மாவிடமா, நாமாய் கொண்டு வந்து கொடுப்பதா இல்லை, பெரியவர்களிடம் கொடுத்து மாற்றிக் கொள்ளச் சொல்வதா இந்த பகத்சிங்கா ரேவதிக்கு.. மனசு வேக வேகமாய் எண்ணங்களை அறுத்து வீசியது.

''கல்லறுத்து நேராய் எங்கிட்ட கொடுங்களேன். கடனுக்கு ஸின்தடிக் தளம் வாங்காத நாமா தளம் வாங்கி

கல்லறுத்து பட்டை தீட்டி பாலீஷ் பண்ணி மார்க்கெட்ல வித்தா...?''

''என்ன லாபம், எப்படி லாபம்'' ஸ்ரீதரன் கேட்டான்.

''ஒரு முதலாளி உங்ககிட்ட கல்லறுத்து வாங்கி என் கிட்ட கூட விக்கிறாரு. நான் பாலீஷ் பண்ணிதர வேற யாருக்கோ இன்னும் கூடுதலா கைமாத்துறாரு. வடக்கத்திக்காரன்கிட்ட ஒரு கிலோ பிரகாத், ஒரு கிலோ சவுக்கை நாமளே கொண்டு போய் வித்தா...''

''வாங்குவானா...?''

''ஏன் வாங்கமாட்டான்?''

''ஒவ்வொரு கல்லா ஒரு கிலோ கல்லு பார்க்க முடியாது. நல்ல வேலைப்பாடா எல்லா கல்லும் இருக்குன்னு முதல்ல அவன் நம்பணும். நீங்க புதுசா வர்றதால குறைச்சுத்தான் ரேட்டு கேப்பான். வித்து பொறுமையா காசு தரேன்னு கண்டிஷன் போடுவான். நல்ல தளம் இரண்டாயிரத்தி ஐநூறு ரூபாய் விக்கிறவன் தளம் தரமாட்டேன்னுட்டா, அவன் எங்க வாங்கறானோ அங்க நாம வாங்குவோம்.''

''அவன் பாம்பேல வாங்குவான், முப்பது கிலோ நாப்பது கிலோன்னு.''

''நாம போய் பத்து கிலோ வாங்கிட்டு வருவோம்.''

''சுண்டக்காய் கால் பணம், சுமைக்கூலி முக்கால் பணம். பாம்பே போறதும், வர்றதும், அங்கே தங்கறதும் அடிபடும்.''

''எங்கப்பா போறாங்க வாரா வாரம் பம்பாய்க்கு'' பகத்சிங் விவரம் சொன்னான்.

''அப்படியா? என்ன வேலையா?''

''லாரி டிரைவர். மிளகாய் வத்தல் கொண்டு போயிட்டு உளுத்தம் பருப்பு எடுத்துட்டு வருவார். மூணு ராத்திரி ரெண்டு பகல் பாம்பே போயிடலாம். நானும் கிளினர் மாதிரி கூட போய் பத்து கிலோவா, இருவது கிலோவா தளம் வாங்கிட்டு வரேன். எனக்கு சீக்கிரமா வெட்டி தறீங்களா?''

''இப்ப தளம் தருபவருக்கு பதில் சொல்லணுமே?''

''யோசனை பண்ணி சொல்லுங்க. நிச்சயமா கூட சம்பாதிக்கலாம். டோட்டலா லாபம் பாத்துட்டு ஒன்னுங் கீழ மூணு பங்கு உங்களுக்குக் கொடுத்திடறேன்.''

''வீட்டிற்குப் போலாமா?'' எழுந்தார்கள்.

''நம்ம வீடு தாண்டி தானே போகணும். உள்ள வந்துட்டுப் போங்க.'' பாதி வழியிலேயே பகத்சிங் வேண்டிக் கொண்டான்.

பகத்சிங் வீட்டில் ஒரு பெண் எழுந்து கை கூப்பியது' ஸ்ரீதரனை பெயர் சொல்லி அறிமுகப்படுத்தியதும், ''அப்படியா?'' என்று சிரித்தது. அந்தச் சிரிப்பு ஸ்ரீதரனை மெல்லத் தாக்கியது.

''இது என் தங்கச்சி சித்ரா. பி.காம் முடிச்சிட்டு சி.ஏ. பண்றா.''

ஸ்ரீதரன் அந்தப் படிப்பைக் கேட்டு விட்டு வெட்கப் பட்டான், படிப்பு முகத்தில் தெரிந்தது. நிற்றலில் தெரிந்தது. கைகூப்பலில் தெரிந்தது.

''வாங்க.''

டீபாய் இழுத்து மேசையை நகர்த்திக் கொடுத்தாள். ஸ்ரீதரன் நகர்ந்து போய் சோபாவுக்கு அருகே நின்று கொண்டான்.

''இவரு யாருன்னே சொல்லலியேண்ணா?'' அவனை வேகமாகப் பார்த்துக் கொண்டே அண்ணாவைக் கேட்டாள்.

''ஸ்ரீதரன்மா, அம்மா மண்டபத்தில பார்த்தோம். எஸ். வி. அதனால கூட்டிட்டு வரல்ல. பேசறத ஆவலோட கேட்டாரு. அந்தக் கவனிப்பு எனக்குப் புடிச்சிருந்தது. சினேகிதமாயிட்டோம். ஜெம் கட்டிங் பண்றாரு. ஒன்னா சேர்ந்து செய்யலாமா, எனக்கு கட் பண்ணித் தறீங்களா அப்படின்னு பேசறதுக்கு கூப்பிட்டேன்.''

''நல்ல ஜெம் கட்டிங் கிடைக்கலை. இந்தத் தொழில் லேயே அதுதான் பெரிய பிரச்சனை. தளத்தை டிசைன் டிசைனா வெட்டிக் கொடுத்தாதான் பட்டை தீட்டறதோ பாலீஷ் போடறதோ முடியும். ஒரு கிலோ பாதாமி வெட்டி தரேன்னு தளம் வாங்கிக்கிறாங்க. லேபர் சார்ஜ் அட்வான்ஸ் வாங்கிக்கிறாங்க. ஒரு கைப் புடி கல் வெட்றாங்க. அதுக்கப்புறம் தளமும் வரதில்லை, ஆளும் வரதில்லை. காசும் வரதில்லை.''

''என்னா ஆவுது?'' ஸ்ரீதரன் வியப்போடு கேட்டான்.

''குடி, சூதாட்டம் காசு பார்த்ததும் தூக்கி அடிச்சு செலவு, வேலை செய்ய சோம்பேறித்தனம். எல்லாரும் அப்படியில்லை. நிறைய பேர் அப்படியிருக்காங்க. நான் ரொம்ப யோசனை பண்ணிப் பார்த்தேன் ஜெம் கட்டிங் ஒரு எரிச்சலான வேலை. அலுப்பான வேலை. உடம்பு சூடாயிடுது. கண் எரியுது. உள்ளங்கை முழுசும் சின்னச் சின்னதா காயம் ஏற்படுது. இடுப்பும், முதுகும் அரிக்குது. ஆயிரம் பீஸ் ஒரே மாதிரியா கட் பண்ணணும். மனசு உடம்பு ரெண்டுத்திலயுமே கஷ்டம் வருது. சூடு குறைக்க பீர் குடிக்க ஆரம்பிச்சு அப்படியே லிக்கர்க்கு அடிமையா யிடறாங்க. சுத்தற வட்டக் கத்திய குடிச்சுட்டு வேலை செய்ய முடியுமா? கைதடுமாறினா கத்தி படாத

ழிருக்குமா? கண்ணு கூர்மையா இல்லைன்னா கல்லு வெட்ட முடியுமா? தொழில் தப்பாயிடுது. சம்பாத்தியம் நின்னு போயிடுது. நாலு வருஷம் கஷ்டப்பட்டுக் கத்துக்கிட்ட தொழில் விட்டுட்டு வேற தொழிலுக்குப் போகும்படியா ஆயிடுது. இது பெரிய பலஹீனம். தான் ஒரு ஃபெயிலியர்னு எண்ணம் வந்துடும். பிறகு கஷ்டம். வாழ்க்கை ரொம்ப கஷ்டமாயிடும்.''

அவள் எதிர் சோபாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டே போக ஸ்ரீதரன் 'ஹா' வென்று பார்த்தான்.

கெட்டிக்காரப் பெண்களைப் பற்றி அவன் கேள்விப் பட்டிருக்கிறான். தொலைவிலிருந்து அவள் ஒரு கெட்டிக் காரி என்று எவரோ சொல்ல வாய் பிளந்து பார்த் திருக்கிறான்

ஒரு பெண் ஆலோசித்து அறிவார்த்தமாய் பேசுவதை கேட்பது வாழ்க்கையில் இதுவே முதல் தடவை.

இந்த சித்ரா அசத்துகிற அழகெல்லாம் இல்லை. அணிகலன்கள் அதிகம் இல்லை. உடைகளில் ஆடம்பரம் இல்லை. சினிமாவில் வரும் செழுமையான வீடாகவும் அது இல்லை. ஆனால் அந்தப் பெண் ஸ்ரீதரன் கண் ணுக்கு மிக அழகாகத் தோன்றினாள்.

அவள் சொன்ன விஷயங்களை ஸ்ரீதரனும் ஆராய்ந் திருக்கிறான். காசும் தளமும் கொடுத்துவிட்டு ஏமாந் திருக்கிறான். ஒரு குடிகாரனை பார்ட்னராக சேர்த்துக் கொண்டு அவஸ்தைப்பட்டிருக்கிறான். சூதாடியான ஒரு உறவுக்காரனின் வாழ்க்கை நாசமாவதை கண்கூடாய் பார்த்திருக்கிறான்.

அவனுடைய ஆச்சரியம் ஜெம் கட்டரில் உள்ள வேதனையை அவள் தெளிவாய் சொன்னதுதான். ஒரு கட்டர் பக்கத்தில் உட்கார்ந்து கவனித்திருந்தாலொழிய

இது தெரிந்து கொள்ள முடியாது. இந்த வேலையில் உள்ள அலுப்பு மிகப் பெரிய வேதனை.

"குடிக்கிறதுக்கு காரணம் அலுப்பில்லைமா திமிரு, நானூத்தைம்பது ரூபாய் இந்த மாதிரி ஆளுங்க கையில இருக்குதுன்னு வைச்சுக்குவோம். அவங்களுக்கு வாங்கணும்னு தோன்ற முதல் விஷயம் குவார்ட்டர்."

"அம்மாகிட்ட சரியா பால் குடிக்காத பசங்க சிகரெட் நிறைய குடிப்பாங்கன்னு ஒரு ஆராய்ச்சி சொல்லுது சித்ரா. அதே மாதிரி குடிப்பழககத்துக்கு ஏதோ ஒரு பின்னணி உள்ளது. ஆறுலேர்ந்து பத்து வயசுக்குள்ள குடிப்பழக்கம் பத்திய ஒரு எண்ணம் ஆம்பிளை பசங்க மனசில பதிஞ்சிடுது. டு டிரிங்க் ஆர் நாட் டு டிரிங்க் அந்த ஏஜ்ல முடிவு பண்றான்."

"ஒரு குடிகாரனை ஏழு வயசுப் பையன் சந்தோஷமா வேடிக்கை பார்த்தானா அவன் குடிப்பான். பயந்து ஓடினான்னா அவன் குடிக்க மாட்டான்."

"ரொம்ப மேலோட்டமா சொல்றண்ணா, இந்தக் காரணம் போறாது."

"சரி இதை விடு. நாம ஸ்ரீதர்கிட்ட பேசுவோம். ஸ்ரீதர் வெட்டித் தரீங்களா? இப்ப வாங்குற கூலியை விட அதிகமா தரேன்."

"அது எப்படிங்க டக்குனு என்னை நம்பிட்டீங்க? நானும் தண்ணி போடுவேங்க."

அவள் சிரித்தாள்.

"தண்ணிப் போடறது ஒன்னும் தப்பில்லிங்க. வேலை கெட்டுப்போற அளவுக்கு எது செய்தாலும் தப்பு. எங்க தெருவுல இருபது வயசுப் பையன் இருக்கான். அவன் தண்ணி போட மாட்டான். சூதாட மாட்டான். தினம் சினிமா பார்ப்பான். ஊரு விட்டு ஊரு போய் பார்ப்பான். புது படத்துக்கு நூறு இருநூறு செலவு

பண்ணுவான். இதுவும் முட்டாள்தனம்தான். கெட்ட பழக்கம்தான்.'' சித்ரா சற்று சரிவாய் உட்கார்ந்து கொண்டு பேசினாள்.

மட மடவென்று பகத்சிங் கணக்குப் போட்டுக்காட்ட நூற்றி அம்பது ரூபாய் வேலைக்கு இருநூற்றி அம்பது ரூபாய் கிடைக்கும் என்பது தெரிந்தது. அதில் உடனடியாக அம்பது ரூபாய் கிடைக்கும். இன்னொரு அம்பது ரூபாய் ஆறு மாதம் பொறுத்து கிடைக்கும். இன்னும் இரண்டு மூன்று கட்டிங் மெஷின் வாங்கி இளைஞர்களுக்கு வேலை கொடுத்து, தளம் வெட்டுதலை விரிவு படுத்தினால், இன்னும் கூடுதலான லாபம் கிடைக்கும்.

ஸ்ரீதரன் சரியென்று சொல்ல, தளம் வீட்டுக்கு வரும் என்று சொல்லப்பட்டது. கையில் இருந்த வேலையை இரவோடு இரவாக முடித்து சம்பந்தப்பட்டவர்களுக்குக் கொடுத்துவிட்டு அம்மாவிடமும், அக்காவிடமும் பகத்சிங் பற்றி சொல்லிக் கொண்டிருந்த போது சித்ரா நாலு கிலோ தளத்தோடு வந்தாள். மூட்டையை இறக்கி வைத்துவிட்டு ''அப்பாடா'' என்று தரையில் உட்கார்ந்தாள்.

''ஸ்ரீதர் அந்த ஃபேன் போடேன்...'' புடவையால் கழுத்தைத் துடைத்துக் கொண்டாள். அம்மாவும், அக்காவும் மிரண்டு பின்னடைவதை ஸ்ரீதரன் உணர்ந்தான்.

தடக்கென்று வந்துவிட்டாளே என்று கவலைப் பட்டான்.

''எல்லாம் சவுக்கை சதுரம், சதுரமாய் ஆடையில் வைத்துத் தைக்கப் போகிறார்கள். பக்காவாய் பாலிஷ் செய்தால்தான் வாங்கிக் கொள்வார்கள். எனவே நல்ல ஆழம் வைத்து விட்டு, இந்த வேலை சரியாக முடித்துக் கொடுத்தால் இந்த ஆர்டர் நேரடியாக நம்மிடம்

வரும். வெட்டவோ, பாலிஷ் போடவோ தெரியாதவன் வெறும் வியாபாரியாய் நின்று சம்பாதிக்கிறான். வெறும் கமிஷன் ஏஜெண்டாய் நின்று லாபம் பார்க்கிறான். இந்த ஆர்டர் கொடுத்தவன் நானும், அண்ணாவும் ஆங்கிலத்திலே பேசுவதைப் பார்த்து விட்டான். எங்களிடம் நேரே வருவான்.''

''ஆர்டர் கொடுத்தவன் வரும் வரையில் காத்திருப்பானேன்.. நாமே நேரில் போனால் என்ன?''

''அய்யோ... அவன் ஒரு லாட்ஜ்ல தங்கியிருக்கான்...''

''ஸோ வாட்'' தடக்கென்று ஆங்கிலம் ஸ்ரீதரனுக்கு வந்து விட்டது. அம்மாவும், அக்காவும் இன்னும் சிறிதாய் வியந்தார்கள்.

''நான் ஒரு லேடி... ஹோட்டலுக்குப் போக முடியுமா? போனா தப்பா நினைக்க மாட்டாங்களா?''

''நானும் வரேன்'' இந்த வார்த்தையும் டக்கென்று வந்துவிட்டது. அக்கா வேறு அறைக்குள் நகர்ந்தாள். அம்மா அடுப்படியில் உட்கார்ந்தாள். அவர்களுக்கு இது பிடிக்கவில்லை என்று சூசகமாய் உணர்த்தினார்கள்.

''இது நல்ல ஐடியா, ஒரு ஆறு சவுக்கை கட் பண்ணி எடுத்துக்குங்க.'' அவன் ஒரு சிறிய தளத்தை கையில் எடுத்துக் கொண்டு மனசுக்குள் ஆறு சதுரமாய் அதை வெட்டிப் பார்த்துக் கொண்டு சுழலும் சக்கரக் கத்திக்கு வைர வடி கலந்த மருந்து பிடித்து தளத்தை வெட்டத் துவங்கினான். அவள் அருகே ஸ்டூலில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரும்பு போன்ற உறுதியான தளம் அவன் தளுக்காய் பிடிக்க சரியான கோணத்தில் தளத்தை தூக்க வெண்ணெய் மாதிரி வெட்டுப்பட்டது.

பத்து சவுக்கை வெட்டிக் கொடுத்தான். அதை அவள் பல கோணங்களில் ஆராய்ந்தாள்.

''எனக்கு வேலை தெரியுதுங்களா?'' ஸ்ரீதரன் கையைத் துடைத்துக் கொண்டு கேட்டான்.

''சேச்சே... நான் உங்களை டெஸ்ட் பண்ண வரலை.''

''டெஸ்ட் பண்ணினா என்ன தப்பு? பதினைஞ் சாயிரம் சரக்கு இறக்கியிருக்கீங்க. அதை வெட்டத் தெரியுமான்னு நீங்க பார்க்கிறதுதான் எனக்கு மரியாதை. பார்த்த பிறகு உங்களுக்கு நிம்மதி, எனக்கும் நிம்மதி. ஏன்னா, இன்னும் ரெண்டு நாளைக்கு நான் தளம் வெட்டப் போறதில்லை.''

''ஏன்?''

''எங்க தாய் மாமன் பையன் துபாய்லிருந்து வராரு. ஸ்டேஷன் போகணும்.''

''உங்க அக்கா ரேவதியைப் பார்க்க வராறா? ஆடு, கோழி அடிச்சி ரொம்ப விசேஷமா? இது முக்கியமான வேலை. தளம் அப்புறம் மெள்ள அறுத்துக்கலாம்.''

ரேவதி அக்கா வெட்கப்பட்டாள். பிரியத்துடன் சித்ராவைப் பார்த்தாள்.

வரப்போகும் பையனுக்கு இப்படி எண்ணம் இருக் குமா என்று தெரியவில்லை. எண்ணம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று எல்லோருக்கும் தோன்றியது.

''அப்ப நான் வரேன். வேலை ஆரம்பிச்சிட்டா ஒரு வார்த்தை வீட்டுக்கிட்ட வந்து சொல்லிட்டுப் போங்க.''

''சரி'' ஸ்ரீதரன் பதில் சொன்னான். வாசல் வரை சென்று வழியனுப்புவதா வேண்டாமா என்று தவித் தான்.

''ஸ்ரீதர் வாங்களேன்'' அவள் அழைக்க பின்னால் ஓடினான். அம்மா உதடு சுழித்தாள்.

''கையில எவ்வளவு காசிருக்கு ஸ்ரீதர்?''

''எதுக்குக் காசு?''

''தாய் மாமன் பையன் வரான்னா, காசு வேணாமா. ரேவதிக்கு முறைப் பையன்தான அவன்?''

''முறைப் பையன்தான். ஆனா காசெல்லாம் எதிர் பார்க்க மாட்டான். துபாய்ல ரப்பர் இன்ஜினியர், டிப்ளமா ஹோல்டர். ஆயில் பைப்புக்கு நடுவில் வர வால்வு பார்த்துக்கிறானாம். பொறுப்பான வேலை. நல்ல சம்பளம். ரேவதியைக் கட்டிக்குவானா தெரியலை. துட்டு பார்த்த சுகத்தில இன்னும் பெரிய இடமாகவும் பார்க்கலாம். நம்ம வீட்டுக்கு வந்தா அவன்தான் செலவு பண்றான்.''

''நீ சொல்றது நல்லாவேயில்லை ஸ்ரீதர். அவன் என்னதான் வசதியா இருந்தாலும் அவன் இங்க வந்தா நாமதான் செலவு பண்ணணும். வண்ணமா சமைச்சுப் போட ஒரு ஆயிரம் ரூபாயாவது செலவுக்கு வேணாமா? இந்தா இதை வைச்சுக்க'' பர்ஸைத் திறந்து ஆயிரத்து ஐந்நூறு கொடுத்தாள்.

ஸ்ரீதரன் தயங்கினான். அவள் அவன் கையைப் பிடித்துக் காசு திணித்தாள். இறங்கி சாதாரணமாக நடந்தாள். தெரு முழுவதும் அவனையே வேடிக்கை பார்ப்பதாய் அவனுக்குத் தோன்றியது.

காசை பேண்ட் பாக்கட்டுக்குள் திணித்துக் கொண்டு உள்ளே வந்தான்.

''ரொம்ப நேரம் பேசிட்டு வந்திருக்கே. இந்தா காபி குடி.'' அம்மா கிண்டலாய் காபி டம்ளரை எதிரே வைத்தாள்.

''உனக்குப் புடிக்கலையா அவங்களை.''

''அதெல்லாம் சொல்றதுக்கு நான் யாரு? அவங்க வேலை குடுக்கறாங்க. காசு வந்தா சரி. வம்பு வராம இருந்தால் சரி.''

''என்னா வம்பு வந்திடும்?''

''வாசல்ல நின்னு பேசறீங்களே... இந்த வீட்டில அத்தினி போர்ஷனும் எட்டிப் பாக்குதே...''

''உங்கண்ணன் புள்ளை வந்தப்ப கூடத்தான் எட்டிப் பார்த்தாங்க. நாளைக்கு வரப்போறான், அப்பவும் எட்டிப் பார்ப்பாங்க.''

''எட்டிப் பாப்பாங்கடா, வந்திருக்கிறானான்னு எட்டிப் பார்த்திட்டுப் போய்டுவாங்க. கட்டிப் புடிச்சிட்டு நின்னாலும் ரொம்ப சந்தோஷம்னு நகர்ந்துடுவாங்க. ஆள் யார்னு தெரியலைன்னா சந்தேகப்படுவாங்க.''

''இப்ப யாருக்கு என்ன தெரியணும்?'' ஸ்ரீதரன் கத்தினான்.

''முதல்ல எனக்குத் தெரியணும். என்னா பேசினீங்கன்னு எனக்குத் தெரியணும். முதல்ல நான் பொண்ணைப் பெத்திருக்கேன். அப்புறம்தான் உன்னைப் பெத்திருக்கேன். அவளை ஒரு இடத்தில கரை சேக்கிற வரைக்கும் நீ மூச்சு விட்டா கூட எனக்குத் தெரிஞ்சாகணும். இது ஆம்பளை இருந்தும் இல்லாத வீடு. உங்கய்யா அவர் வேலைக்கு ஊர், ஊரா போயிடுவார். அவர் வந்து கேக்கிற கேள்விக்கு நான் பதில் சொல்லியாகணும்.''

''என்னாமா பண்ணிட்டேன்... வாய்க்கு வந்தபடி பேசற.''.

''ஸ்ரீதர் நீ நல்ல புள்ளைடா, எனக்கு தெரியும். உன்னை பிளஸ் டூ வரைக்கும் படிக்க வைக்கிறதுக்கு

நாங்க பட்டபாடு உனக்குத் தெரியும். வேலை தேடறேன், வேலை தேடறேன்னு வருஷக் கணக்கா ஊர் சுத்தாத பொறுப்பா பட்டறை போட்டுட்ட. கஷ்டப்பட்டு வேலை செய்யுற. நல்லபடியா வேலை செய்றவனை தங்க பக்கம் இழுக்க ஆள் வரத்தான் செய்யும்.''

''யாரும் யார் பக்கம் இழுக்கலை. வாசல்ல கூப்பிட்டு ஆயிரத்தி ஐந்நூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தாங்க.''

''அதை உள்ள வைச்சு கொடுக்கிறது. வாசல்ல என்ன வம்பு?''

''நான் அங்கன வைச்சுக் கேட்டேன். அதனால அங்கனயே கொடுத்தாங்க'' பையிலிருந்து காசு எடுத்து அப்படியே அம்மாவிடம் கொடுத்தான். அம்மாவின் முகம் மலர்ந்தது.

''இதை என்ன பண்ணப் போறம்மா?''

''ரெண்டு மூணு பித்தளைப் பாத்திரம் வாங்கணும்.''

''அதை அப்புறம் வாங்கிக்கலாம். சபாபதி துபாய்ல ருந்து வந்தா ரெண்டு நாள் தங்குவான். அது செலவுக்கு வேணாமா?''

''அவன்தான் உள்ள நுழைஞ்ச வுடனே நம்ம வறுமையை பார்த்துட்டு காசு கொடுக்கறானேடா.''

''அது தப்பு. அந்த காசு வாங்காத. எனக்கு ஒரு நாளைக்கு இருநூறு போல் வருது. மாச ஆறாயிரம் சம்பளம். வருஷத்துக்கு பன்னிரண்டாயிரம் போனஸ். நீ எதுக்கு கை நீட்டணும். அவன் வரட்டும், சந்தோஷமா ஆக்கிப் போடு. அவன் நாலு புடவை துணி கொடுத்தா பதிலுக்கு ரெண்டு பனியனாவது கொடுப்போம்.''

அம்மா திகைத்தாள்.

அப்போ, முந்திரி பருப்பு, ஏலக்காய், வெல்லம் பெரிய பட்டியல் கொடுத்தாள். வீடு ஒரு விருந்தினரை வர வேற்கத் தயாரானது.

விருந்துக்கு வந்தவன் விரைவாய் திரும்பி போனால் வெட்ட உட்காரலாமே என்று யோசித்தான்.

சிறிய சந்தில் சாமி வருவது போல அவன் வீட்டுக்கு விருந்து வந்தது. தெரு அடைத்து ஜனங்கள் நிற்பது போல வீடு அடைய சாமான்கள் வந்தது.

''நேரே கரூர் போகாத என்னாடா இங்க இறங் கிட்ட?''

''கரூர் போய் திரும்பினா உனக்கு ஒரு முழம் ரவிக்கை கூட மிஞ்சாது. அவளுக்கு ஏன் கொடுக்கறேன்னு பறிக் கிறதுக்கு ஆயிரம் பேர் இருக்காங்க.''

அவன் பெரிய தோல் பை பிரித்தான். கட்டாய் நோட் எடுத்தான்.

''இந்தா அஞ்சாயிர ரூபாய். செலவுக்கு வைச்சுக்க. கோழிக்கறி, ஆட்டுக்கறி இரண்டும் செய். வஞ்சிரம் கிடைக்குமான்னு பார்.''

''எல்லாம் செய்திருக்குடா, துட்டு வாணான்டா.''

''எப்படி அத்தை?''

''ஸ்ரீதர் பட்டறை போட்டிருக்கு. கல் வெட்டுது. நிறைய ஆர்டர், நல்ல வருமானம்.''

''வருமானம்னா எவ்வளவு?''

''மாசம் ஆறாயிரம்.''

''அங்க எனக்கு வார சம்பளம் ஆறாயிரம்.''

''அதுசரி, உன்னோட வைச்சுப் பாக்க முடியுமா, என் புள்ளை யார் கையும் எதிர் பார்க்காம தனியா

சம்பாதிக்கறான். மூணு வேளை சாப்பாட்டுக்கு குறையில்லாம இருக்கோம். மானமா உடுத்தறோம்.''

சபாபதி இடுப்பில் கை வைத்து அத்தையின் பேச்சை ஆவலுடன் கேட்டான்.

''ரேவதி ஒரு மூவாயிரம் சம்பாதிக்குது, அதை வீட்டுக்கே கொண்டாறது இல்லை. செக்கா வாங்கி அப்படியே பேங்கில போடுறோம். அவ காசு அவ கல்யாணத்துக்குன்னு வைச்சுக்கறோம்.''

''ஒரு ஒன்னரைக் கோடி இருக்குமா பேங்க்ல...?''

''டேய் கேலி பண்ணாதடா... நூல் நூலாதான் மேல ஏறணும். அப்படித்தான் முடியும். இருக்கிறதை எடுத்து மிச்சத்தை கடன் வாங்கி எழுபத்தஞ்சி, எண்பது ரூபாய்ல இந்த வருஷத்துக்குள்ள கல்யாணத்தை முடிச்சிடணும்னு பார்க்கறேன். எட்டு மணிக்கு ஸ்டோர் மூடி, எட்டரை மணிக்கு வருது. அது வரத பார்த்தா பாவமா இருக்குடா நீ எதுனா ஒரு நல்ல வார்த்தை சொல்ல மாட்டியான்னு காத்திட்டு இருக்கோம்.''

''சொன்னா என்னா செய்வே?''

''ரெண்டு மாசத்துல கல்யாணம் பண்ணிக் கொடுத்துடுவேன்.''

''நான் நல்ல வார்த்தை சொல்லலேன்னா...?''

''உன்னைத்தான் கட்டிக்குவேன்னு இங்கு யாரும் ஏங்கி கிடக்கலை.''

''ஏன் வேற ஆள் பாத்து வெச்சுட்டீங்களா?''

ரேவதி உள்ளேயிருந்து ஓடி வந்தாள். அவன் சட்டையைப் பிடித்து கீழே உலுக்கித் தள்ளினாள்.

''உங்களுக்கு ஏங்கலைன்னா உடனே ஊர்ல மேயறேன்னு நினைச்சிட்டீங்களா, எங்க ஒழுக்கத்தைப் பத்தி

கேக்கறீங்களே. உங்க ஒழுக்கம் யாருக்குத் தெரியும். சாராயமா, கஞ்சாவா, போதை மருந்தா எதில மாட்டி யிருக்கீங்கன்னு யாருக்குத் தெரியும். மாமன் பையனை நம்பித்தான் நிக்கறமே தவிர நல்ல வாக்கு கொடுங்கன்னு கெஞ்சி நிக்கலை.''

''அத்தை வர மாசம் நல்ல நாள் பாரு. உன் பொண்ணை எனக்கு கல்யாணம் கட்டிக் கொடு. இவ கழுத்தில தாலி கட்டிட்டு, இவளை இதே மாதிரி·புடிச்சி தள்ளலே...நான் சபாபதி இல்லை.''

ரேவதி வெட்கப்பட்டாள். பின்னடைந்தாள். அறைக்குள் போய் மெல்ல விசும்பத் தொடங்கினாள்.

நாலு சவரன் சங்கிலியை சபாபதி அத்தையின் கைகளில் வைத்தான்.

''நான் எட்டு மாசம் வெளியூர் போய் சம்பாதிக் கிறவன் அத்தை. என் துட்டுப் பார்த்து வரப்பொண்ணை நான் கட்டிக்க முடியாது. எட்டு வயசிலருந்து கூட விளையாடின ரேவதியைத்தான் கட்டிக்க முடியும். ரேவதி எதுக்கு அஞ்சும், எதுக்கு ஆத்திரப்படும்னு எனக்குத் தெரியும். ஸ்ரீதர் சம்பாதிக்கிறான் என்பது சந்தோஷமா இருக்கு. நான் என்னாதான் ரேவதி மேல ஆசைப்பட்டாலும், என் உறவு ஜனத்துக்காக கல்யா ணத்தை நல்லபடியா நடத்தணும். என் சிநேகிதர்களுக்கு விருந்து கொடுக்கணும். திருட்டு தாலி கட்டற மாதிரி கல்யாணம் நடத்த முடியாது.''

ஸ்ரீதரனின் அம்மா அவனையே வியந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நகை நான் போடறேன். நீ நானூறு, ஐந்நூறு பேருக்கு சோறு போடு. வண்ணமா கல்யாணம் நடத்து. நான் கொடுத்த அஞ்சாயிரத்தை வேணாம்னு சொன்ன

பாரு. எனக்காக உன் துட்டுலேயே கறி சமைச்சு வச்சிருந்த பாரு எனக்கு அந்தத் தன்மானம் புடிச்சிருக்கு.'' ஸ்ரீதரனுக்குள் சித்ரா சட்டென்று சிரித்தாள்.

ரேவதியும், அம்மாவும், சபாபதியோடு வாடகைக் காரில் சமயபுரம் போனார்கள்.

பகத்சிங் வீடு அமைதியாக இருந்தது. சித்ராவுக்கு ஜுரம், தலைவலி. அதனால் தூங்கிக் கொண்டிருப்பதாக சொன்னார்கள். பகத்சிங் ஸ்ரீரங்கம் போய் இருப்பதாகச் சொன்னாாகள்.

ஸ்ரீதரன் வண்டியைத் திருப்பி ஸ்ரீரங்கம் நோக்கி மிதித்தான். அரங்கன் கோவிலுக்குள் போய் தேடினான்.

உடையவர் சன்னதியின் உள்ளே பகத்சிங் கண் மூடி அமர்ந்திருந்தான். முகம் சோர்வாக இருந்தது.

ஸ்ரீதரன் போய் அமர்ந்த அஞ்சு நிமிடத்தில் பகத்சிங் கண் திறந்தான்.

''வாங்க ஸ்ரீதர், என்ன செய்தி?''

''வீட்டுக்குப் போயிருந்தேன். நீங்க இங்க இருக்கிறதா சொன்னாங்க.''

''ஆமா, காலையிலிருந்து இங்கதான் இருக்கேன். உங்க மூஞ்சியில ஒரு சந்தோஷம் தெரியுதே.''

''ஆமாங்க. அக்கா ரேவதிக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சு, சபாபதி சரின்னுட்டார்.''

''யார் சபாபதி.''

''மாமா பையன்ங்க. துபாய்ல வேலை, வர மாசத்துக்குள்ள முகூர்த்தம் பார்க்கச சொல்லிட்டாரு.''

''வெரிகுட்.''

''கொஞ்சம் காசு வேணும். ஒரு முப்பதாயிரம்தான் பேங்க்ல இருக்கு. நீங்க ஒரு முப்பதாயிரம் கொடுத்தீங் கன்னா, சத்திரம் பார்த்து பேசிடுவோம். பாத்திரம் வாங்கிடுவோம். உங்க சிஸ்டர் சித்ரா வந்து விருந்தாளி வரும் போது கையில துட்டு இல்லாம இருக்காதீங்கன்னு ஆயிரத்தி ஐந்நூறு கொடுத்தது. அதுதாங்க இந்தக் கல்யாணம் நடக்கவே காரணம். நாங்க ரொம்ப ஏழை இல்லை. ஒரு ஒம்பதாயிரம் வருமானககாரங்க என்று நம்ப முடிந்தது. உங்க சிஸ்டர் சித்ராவுக்கு நன்றி சொல்லலாம்னுதான் வீட்டுககுப் போனேன். தலை வலின்னு தூங்கிட்டு இருக்காங்க.''

''இன்னும் எழுந்திருக்கலையா?''

''இல்லீங்க, தூங்கினுதான் இருந்தாங்க. ஒரு முப்ப தாயிரம்...''

''சித்ராகிட்ட கேட்டுதான் சொல்லணும். இப்ப முடியும்னு தோணலை.?'

''தலைவலிக்கு ஒரு நல்ல மருந்து இருக்குங்க. எங்கம்மா செய்து போடுவாங்க.''

''அது தலைவலி இல்லை ஸ்ரீதர், மனசு வலி. அதுக்கு மருந்து கிடையாது.''

''இன்னாங்க ஆச்சு?''

''பொண்ணு பார்த்துட்டுப் போனான் போன மாசம். பையனுக்கு டெல்லியில வேலை. பொண்ணு புடிச்சிருக்குனு அவங்க அப்பாவுக்கு இங்லீஷ்ல லெட்டர் எழுதி, எங்களுக்கு ஒரு காப்பி அனுப்பிச்சான். அந்தக் காபியில் பின் குறிப்புன்னு போட்டு,என்னை உங்களுக்குப் புடிச்சிருக்கானு கேட்டிருந்தான்.

''லெட்டரை சித்ரா என்கிட்ட காமிச்சது. என்ன செய்யட்டும் என்று கேட்டது.

''பையன் மாடர்னா இருப்பான் போலிருக்கு. படிக்காத பொண்ணை தலையில கட்டுவான்னு நினைக்கிறான் போலிருக்கு. அதனால புடிச்சிருந்தா புடிச்சிருக்குனு எழுதிப் போடுமான்னேன். ரெண்டு வாரம் முன்னாடி எழுதிப் போட்டா எழுதின லெட்டரை என்கிட்ட காமிச்சுட்டுத்தான் போட்டா.

''ஆறு வரி இங்கிலீஷ்லதான் எழுதியிருந்தா. என்னை மதித்து என்னைப் பிடித்திருக்கிறதா என்று கேட்ட விதம் எனக்கும், அண்ணனுக்கும் பிடித்திருந்தது... இந்த மாதிரிதான் எழுதியிருந்தா.

''நேத்திக்கு புள்ளையோட அப்பா, அம்மா, நாலைஞ்சு உறவுக்காரங்க வந்திருந்தாங்க. ஒன்றரை லட்ச ரூபாய் வரதட்சணை வேணுமாம். தொண்ணூறு லக்கி நம்பாரம். தொண்ணூறு சவரன் நகை போடணுமாம். கல்யாணம் மெட்ராஸில் நடத்தணுமாம். ரொம்ப முட்டாள்தனமா பேசினாங்க.

''பொண்ணு பார்க்க வறப்போது சிம்பிளா செய்தா போதும்னீங்க, இப்ப என்னன்னு கேட்டேன்.

''எம்புள்ளைக்கு லெட்டர் எழுதி மயக்கினீங்கள்ள... அதனாலதான்னு சுள்ளுனு சொல்லிட்டா. எனக்கு ஒன்னுமே புரியலை. சித்ரா ஆடிப் போச்சு.

''புள்ளைய பெத்தவன் நான் இருக்க. நீ எதுக்கு எம் புள்ளைக்கு லெட்டர் எழுதினே. என்னனென்னமோ பேசினாங்க.

''தப்புதான், உங்க எதிர்பார்ப்புக்கு நாங்க இல்லைன்னு திருப்பி அனுப்பிச்சுட்டேன். சுருண்டு அப்படியே போய் படுக்கையில் விழுந்தா. ராத்திரி

முழுக்க எழுந்திரிக்கவேயில்லை. காலையில உலுக்கி எழுப்பினேன் ஓவென அழுவுறா...

பகத்சிங் கூரையில் உள்ள சித்திரங்களை வெறித்துப் பார்த்தான்.

''கவலைப்படாதம்மா, வேற இடம் பார்ப்போம், உலகத்துல நல்லவங்களும் இருப்பாங்கன்னு சொன்னேன், வெறிபுடிச்சா மாதிரி கத்தினாள்.''

ஸ்ரீதரன் ஒரு அதிர்ச்சியோடு பகத்சிங் பேச்சை கவனித்தான்.

''எனக்கு கல்யாணம் வேணாம். நான் என்னா செய்துட்டேன்னு இப்படி ஒரு அசிங்கம் பண்றாங்க. பொம்பளையை ஏன் இத்தனை மட்டமா நினைக்கிறானுங்க. என்னைப் புடிச்சிருக்கான்னு அவன் கேட்டது தப்பில்லை. உன்னைப் புடிச்சிருக்குனு நான் சொன்னது தப்பாயிடுச்சு. அந்த ஒரு வார்த்தை நான் எழுதிட்டதாலே ஒன்னே கால் லட்ச ரூபாய் அபராதமா... ஏன் அண்ணா பொறுமையா பேசின... எழுந்து வெட்டியிருக்க வேணாம்னு ரொம்ப நெர்வசா கத்துறா. தூக்க மாத்திரை கொடுத்து தூங்க வைச்சிட்டு வந்துட்டேன். வேற என்ன செய்யறது?'

''நான் போய் சமாதானப்படுத்துட்டுங்களா?''

''எங்க டென்ஷன் உனக்கு என்னாத்துக்கு. ஸ்ரீதரா பாவம் தங்கச்சி கல்யாணத்துக்கு காசு கேக்க வந்த...''

''எனக்கு காசு வேணாங்க. வேற எங்கியாவது பாத்துக்கிறேன். ஒரு லேடியை இப்படி அசிங்கப்படுத்தறது தப்பு. நிறைய காசு வாங்கி நொண்டியோ, முடமோ பையனுக்குக் கட்டி வைக்கறதுதான், தேவதை மாதிரியிருக்காங்க சித்ரா, அவங்களைப் போய் அசிங்கப் படுத்தினா... அவங்க சொன்னது சரி...பொத்து, பொத்துனு அடிச்சிருக்கணும். ஆனா அப்படி செய்யக்

கூடாது. அப்படி செய்தா நம்ம வீட்டுக்குத்தான் அவமானம். அக்கம், பக்கம் தப்பா பேசி, பரவிடும்.''

ஸ்ரீதரன் மணல் தட்டி எழுந்தான்.'' நாம யாருக்கும் கெடுதல் பண்ணலை. நமக்கு கெடுதல் பண்றவன் நல்லா இருக்க மாட்டான். இது நடக்கும் பாருங்களேன். உங்க பர்மிஷனோட நான் போய் உங்க தங்கச்சி சித்ராகிட்ட பேசறேன். எங்க அக்கா கல்யாணம் நிச்சயமாயிடுச்சினு சொல்லி, அதுக்குக் காரணம் அவங்கதான்னு சொல்லி கொஞ்சம் கொஞ்சமா பேச்சுக் கொடுத்து மனசு மாத்தறேன். ப்ளீஸ்... எனக்கு பர்மிஷன் கொடுங்க.''

பகத்சிங் சிரித்தான். சரி என்றான்.

சைக்கிளில் போகும் வழி முழுதும் ஒரு ஒத்திகைக்குப் பேசிக் கொண்டு போவது போல் ஆயிற்று.

பகத்சிங் வீட்டு வாசலுக்குப் போனதும், உள்ளே இரண்டு பேர் பதட்டத்துடன் இருப்பது தெரிந்தது.

சித்ரா நெஞ்சு வலிக்கிறது என்று கத்தினாள். இருமி, இருமி வாந்தி எடுத்தாள். என்னமோ செய்யுதே என்று கத்தினாள். முகம் கறுத்துக் கிடந்தது.

மறுபடியும் போய் பகத்சிங்கை கூட்டி வரலாமா? வேண்டாம் இவளை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும். அதுதான் முக்கியம். வெளியே ஓடினான். ஆட்டோ பிடித்தான்.

உள்ளே போய், ''வாங்க...'' ஆஸ்பத்திரி போலாம்'' என்று சித்ராவை அழைத்தான்.

சித்ராவின் அம்மாவும், அடுத்த வீட்டுப் பெண் மணியும் அணைத்துப் பிடித்துக் கொள்ள, சித்ரா வண்டியில் ஏறினாள்.

ஸ்ரீதரன் சைக்கிளில் தொடர்ந்தான். பெரிய கடைத் தெருவில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் ஆட்டோ நின்றது.

''பாய்ஸன் கேஸா?'' எடுத்த உடனேயே கேட்டார்கள்.

''இல்லீங்க ஒரே ஒரு ஸ்லீப்பிங் டோஸ்...'' ஸ்ரீதரன் சொல்ல சித்ரா இடைமறித்தாள்.

''நேத்திக்கு ரெண்டு சாப்பிட்டேன். ராத்திரி தூக்கமே வரலை. அதனால இன்னிக்கு காலைல ரெண்டு சாப்பிட்டேன், நல்லா தூக்கம் வந்தது. சாயந்திரம் எழுந்த போது நிக்கவே முடியலை.''

''வேறென்ன சாப்பிட்டீங்க?''

''வேற எந்த மருந்தும் சாப்பிடலை.''

''நான் மருந்து கேட்கலை, சாப்பாடு ஏதாவது சாப்பிட்டீங்களா?''

''இல்லை.''

''காபி, மோர் ஏதாவது குடிச்சீங்களா?''

''இல்லை.''

''ஒன்னும். சாப்பிடாம பத்து மணி நேரத்துக்குள்ள நாலு பில்ஸ் சாப்பிட்டா, நடுங்காம என்ன செய்யும். ஊட்டுக்குப் போய் மோர் கலந்து நொய் கஞ்சி குடிங்க. அப்புறம் காரமில்லாம கோழி சூப் சாப்பிடுங்க. இல்லை பருப்புத் துகையல், மிளகு ரசம் வைச்சு சாதம் சாப்பிடுங்க. உடம்பில சத்து இல்லை. இப்பவும் தூக்கம் வரலைன்னு ரெண்டு மாத்திரை சாப்பிட்டிருந்தீங்கன்னா செத்துப் போயிருப்பீங்க... தூக்கம் வரலைன்னா எக்ஸ்ஸசைஸ் பண்ணுங்க. தானா தூக்கம் வரும். மாத்திரை போடாதீங்க தப்பு. கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு மட்டும்

போயிருந்தீங்க, தற்கொலை கேஸ்னு போலீஸுக்கு சொல்லிட்டிருப்பான்.''

அந்த டாக்டர் ஏகமாய் அலட்டிக் கொண்டார்.

''வந்தது வந்திட்டீங்க, ரெண்டு மணி நேரம் இருந்து ஒரு பாட்டில் சலைன் ஏத்திக்கங்க, இது யாரு அம்மாவா? அம்மா, சாதம் குழைய வடிச்சு, மிளகு ரசம் போட்டு பிசைஞ்சு பருப்பு துகையலோட கொண்டாங்க இங்கேயே சாப்பிடட்டும். சாப்பிட்டு ஒரு அரை மணி நேரம் பொறுத்து மறுபடியும் செக் பண்ணி வீட்டுக்கு அனுப்பிச்சுடறேன்.''

அடுத்த வீட்டு அம்மா வேறு வேலை இருக்கிறது. என்று சொல்ல, சித்ராவின் அம்மா மிளகு ரசம் வைப் பதற்காய் ஓட, ஸ்ரீதர் அவள் அறை வாசலில் காவல் இருந்தான்,

''என்னாங்க, இப்படி பண்ணீட்டீங்க?'' தொலைவில் இருந்தபடி கேட்டான்.

''சேச்சே...நான் தற்கொலையெல்லாம் பண்ணிக் கலைங்க...''

''நான் அப்படி சொன்னனா... இந்த நாலு மாத்தி ரையை ஏன் அப்படி சாப்பிட்டீங்க. எனக்குத் தூக்கம் வரலைன்னா நான் தளம் கட் பண்றதுக்கு உட்கார்ந்திரு வேன். இல்லை சோப்பும், டவலும் எடுத்துக்கினு காவேரிக்கு வந்திடுவேன். காவேரியில தண்ணி இல்லைன்னா, மலைக்கோட்டை உச்சியில போய் உட் கார்ந்துடுவேன்.''

''நான் பொம்பளை எங்க போய் உட்கார முடியும்?''

''சும்மா அலுத்துக்காதீங்க சித்ரா. பகத்சிங் மாதிரி ஒரு அண்ணன் கிடைக்கிறதுக்கு கொடுத்து வைக்கணும்.

கிட்டத்தட்ட பார்டனர் மாதிரி உங்களை நடத்தறாரு. நீங்க சி. ஏ. படிக்கிறது அவருக்கு ரொம்ப பெருமை.''

''அங்கதான் தப்பு. நம்மவரு சுதந்திரம் கொடுத்த தேன்னு அடுத்தவங்க வீட்டுக்குப் போய் ஆடக்கூடாது. சொல்லககூட கூடாது.''

''நீங்க அண்ணனை விட்டு டெல்லிக்கு லெட்டர் எழுதியிருக்கணும். எங்க வீட்டுப் பொண்ணுக்கு உங்களைப் பிடிச்சிருக்குனு. பகத்சிங் லெட்டர் எழுதியிருக்கணும்.''

''மூக்கை உடைச்ச மாதிரி ஆயிடுமேன்னு நினைச்சேன். நாளைக்கு கல்யாணம் முடிஞ்ச பிறகு மூஞ்சிய தூக்குவானேன்னு பார்த்தேன். எல்லாம் முட்டாள் தனமா முடிஞ்சது. ஒன்னேகால் லட்சம் வரதட்சணை கொடுக்கணுமாம். தொண்ணூறு சவரன் நகை போடணுமாம். என்னா அயோக்கியத்தனம்.''

''நகை போடறது அயோக்கியத்தனம்னு சொல்ல முடியாது. போடுங்கன்னு கேட்கறதுதான் அயோக்கியத் தனம். உங்கஇஷ்டம் எவ்வளவு வேணா அப்படின்னாககா நிறைய செய்யணும். நிறைய செய்யணும் அப்படின்னு ஆசை வரும். எங்க அக்கா ரேவதிக்கு கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சுங்க. எங்க மாமா பையன்தான், துபாய்ல வேலை. பிரியப்பட்டு செய்துக்கறான். எல்லாம் உங்க இஷ்டம்னுட்டான். நானூறு' ஐந்நூறு பேருச்கு சாப்பாடு போடணும்கறான். அக்காவுக்கு அவனே நாலு பவுன் கொடுத்துட்டாங்க. நான் கடன் கேட்கணும்னு பகத்சிங்கை தேடிட்டு வந்தேன்.''

''வரதட்சணையே கேட்கலியா?''

''எங்கம்மா அவனுக்கு சொந்த அத்தைங்க. எங்க நிலமை அவனுக்கு தெரியும். ரேவதியை சின்ன வயசிலருந்தே தெரியும்.''

"பையன் நல்லவனா?"

"ரொம்ப நல்லவன். சிகரெட் கூடி பிடிக்க மாட்டான் ஆனா வரபோது ரெண்டு பெரிய டப்பா வாங்கிட்டு வருவான். பிரண்ட்ஸுக்கு ஒரு டப்பா கொடுத்துடுவான். விலைக்கு ஒரு டப்பா கொடுத்திடுவான்."

"ரேவதிக்கு இஷ்டம்தானா?"

"அவன் கூட சமயபுரம் போயிருக்கு."

"ஹூம்... எனக்கு மாமனும் கிடையாது. மாமன் பையனும் கிடையாது."

"மாமன் இருந்துட்டா போதுங்களா, மனுஷாள் நல்லபடியா இருக்கணும்ங்க. காசு, பணம் கூட அப்புறம் தாங்க. ஆறுதலா மனுஷன் இருந்துட்டா அது மாதிரி சந்தோஷம் எதுவுமில்லை.

"மாமாவுக்கு பையன மட்டுந்தானா, பொண்ணுங்க இல்லையா?"

"இருக்குது. ஆனா பெரிசு. கல்யாணம் ஆயிடுச்சி. அந்தப் பொண்ணு கல்யாணத்துக்கு எங்க ஆப்பாவும், அம்மாவும் ரொம்ப கஷ்டப்பட்டாங்க. கடைசி நேரத்துல எங்கம்மா வளையல் வேற கழட்டிக் கொடுத்தது. அந்த நன்றியெல்லாம் சேர்ந்துதான் இப்ப கட்டிக்குறானு வைச்சுக்குங்களேன்."

"எவ்வளவு காசு வேணும்."

"பரவாயில்லைங்க, நான் வெளியே வாங்கிக்கிறேன்."

"ஜெம் கட்டருக்கு யாரு கடன் தருவா?"

"யாரு ஸின்தடிக் ஜெம் வியாபாரம் பண்றாங்களோ அவங்கெல்லாம் கடன் தருவாங்க."

''கடன் சும்மா தருவாங்களா, எத்தினி கிலோ தளம் எப்போ வெட்டித் தருவேன்னு கணக்குப் போடுவாங்க.''

''அதுக்கு என்னா பண்ண முடியும்?''

''அதனாலதான் அந்தக் கணக்கை நான் போடறேன். உங்களுக்கு எவ்வளவு காசு வேணும்?''

''உயிரோட இருக்கிற வரைக்கும் உங்களுக்கு நான் தளம் வெட்டத் தயார், உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொடுங்க.''

''இப்படி பேசினா சரியாயிடுமா, உயிரோடு இருக்கிற வரைக்கும், ஸ்ரீதர் எங்களுக்குதான் தளம் வெட்டு வாருன்னு நாங்க வெளியே போய் சொன்னா நம்புவாங் களா? கணக்கு ரொம்ப முக்கியம். சொல்லுங்க எவ்வளவு காசு வேணும்?''

''நான் பகத்சிங்கிட்ட கேட்டுக்கறேன்ங்க.''

''பொம்பளைகிட்ட எதுக்கு பேச்சுனு பார்க்க றீங்களா?''

''நான் அப்படி நினைக்கவே மாட்டேங்க. உங்களைப் பார்க்கிற போதே உங்க மேல ஒரு மரியாதை வந்திடுச்சு, நான், ரேவதி ரெண்டு பேருமே நிறைய படிக்கணும்னு ஆசைப்பட்டோம் வறுமை படிக்க முடியலை.''

''படிச்சி என்ன... படிச்சவன்தான் தொண்ணூறு சவரன் நகை கேக்கிறன்.''

''நான் படிச்சாலும் சரி, படிக்காட்டாலும் சரி, நகை, துட்டு எதுவுமே கேட்கமாட்டேங்க, வியாபாரம் தெரிஞ்ச பொண்ணா வேணும்னு எதிர்பார்க்கிறேன். கட்டின துணியோடு வந்திடுன்னு சொல்வேன். பிரியம், கெட்டிக் காரத்தனம் இதான் பொம்மனாட்டிக்கு வேணும்.''

''எது புடிக்காது?''

''தளுக்குத்தனம் புடிக்கலைங்க. டிரஸ் பத்தியே பேசறது, மேக்கப் பத்தியே பேசறது, இது புடிக்கலைங்க. எல்லாத்துக்கும் பயந்தாப் போல நடிக்கிறதும் புடிக் கலை.''

''அப்ப என்னை கட்டிக்கிறீங்களா?''

மெல்ல வெட்டிக் கொண்டிருந்த தளம் பட்டென்று உடைந்து தெறித்தது போல் ஸ்ரீதரன் திகைத்தான்.

''நான் பிளஸ் டூங்க...''

''அப்ப நான் சி. ஏ. படிக்கிறதை வுட்டுறவா?''

''சே, எதுக்கு வுடணும்?''

''பொம்பளை அதிகம் படிச்சா ஆம்பளைக்கு புடிக் காதே.''

''நீங்க ஒன்னு. நீங்க உட்கார்ந்து ஸின்தடிக் வியா பாரம் பத்தி பேசினது எவ்வளவு நல்லா இருந்தது தெரி யுமா. நாங்க ரொம்ப ஏழை.

''நாங்களும்தான்.''

''ஆபீஸரா, பெரிம வியாபாரியா பார்க்கிறதை வுட்டுட்டு, நான் ஒரு ஜெம் கட்டர்... என்னைப் போய் கேக்கறீங்களே...''

''என்கிட்ட என்ன குறை'' அவள் கேட்டாள்.

''நல்லாருக்கு. உங்கண்ணன்கிட்டே இப்பத்தான் தேவதைன்னு சொல்லிட்டு வரேன்.''

''அப்புறம் ஏன் பதில் சொல்ல மாட்டேங்கறீங்க. பொம்பளை கேட்டா சீப்பாயிடுது இல்ல.''

''கடவுளே...ஏன் இப்படி ஒரு முரட்டுத்தனமா பேச றீங்க. யார் மேலேயோ கோபப்பட்டு, என்னை கட்டிக் கிறியான்னு கேட்டா, நான் என்ன பதில் சொல்றது?''

''எனக்கு எவன் மேலயும் கோபம் இல்லை.''

''உங்க பேச்சில இப்ப கோபம் மட்டும்தான் இருக்கு.''

''ஏன் பொம்பளை கோபப்படக் கூடாதா?''

''கோபப்பட்டு எந்த முடிவும் எடுக்கக் கூடாது. நிச்சயமா கல்யாணத்தைப் பத்தி முடிவு எடுக்கக் கூடாது.''

''நான் கோபப்படலை. அண்ணன் பிஸினஸ் பார்ட்னரா உங்களை சேர்க்கணும்னு சொன்னாரு. நான் லைஃப் பார்ட்னரா சேர்த்தா என்னன்னு யோசனை பண்ணேன். ஒரே வியாபாரத்துல இருக்கோம். ஒழுக்கம், மரியாதை, பேசிப் பழகறவிதம் எல்லாத்துலயும் சமதையா இருக்கோம். என்னா கொஞ்சம் படிச்சித் தொலைச்சிட்டேன்.''

''நாங்க சோழிய வெள்ளாளர்.''

''நாங்களும் அதான். அதுவும்தான் உங்களை கேக்கிறதுக்கு ஒரு காரணம்.''

''ஜாதி முக்கியங்களா?''

''இல்லைன்னா அதுக்கு ஒரு கிண்டலும், கேலியும், பேச்சும், வழக்கும் வரும். இதுல ஜாதி சண்டை இருக்காது.''

''உங்களை புடிக்கலைன்னு டைத்தியக்காரன்தான் சொல்லுவான். வரதட்சணை கொடுங்கன்னு ஆத்திரக்காரன்தான் கேப்பான். இருந்தாலும் இந்த நேரம் நீங்க கேட்ட கேள்விக்கு எனக்கு பதில் சொல்லத் தெரியலை... என் மண்டை முழுக்க ரேவதி கல்யாணம்தான் நிக்குது.''

அவள் அவனையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''எப்ப நடந்தாலும் என் கல்யாணம் தாயுமானவர் சன்னதியில்தான். முப்பது, நாப்பது பேர்தான். ரெண்டாயிரம், மூவாயிரம்தான் செலவு, ஒன்றரை மணி நேரம் தான் கல்யாணம். ஆனா இப்படி பண்றதை உலகம் விரும்பலை. பொண்ணுகிட்ட தப்பா...புள்ளை கிட்ட தப்பான்னு கேட்குது.''

''முடியாதுன்னா முடியாதுன்னுட்டுப் போய்யா... அக்காவுக்கு பத்து சவரன்ல நகை போட்டுட்டு நீ இருபது சவரன்ல பொண்ணு தேடிக்க. வாண வேடிக்கை, பரோட்டா குருமா, கேஸ் லைட் எல்லோத்தோடயும் கல்யாணம் பண்ணிக்க.''

''நான் சரின்னு சொல்லிட்டா கொஞ்சம் அமைதியா பேசுவீங்களா?''

''நீ சொல்லமாட்டே.. ''

''இங்க சொல்ல மாட்டேன். பகத்சிங்கைத் தேடிக் கண்டு பிடிச்சு மாத்திரை சாப்பிட்டதிலிருந்து மிளகு ரசம் வரைக்கும் சொல்லிட்டு, உங்க தங்கச்சிய நான் கல் யாணம் பண்ணிக்கிறேன், ஒரு முப்பதாயிரம் கடன் கொடுன்னு கேக்கப் போறேன்.''

''தன்னை அடகு வைத்து தமக்கைக்கு திருமணம் செய்த பெருமான், தமக்கைக்குக் கல்யாணம் ஆனதும் எம்மேல வெறுப்புக் காட்டுவான்.''

''அடடா எவனோ ஒருத்தன் ஏமாத்திட்டானாம். ஊர்ல இருக்கிற அத்தனை பேரும் பொம்பளைய ஏமாத் தித்தான் பொழைக்கறான்னு முடிவு கட்டிட்டீங்க.''

''இதைப் பிடுங்கி எறிங்க...'' சலைன் ஊசியைக் காட்டினாள்.

''எதுக்கு...?''

''போய் பொட்டியிலிருந்து முப்பதாயிரம் எடுத்து கொடுத்துடலாம்னுதான்.''

''எங்க மேல நம்பிக்கை வந்திடுச்சா?''

''தாயுமானசாமி பாத்துக்குவாரு.''

''நம்பிக்கை வரலேன்றீங்களா?''

''எவனோ ஏமாத்திட்டாங்கறதுக்கு எல்லோரையும் அயோக்கியன்னு நினைக்க முடியுமா?'' அவன் சொன்னதையே அவனுக்குத் திருப்பிச் சொன்னாள்.

''ஆகா, ஞானம் வந்திடுச்சி. இனிமே கவலையில்லை. நான் மிளகு சாதம் வந்துடுச்சான்னு போய் பார்த்துட்டு வரேன். என்னாண்ட பதில் சொல்லாத போறியேன்னு உள்ள ஒரு கோபம் வரும். உங்களைக் கட்டிக்கிறது ஒரு அதிர்ஷ்டம். முப்பதாயிரம் காசுக்கு கட்டிக்கிறானோன்னு உங்களுக்குத் தோணும். நான் அதை வேற விதமா தீர்த்து வைக்கிறேன்.

''அண்ணங்கிட்ட பேசப் போறீங்களா?''

''முப்பதாயிரம் ரூபாய் கடனைப் பத்தித்தான் பேசப் போறேன். உடம்பு சரியானதும் அங்க ரேவதி கூட புடவை கடைக்கு வரணும். எங்க வீட்டில யாருக்கும் இந்த விஷயம் பத்தாது.''

மிளகு சாதம் பிசைந்து கொண்டிருந்தார்கள் துகையலை உருட்டிக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

''நீங்க என்னாத்துக்கு சிரமப்படறீங்க? சித்ராவுக்கு ஒன்னும் இல்லை. ஊசி எடுத்துட்டாங்க. ரிசப்ஷன்ல உட்கார்ந்து டி.வி. பார்த்திட்டிருக்காங்க. நான் கொண்டு போய் கொடுத்து ஆட்டோவில ஏத்திக் கூட்டிட்டு வந்திடறேன்.''

''ஆஸ்பத்திரிக்குத் துட்டு கட்டணும்பா.''

''நூத்தி நாப்பது ரூபாய் கட்டிட்டேன்.''

''யார் இந்தப் புள்ளை?''

அவன் செருப்பு மாட்டும் போது வீட்டுக்குள் கேட்டார்கள்.

''யாரோ கல்லு பட்டறை பையன் போல...'' சித்ராவின் அம்மா பதில் சொன்னாள். கொஞ்சம் வலித்தது. பிறகு சிரிப்பு வந்தது.

''எதுக்கு ஆட்டோ செலவு?'' சித்ரா சைக்கிளின் பின்னே உட்கார்ந்து கொண்டாள். தெரு முனையில் இறங்கி நடந்து வந்தாள். விடைபெற்று அவன் வீட்டுக்கு விரைந்து வந்தான்.

அம்மா அவன் நெற்றியில் சமயபுரம் மாரியம்மன் குங்குமத்தை வைத்தாள். திருநீறு தீற்றினாள்.

''வரும்போது ஜோசியர் வீட்டுக்குப் போய் நல்ல நாள் பார்த்தோம்டா'' செய்தி சொன்னாள்.

''இன்னிலேர்ந்து கரெக்டா எழுபது நாள், கல்யாணத்தை குறைவில்லாம செய் அத்தை வீணா எங்க மனுஷாள்கிட்ட வாங்கிக் கட்டாத அப்படின்னுட்டுப் போறான். பகீர்னுதுடா. என்ன பண்ணப் போறோம்னு தெரியலை. ரேவதி அப்பாவுக்கு டெலிபோன் பண்ணா. நாளைக்கு வரேன்னு சொல்லியிருககார்.''

''நான் பதினைஞ்சு நாள்ல முப்பதாயிரம் ரூபாய் தரேன். அப்பா ஏதாவது கொண்டார மாட்டாரா. அப்பா இருவது ரூபாய் கொண்டாரறாருன்னு வைச்சிக்குவோம். கல்யாணம் நல்லா பண்ணிடலாம்.''

''நகை, புடவைக்கு ஆகுமேடா. முதல்ல அதை யோசனை பண்ணு. நீங்க போட வேண்டிய பத்து சவரனைப் போடுங்க. அவர் நாலு சவரன் கணக்குல

சேர்க்காதீங்கன்னு சொல்றா. நேத்திக்கு வரைக்கும் நம்ம கூட இருந்தா இப்ப அவன் பக்கம் பேசுறா.''

''நாளைக்கு மாமியார் வீட்ல தெரிஞ்சதுன்னா உங்காத்தாளுக்கு ஆறு சவரன்தான் போட முடிஞ்சுதான்னு கேட்க மாட்டாங்களா? கை நீட்டி எப்படி நாலு சவரன் வாங்கின முன்னாடியே மாமன் மகனைக் கணக்குப் பண்ணிட்டியான்னு கேக்க மாட்டாங்களா ஆம்பளை இன்னிக்கு மதிப்பா நாலு சவரன் தூக்கிக் கொடுத்துடலாம். நாளைக்கு நம்மளயே குத்திக் காட்டலாம். ஏன் வம்பு?''

''இப்ப இவகிட்ட நாலு சவரன் இருக்கு. இன்னும் ஆறு சவரனுக்கு வழி பண்ணனும்'' அம்மா அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''அவ காசு முப்பதாயிரம் பேங்கில இருக்கேம்மா.''

''அதை நான் தொட வுட மாட்டேன்.''

''ஏன்?''

''அது என் காசு.''

''உனக்கு நகை பண்ணத்தானே கேட்கிறேன்.''

''நீ பண்ணு. ஒரே ஒரு பொண்ணு. அவளுக்கு சீர் செய்ய உங்களால முடியாதா?''

''அவ என்னா சொல்றா'' அம்மா இழுத்துப் பேசினாள். நாளைக்கு கல்யாணம் ஆன பிறகு அவளுக்கு கைச் செலவுக்கு வேண்டி இருந்தா. நம்மளையும் நம்பாத அவ புருஷனையும் நம்பாத அவளே பேங்கலருந்து காசு எடுத்துக்குவாளாம். இப்படி ஒரு அக்கவுண்ட் இருக்கறது அவ புருஷனுக்குக் கூட தெரிய வராதாம்.

திருமணம் என்று சொன்னவுடனே ரேவதி அக்காள் டக்கென்று கெட்டிக்காரியாகி விட்டதாய், கடுமையாகி

விட்டதாய் கொஞ்சம் கெட்ட புத்தி அவளுக்கு வந்து விட்டதாய் ஸ்ரீதரனுக்குத் தோன்றியது.

இருபத்தைஞ்சு வருடங்களுக்குப் பிறகு என் பிள்ளைக்கு நூறு சவரன் நகைபோடு. நாலு கிலோ வெள்ளி கொடு என்ற கொடுமைக்காரியாய் மாறிவிட லாம் என்று தோன்றியது. காசு மிக முக்கியம் என்று ஆகிவிட்டால் மற்ற மனித பண்புகள் மெல்ல மெல்ல காணாமல் போகின்றன.

இன்னும் ஒரு முப்பதாயிரத்துக்கு என்ன செய்வது? யாரைக் கேட்பது? பழைய முதலாளியைப் போய் பார்க்க லாமா, மூணு வட்டி, நாலு வட்டி என்று கொடுப் பவரிடம் போய் நிற்கலாமா?

அப்பா காலையில் வீட்டுக்கு வந்ததும்தான் இவன் கண் திறந்தான்.

''எங்கேயிருந்துடி நான் பத்தாயிரம் கொண்டாந்து கொடுப்பேன். ரெண்டு வருஷத்துக்கு முன்னால உனக்கு உடம்பு சரியில்லாமல் போச்சே, அப்ப பதிமூனாயிரம் கடன் வாங்கினேன். அதையே போன மாசம்தான் அடைச்சேன். இனிமே கடன்னு கேக்காத அப்படின்னுட் டாங்க. என்னால ஆயிரம் ரூபாய்தான் தரமுடியும். அதுவே கஷ்டம். இப்படி எதுக்குமே உதவாத இருக்க மேன்னு மனசுக்குக் கஷ்டமாத்தான் இருக்கு.''

அப்பாவின் கண்கள் பனித்தன. ரேவதி ஓடிப்போய் அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''நீ வருத்தப்படாதப்பா, நீ மனசுக்கு கஷ்டப்பட்டா எனக்கு கல்யாணமே வாணாம்னு சொல்வேன்.''

"ஏய் வாய மூடுறி, எந்தத் தெய்வம் உள்ள பூந்துச்சோ, என் தம்பி மகன் தானே வந்து கட்டிக்கிறேன்றான். தடங்கலா எந்த வார்த்தையும் சொல்லாதே" அம்மா கத்தினாள்.

"அப்பா மனசு கஷ்டப்படறாரேம்மா... அது எனக்கு வேதனையாயிருக்கே..."

"அவரை யாரு துட்டு கேட்டது. எல்லாம் ஸ்ரீதரன் பார்த்துக்குவான்."

"ஸ்ரீதர் எவ்வளவுதாம்மா செய்யும்?"

"இன்னா பண்றது. அவனைத்தான் நம்பியாகணும். கடவுள் இருக்கார். சமயபுரத்தாள் இருக்கா. கைவிட மாட்டா. காசு இல்லைன்னு, உன் கல்யாணம் நிக்காது. குளிச்சுட்டு நடக்க வேண்டிய வேலையைப் பாருங்க" அம்மா விரட்டினாள்.

அவள் கவலையானது அவள் முகத்தில் தெரிந்தது. நடையில் தெரிந்தது. குழறிய பேச்சில் தெரிந்தது. ஸ்ரீதரனும் கவலையானான.

குளித்துவிட்டு சாமி கும்பிட்டான். தளம் அறுக்க உட்கார்ந்தான்.

இந்த ஒன்னரை கிலோவும் இன்றைக்குள் அறுத்து விட வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். உருளைக் கண்ணாடி போலிருந்த ஸின்தடிக் கட்டையை நிதானமாய் சிறு சிறு துண்டுகளாய் அறுத்துப் போட்டான்.

பிற்பகல் உணவுக்குப் பிறகு சிறிது நேரம் சுருண்டு தூங்கினான். மறுபடி எழுந்து தளம் அறுத்தான். இரவு

ஒன்பது மணிக்கு ஒன்றரை கிலோவும் துண்டு துண்டாய் வெட்டியாகி விட்டது. பிறகு அயர்ந்து தூங்கினான். விடிந்த பிறகு எழுந்து குளித்து விட்டு டிபன் சாப்பிட்டான். வீட்டில் எல்லார் முகத்திலும் கவலை இருந்தது. ஒன்னரை கிலோ வெட்டிய தளத்தோடு கோயிலுக்குப் போனான். மூட்டையை மடியில் வைத்துக் கொண்டு கண்மூடி உட்கார்ந்திருந்தான். நிறைய சம்பாதிக்க இந்த கடும் உழைப்பு உதவி செய்ய வேண்டும் என்று வேண்டினான். பலம் தர வேண்டினான்.

பெரிய கடை வீதியின் சந்தில் பகத்சிங்கிற்கு ஒரு கடை உண்டு. பட்டை தீட்டி பாலீஷ் செய்ய உள்ளே ஒரு அறையும், செயற்கை கமலங்கள் விற்க வெளியே ஷோ கேஸோடு ஒரு கடையும் உண்டு. பகத்சிங் கடையில் உட்கார்ந்திருந்தான்.

''என்ன இந்நேரம்?'' ஆச்சரியமாய் கேட்டான்.

''ஒன்றரை கிலோ.''

''ஒன்றரையா...? ஆளு வைச்சு அறுத்தீங்களா... நேத்து முழுக்க சித்ராவோட இருந்திருக்கிறீங்க... ஸ்ரீதர்...'' பகத்சிங் பாய்ந்து கைப்பிடித்துக் கொண்டான்.

''நேத்து ரொம்ப ஹெல்ப்பா இருந்திருக்கீங்க. நன்றி சொன்னா...''

ஸ்ரீதர் வெட்கப்பட பேச்சு மாற்றினான். ''எப்படிய்யா ஒரே நாள்ல ஒன்றரை கிலோ அறுத்த?''

''ஒரு வெறிதான்...''

''அக்கா கல்யாணத்துக்குக் காசு சேர்க்கணும்னா...? அறுத்துக் காசு சேர்க்க முடியுமா... நீ கேட்ட முப்பதாயிரம் தரேன். கவலைப்படாதே... ரொம்பவேலை செய்து உடம்பைக் கெடுத்துக்காதே...''

''எனக்கு முப்பதாயிரம் போதாது. அறுபதாயிரம் வேணும். எப்படி அடைக்கப் போறீங்கன்னு தயவு செய்து கேட்காதீங்க. நீங்க சொன்ன மாதிரி அறுத்து அடைக்க முடியாது. நான் வேறொரு வழி சொல்றேன்'' ஸ்ரீதரன் பேச்சை நிறுத்தித் தயங்கினான்.

பகத்சிங் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் உங்க தங்கச்சி சித்ராவ கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன். நகை வேணாம், வெள்ளி, பித்தளை பாத்திரம் வேணாம். வரதட்சணை வேணாம். வாண வேடிக்கை, தஞ்சாவூர் பந்தல், டியூப்லைட் போட்டு கல்யாணம் வேணாம். மாலை மாத்தி தாலி கட்டி ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்குவோம். நான் கல்யாணம் பண்ணிக்கிட்ட பிறகு எனக்கு அறுபதாயிரம் கொடுங்க. இது என்னா அடமானமா, வரதட்சணையான்னு கேள்வி கேக்காதீங்க. எனக்குத் தெரியாது. நம்ம மாதிரி குடும்பங்கள்ல கல்யாணத்துக்கு செலவழிக்கிறது ரொம்ப அதிகம். வாழ்நாள் பூரா சேத்த சொத்து ஒரே நாள்ல காணாமல் போயிடும். குறைஞ்ச பட்சம் என் கல்யாணமாவது காசு செலவு பண்ணாம நடக்கட்டும். எங்க அக்கா கல்யாணத்தைத் தவிர இனிமே இந்த காசு, ஆட்டம் போடற கல்யாணத்துக்கு நான் போக மாட்டேன். சிம்பிளா கல்யாணம் பண்ணிக்கிறாங்க பாருங்க, அவங்க வீட்டுக்குப் போய் வாழ்த்திட்டு வருவேன். என்னாடா இவ்வளவு தைரியமா பேசறானன்னு பாக்கறீங்களா. நேத்து தான் சித்ராகிட்ட மனசு விட்டு பேசினேன். சித்ரா என்னை...''

''சித்ரா எல்லாம் சொல்லிச்சு, எப்போ உங்க கல்யாணத்தை வைச்சுக்கலாம்?''

''என்னாங்க, உங்களுக்கு சம்மதம்தானா?''

''நான் புடிச்சிருக்குமான்னு சொல்லி அது லெட்டர் போட்டது. அது சந்தி சிரிச்சுப் போச்சு. இப்ப என் தங்கச்சியா வாய் திறந்து கேட்டிருக்கு. நான் ஏன் தடை சொல்லணும்?''

''என்னைய உங்களுக்குப் பிடிக்கலைங்களா?''

''எப்போ ஒரு முட்டாள் கூட்டத்திலிருந்து எழுந்து என் பின்னாடி வந்தீங்களோ அப்பவே உங்க மேல மதிப் பாயுடுச்சு. அக்கா கல்யாணத்துக்காக ஆடி, ஓடி அலை யுறீங்க பாருங்க, அது இன்னும் மதிப்பாயிடுச்சு. ஒரு பொண்ணை கூப்பிட்டுனு போய் பொறுப்பா ஆஸ்பத் திரியில சேர்த்து, கூடவே காவல் இருந்து கூட்டிட்டு வந் திருக்கீங்க பாருங்க, இது ரொம்ப சந்தோஷமாயிடுச்சி'' பகத்சிங் நிதானமாய் கண்களை மூடிக் கொண்டான்.

''நேத்து அந்த டாக்டர் வந்தாரு. நேரத்துக்கு வந்துட்டீங்கம்மா அதுனால புழைச்சீங்க, பிளட் பிரஷர், பல்ஸ் ரெண்டும் ரொம்ப வீக்கா இருந்தது. பாடி வீக்னஸ், மெண்டல் டென்ஷன் எல்லாம் உங்களை தொந் தரவு பண்ணிக்கிட்டு இருந்தது. வீட்டிலேயே இருந் திருந்தா கஷ்டமாயிட்டிருக்கும். தடக்குனு வெளியே வந்திட்டீங்கல்லை. அது காப்பாத்திடுச்சு. இனி வாழ்க் கைல ஸ்லீப்பிங் பில்ஸ் சாப்பிடாதீங்க உங்களுக்கு அது ஒத்துக்கலைன்னாரு ஸ்லீப்பிங் பில்ஸ் கொடுத்தது நான். நான் செய்தது எதுவும் சரியா வரலை. நீங்க சரியான நேரத்தில் சரியானத செய்திருக்கீங்க.

''நேத்து ஆஸ்பத்திரிக்கு வரலைன்னா செத்துப் போயிருப்பேனா டாக்டர் அப்படின்னு சித்ரா கேட்டது. பராலடிக் அட்டாக் வந்திருக்கும் வலது பக்கம், பாதிச் சிருக்கும். வயிறு புண்ணாகி ரத்தவாந்தி வந்திருக்கும். கிட்னி பாதிக்கப்பட்டிருக்கலாம். உடம்புக்கு நீரும் உப்பும் தேவைப்பட்ட போது கடைசி நேரத்துல கொடுத்துட்டோம் கொடுத்ததுனால ஆபத்து பத்தித் தெரியலை. கொடுக்காம போயிருந்தா எப்பேர்பட்ட ஆபத்துன்னு தெரிஞ்சிருக்கும். ஈட்டி வந்தது... கேடயத்தில் தடுத்துட்டோம். கேடயம் இல்லேன்னா ஈட்டி குத்தியிருக்கும். அப்படின்னாரு உன்னையும் அறியாம என் தங்கச்சியை நீ காப்பாத்திட்டே. உன்னைய புடிக்கலைன்னு நான் எப்படி சொல்வேன். ஒரு வாரமா பழகினவனை உயிருக்கு உயிரானவன்னு எப்படி சொல்வேன். இது விதி'' பகத்சிங் பெருமூச்செறிந்தான்.

''ஓடற தெக்கத்திக் காத்த தொட்டு கொல்லையில இருக்கிற மல்லிகைப்பூ மலர்ந்தாப் போல விதியினுடைய ஓட்டம் நம்ம எல்லோரையும் மலர வைக்குது.''

பகத்சிங் கல்லாவிலிருந்து செக் புத்தகத்தை எடுத்தான். பிரித்து எழுதினான்.

''இதுல அறுபதாயிரம் ரூபாய் எழுதியிருக்கேன், கிராஸ் பண்ணியிருக்கேன். பேங்க்ல அக்கவுண்ட் ஓப்பன் பண்ணு. அப்பா, அம்மாவுக்கு தைரியம் சொல்லி அக்காவுக்கு கல்யாணம் நடத்து. அப்புறம் நம்ம கல்யாணம் வைச்சுக்கலாம்.''

''இல்லைங்க. நானும், சித்ராவும் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கறோம். அதான் சரிவரும்.''

வாசலில் சத்தம் கேட்டது. சித்ரா ஒரு மொபட்டி லிருந்து கீழிறிங்கினாள். தேவதை போலிருந்தாள்.

''வாங்க. இதுதான் கடைக்கு முதத் தடவை வர்றிங்க இல்லை. முதமுத வந்தவங்களுக்கு என்னா கொடுக்கிறது. இருங்க அம்மா காலையில கொழுக்கட்டை பண்ணாங்க. இன்னவோ கோதுமை கொழுக்கட்டைன்னாங்க...'' பை திறந்து, டிபன் பாக்ஸ் திறந்து மூடியை அவன் எதிரே வைத்து மூன்று கொழுக்கட்டைகளை வைத்தாள்.

''என்னா இது செக்'' எட்டிப் பார்த்தாள்.

''அவங்க அக்கா கல்யாணத்துக்காக கொடுத்தேன். உன்னைய கல்யாணம் பண்ணிக்கினு இந்தக் காசை வாங்கிக்கிறேன்னாரு.''

''ஏன் தம்மேல அவ்வளவு நம்பிக்கையில்லையாமா?''

''எங்க நம்பிக்கை எங்களுக்குத் தெரியும். எதுனா ஒரு க்ஷணம் உங்க மனசில எனைப் பத்தி பயம் வந்ததுன்னா அது எனக்கு நல்லதில்லை. எங்க மாமா வீட்டில ரெண்டு நாள் சேர்ந்தாப்பல ரெண்டு நாள் தங்கிட்டாக்க, உங்களுக்கு பகீர்னும். அதனால இப்பவே சொல்லி வைச்சி பதினைஞ்சு நாளைக்குப் பிறகு ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணிக்கலாம். அப்புற மேட்டு இதை பேங்கல போட்டு...''

''அப்புறமேட்டு உங்கக்கா கல்யாண வேலையை கவனிப்பாங்களாக்கும்.'' சித்ரா கூர்மையாகப் பேசினாள்.

''உங்க பேர்ல எனக்கு நம்பிக்கை இருக்கு. போய் கல்யாண வேலையைப் பாருங்க.''

''ஒரு நல்ல நாள் பார்த்து செக் வாங்கிக்கிறனே... ஸ்ரீதரன் பேப்பரில் கை துடைக்க எழுந்தான்.

''இன்னைக்கு நல்ல நாள்தான். செக் எடுத்திட்டுப் போங்க.''

''வாணாங்க.''

''டக்குனு ரிஜிஸ்டர் மேரேஜ்னு சொன்னீங்கன்னா பயப்படுவாங்க உங்க அக்கா கல்யாணத்துல நான் புகுந்து புறப்பட்டுவரேன். அப்ப பேசி நம்ம கல்யாணம் முடிவு பண்ணுவோம்.''

''உங்களைப் பார்த்தா என் வீடு பயப்படுதுங்க.''

''அதுனால...?''

''நாம ரகசியமா கல்யாணம் பண்ணிக்கினு போய் நிக்கிறதுதான் பெட்டர்.''

''அப்புறமா நம்ம கல்யாணத்தை ஒத்துக் கலைன்னா ஜெயில்ல போட்டுடுவாங்க.''

''அப்போ உடனே நாம கல்யாணமும் பண்ணிக் கணும். அது ரகசியமாகவும் இருக்கணும் இல்லையா?''

''உங்களுக்கு எம்பேர்ல நம்பிக்கை வரணும். நாம மூணு பேரும் சேர்ந்து ரொம்ப பிரமாதமா ஸின்தடிக் ஜெம் தொழில் பண்ணணும். இதான் ஆசை. இதுல ஒருத்தருக்கு ஒருத்தர் சந்தேகம் வரவே கூடாதுன்றது தான் என் ஆசை. அறுபதாயிரம் ரூபாய் பெரிய காசுங்க. ஏமாந்துட்டமோன்னு நீங்க நினைக்கவே கூடாதுங்க. கல்யாணத்துக்குப் பிறகு நீங்க என்னை லட்சத்துக்கு, கோடிக்கு நம்பணும். ஸ்ரீதர் என் புருஷன்,

என் மச்சான் அப்படின்னு உங்களுக்கு ஒரு நம்பிக்கை வந்துட்டா அதுதான் எனக்கு பலம். யானை பலம். காசு வாங்குறம்மென்ற பயத்துல நான் சொல்லலை. உங்க கூட கைகோர்த்துக்கணுமென்ற ஆவல்ல சொல்றேன்.''

அவர்கள் இருவரும் அமைதியாய் இருந்தார்கள்.

''கொஞ்சம் இங்கனயே இருங்க'' சொல்லிவிட்டு பகத்சிங் கீழிறிங்கி ஓடினான். பத்தடி போய் விட்டு மீண்டும் ஓடி வந்தான்.

''சித்ரா கொஞ்சம் வா'' செக் புத்தகத்தையும் பேனாவையும் எடுத்துக்கொண்டான்.

''கொஞ்சம் கடையைப் பார்த்துக்கப்பா...'' ஸ்ரீதரனைப் பார்த்துக் கட்டளையிட்டான்.

அண்ணனும், தங்கையும் வர அரை மணி நேரமாயிற்று. போன் மணி ஒலிக்க பதில் சொல்லி பாலிஷ்ட் சிகப்பு சவுக்கை கிலோ எத்தனை விலை என்ற விசாரிப்பு வர, பதில் சொல்லி, சாம்பிராணித் தட்டு எடுத்து ஃபக்கீர் வர, கடை முழுவதும் புகை போடச் சொல்லி, பூக்காரி சாமந்தி தர, அதை சாமி படத்துக்கு மாட்டி சொந்த கடை போல ஸ்ரீதரன் உட்கார்ந்திருந்தான்.

அண்ணனும், தங்கையும் முகம் முழுக்க சிரிப்பாக வந்தார்கள். கடையின் அடுத்த அறைக்கு கூட்டிக் கொண்டு போனார்கள்.

''தாலி கட்டுங்க... மஞ்சள் சேர்த்த கயிறை நீட்டினார்கள்.

ஸ்ரீதரன் திகைத்தான், மெல்ல வாங்கிக் கொண்டான். ''இங்கியவா?'' என்றான். ''இப்பவே'' என்ற பதில் வந்தது. மலைக்கோட்டை மாணிக்க வினாயகர் படத்தின் முன்பு தாலியை வைத்தான். விழுந்து கும்பிட்டான். கையிலெடுத்துக் கிழக்கு நோக்கி திரும்பினான். சித்ரா அவன் எதிரே நின்றாள்.

அவன் நிதானமாய் தாலி கட்டினான். மூன்று முடிச்சுகளைப் போட்டான். பகத்சிங் இரண்டு பெட்டிகளை எடுத்து அதிலிருந்து இரண்டு கல் மோதிரங்கள் எடுத்தான். ஒன்று பச்சைக்கல், மற்றொன்று சிகப்புக்கல் ஒன்று சவுக்கை. ஒன்று பாதாமி. அந்த கமலங்கள் டாலடித்தன. தங்கம் பளபளத்தது.

அவர்கள் மோதிரம் மாற்றிக் கொண்டார்கள்.

''ஒரு நூறு ரூபாய் கொடுங்க'' சித்ரா கேட்டாள். ஸ்ரீதரன் கொடுத்தான். அவள் காசு வாங்கிக் கொண்டு கை நீட்டி இரண்டு மெட்டிகளை கொடுத்தாள்.

''இது உங்க பிரஸன்டேஷன்.''

''பத்து கிலோ தளம் உள்ள மூட்டையில் கால் வைத்தாள். கறுங்கல்லை விட உறுதியான தளத்தில் வைக்கப்பட்ட சித்ராவின் காலைப் பிடித்து ஸ்ரீதரன் மெட்டி மாட்டினான்.

சாம்பிராணி வாசனை அவர்களைச் சூழ்ந்து கொண்டது. மெல்ல உரசிவிட்டு பெரிய கடை சந்துகளில் பரவியது.

''கோயிலுக்குப் பேர்லாம் வாங்க'' அவள் கழுத்தை போர்த்திக்கொண்டு நடந்தாள். அவன் அறுபதாயிரம்

ரூபாய் செக்கை மடித்து பாக்கட்டில் வைத்துக் கொண்டான்.

''கோவிலுக்குப் போயிட்டு வறப்ப கொஞ்சம் பித்தளை பாத்திரம் எவர்சில்வர் விலை கேட்கணும் ''

''யாருக்கு, ரேவதிக்கா?'' அவள் கேட்டாள்.

''நமக்கும்தான்'' அவன் பதில் சொன்னான்.

''அடி ஆத்தாடி இளம் மனசொன்னு...'' ஏதோ ஒரு கல்யாணச் சத்திரத்திலிருந்து அவர்களைத் தொட்டு விட்டுப் போயிற்று.

''நீங்க ரொம்ப நல்லா பாடுவீங்களாமே...'' அவள் ஆவலோடு கேட்டாள்.

அவன் மனசு, புத்தி, முகம், உடல், உயிர் எல்லாம் மலர்ந்தது.

**முற்றும்**

❋ ❋ ❋ ❋ ❋


பணம்
காய்ச்சி
மரம்
பாலகுமாரன்